**தலைப்பு 111- சுகாதார அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகாதாரஅமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதாரஅமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், **2018** இன் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் **38** பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

**2018** இன் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் **16(1)** பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் **38(1)(இ)** உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருன்மையான தனமையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(அ) முதல் (ஐ) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தொடர்பாக சென்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றுகை கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றுகை கூற்று பிரகாரம் திறைசேரி கட்டுநிதி ரூபா 157,927.90 மில்லியனானதுடன் ஏசீஏ 3 படிவம் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 157,888.21 மில்லியனானதில் ரூபா 39.69 மில்லியனான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | இத் தவறு எதிர்காலத்தில் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்து கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (ஆ) | தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் செலவுகள் முறையே ரூபா 2,103.56 மில்லியன் மற்றும் ரூபா 452.26 மில்லியனானதுடன் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் அமைச்சிற்கு அனுப்பிய அமைச்சினாளும் உறுதி செய்யப்பட்ட அறிக்கை பிரகாரம் அச் செலவினம் முறையே ரூபா 2,375.27 மற்றும் ரூபா 1,180.97 மில்லியனானது. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் திறைசேரி செயற்பாட்டு திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் அனுப்பியுள்ள அறிக்கைகயில் காட்டப்படும் செலவினம், அமைச்சு மற்றும் கருத்திட்ட அறிக்கையுடன் ஒப்பிட்டு உறுதி செய்து கொள்ளுமாறு குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக. | இவ் வித்தியாசங்களிற்கு காரணமான விடயங்களை இனங்கண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 170(3) பிரகாரம் கொடுப்பனவு செய்த தொகைகளிலிருந்து ஆண்டினுள் அறவிடப்படும் தொகையை மாத்திரம் குறித்த செலவின | கோரப்பட்ட புதிய வருமான தலைப்பை பொது திறைசேரியின் 2022.11.10 திகதிய மற்றும் **FP/R**/100/05/2020 இலக்கம் | நிதிப்பிரமாணம் 170(3) பிரகாரம் கொடுப்பனவு செய்த நிதியிலிருந்து ஆண்டினுள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு மிகை அறவீடு செய்ய வேண்டிய போதும் அதற்கு இணங்காதவாறு மீளாய்வாண்டினுள் 1204 கொண்ட ''மருத்துவ வழங்கல்'' செலவு விடயத்திற்கு ரூபா 2,007.02 மில்லியன் மிகை அறவீடு செய்த காரணத்தால் அச் செலவின விடயத்தில் உள்ளவாறான செலவு அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டது. | கொண்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2023 சனவரி மாதம் முதல் மருத்துவ வழங்கலிற்காக கிடைக்கும் தொகையை அக் கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக. | அறவிடப்படும் நிதி மாத்திரம் குறித்த மிகை அறவீட்டு கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 170(3) பிரகாரம் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 665.74 மில்லியன் மருத்துவ வழங்கல் செலவு விடயத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஏனைய அரச நிறுவனங்களிற்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் 33 நிறுவனங்களிற்கு கடன் அடிப்படையில் விநியோகித்திருந்த மருத்துவ வழங்கல்களிற்காக 2022 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய ரூபா 7,931.87 மில்லியனை அறவிட போதிய முயற்சிகள் எடுத்திருக்கவில்லை. | கோரப்பட்ட புதிய வருமான தலைப்பை பொது திறைசேரியின் **2022.11.10** திகதிய மற்றும் **FP/R/100/05/2020** இலக்கம் கொண்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் **2023** சனவரி மாதம் முதல் மருத்துவ வழங்கலிற்காக கிடைக்கும் தொகையை அக் கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக. | ஏனைய அரச நிறுவனங்களிற்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் வெளி நிறுவனங்களிற்கு இலாப எல்லையொன்றுடன் வழங்கப்படும் மருத்துவ வழங்கல்களிற்கு கிடைக்கும் தொகையை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும். |

### 1.6.2 ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **2018** ஆண்டில் நிதியல்லா சொத்துக்களின் கிரயம் ரூபா **46,940.73** மில்லியனினால் குறைத்து காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா **7,102.99** மில்லியன் 2019 ஆண்டில் புதிதாக காணி சுவீகரிப்பு என காட்டப்பட்டிருந்தது. | 2021 மற்றும் 2022 **CIGAS** மற்றும் திறைசேரி அச்சுக் கூற்றுக்களில் எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சினைகளின் முன் இந்த சீராக்கத்தை மேற்கொள்ள முடியாதென, அந் நிலைமையை சரிசெய்ய அரச கணக்குகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ள வேண்டுமென. | இத்தவறை சீராக்கி 2023 ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | **2018** ஆண்டில் மூலதன சொத்துக்கள் கைபற்றல் ரூபா **14,793.13** மில்லியனினால் குறைத்து காட்டப்பட்டிருந்ததால் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | **2019** திசெம்பர் **31** திகதியன்று மூலதன சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | திறைசேரி நிதிக்கூற்று பிரகாரம் 2019 ஆண்டினுள் சுவீகரித்துக் கொண்டிருந்த கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா **6,501.94** தொகை நிதியல்லா சொத்து தொடர்பான கூற்றில் உள்ளடக்கியிருக்காததுடன் 2019 ஆண்டினுள் சுவீகரித்துக் கொண்டிருந்த சொத்துக்களின் கிரயம் ரூபா **2,967.27** மில்லியன் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் **2019** திசெம்பர் **31** திகதியன்று நிதியல்லா சொத்துக்கள் அப் பெறுமானத்தால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | திறைசேரியினால் பேணிச் செல்லும் எஸ்ஏ **80** நிதியல்லா சொத்துக் கணக்கு மாதாந்த பொழிப்பி மற்றும் எஸ்ஏ **82** திரண்ட நிதியல்லா சொத்துக் கணக்கு அறிக்கை பிரகாரம் 2020 திசெம்பர் 31 திகதியன்று நிதியல்லா சொத்துக்களின் கிரயத்தில் காணப்பட்ட ரூபா 19,789.44 ஆன வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சீராக்கத்தை மேற்கொண்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் சுகாதார அமைச்சின் **CIGAS** கணக்குகளில் சரியான தன்மையை பேணிச் செல்ல வழங்கப்படும் உதவியின் மீது கூடிய விரைவில் இந் நிலைமை தொடர்பாக சீராக்கம் மற்றும் தெளிவுபடுத்தலை சமர்ப்பிப்பதாக, இந்த மீதி **2022** கணக்குகளிலும் எடுத்துக்காட்டப்படுவதாக **2023** மார்ச் **31** திகதிய கடிதம் மூலம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் பணிப்பாளர் நாயகம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சீராக்கத்தை மேற்கொண்டு 2023 ஆண்டிற்காக சரியான நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | **2021** திசெம்பர் **31** திகதியன்று நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் **2021** சனவரி **01** திகதியன்று ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா **192,229.15** மில்லியன் ஆன போதும், திறைசேரியினால் பேணியிருந்த நிதியல்லா சொத்துக் கணக்கு மாதாந்த பொழிப்பில் (**SA 80**) மற்றும் திரண்ட நிதியல்லா சொத்துக் கணக்கு அறிக்கையின் | அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் உதவியின் மீது இந் நிலைமையை தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாவதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | (**SA 82**) பிரகாரம் அப் பெறுமானம் முறையே ரூபா **172,439.71** மில்லியன் மற்றும் **184,327.77** மில்லியன் தொகையானதில் நிலவிய முறையே ரூபா **19,789.44** மில்லியன் மற்றும் ரூபா **7,901.38** மில்லியன் வித்தியாசங்களிற்கு காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஊ) | 2021 ஆண்டின் நிகழ்சித் திட்டம் பிரகாரம் செலவினக் கூற்று (**ACA 2(i)** படிவம்) மற்றும் திறைசேரியினால் பேணியிருந்த மாதாந்த செலவின பொழிப்பு (**SA** 10) பிரகாரம், மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் திறைசேரியினால் பேணியிருந்த திரண்ட நிதியல்லா சொத்துக் கணக்கு அறிக்கை (**SA** 82) பிரகாரம் அப் பெறுமானத்திற்கு இடையிலான ரூபா 16,877.89 மில்லியன் வித்தியாசத்திற்கு காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | இந் நிலைமை **2022** ஆண்டிற்காக காணப்படும் கணக்குகளிலும் காணப்படுவதாக, இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் **2023** மார்ச் **31** திகதிய கடிதம் மூலம் பணிப்பாளர் நாயகம் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக, இந் நிலைமையை தீர்மானித்துக் கொள்ள முடியுமான உச்சத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (எ) | 2020 ஆண்டில் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்பு மற்றும் தனிநபர்களினால் அமைச்சிற்கு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலை நிறுவனம் மற்றும் பல பிரிவிகளிற்கு நிதியல்லா உதவி அல்லது அன்பளிப்பாக பெறுமதி ரூபா 1,339.25 மில்லியனான பண்டங்கள் உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களும் பெறுமதி தெரியாத பண்டங்கள் மற்றும் உபகரணங்களின் 2,444 அலகுகள் வழங்கப்பட்டிருந்தமை உறுதியான போதும் அவற்றின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. | அநேகமான உதவிகள் அன்பளிப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்கீடு செய்யப்படாத பண்டங்களை குறிப்பாக இனங்கண்டு **2023** கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கணக்கீடு செய்யப்படாத அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்து 2023 ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஏ) | 2010 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் அமைச்சினால் செயற்படுத்தியிருந்த 54 வெளிநாட்டுதவி கருத்திடங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,603.09 மில்லியன் செலவினுள் நிதியல்லா சொத்துக்கள் கைபற்றல் மற்றும் | குறித்த காலப் பகுதியினுள் செயற்படுத்திய கருத்திட்டங்களினால் கைப்பற்றிய நிதியல்லா சொத்துக்களை அக்காலப் பகுதியினுள் பல நிறுவனங்களிற்கு முறையாக | கருத்திட்டத்தின் கீழ் கைப்பற்றிய அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்ததனை உறுதி செய்யும் ஆவண ரீதியான சான்றுகள் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, **CIGAS** நிகழ்சித் திட்டத்தினுள் ஆரம்ப மீதியாக அவ்வாறான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுவதாக. | விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஐ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதி நிலைமை மீதான கூற்றின் பிரகாரம் மற்றும் திறைசேரி திரண்ட நிதியல்லா சொத்துக்கள் கணக்கறிக்கை (**SA 82**) பிரகாரம் அத்திகதியன்று நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி மற்றும் 2022 ஆண்டின் திறைசேரி திரண்ட நிதியல்லா கணக்கறிக்கை (**SA 82**) பிரகாரம் 2022 சனவரி 01 திகதியன்று அப் பெறுமதிக்கிடையில் ரூபா 5,244.56 மில்லியனான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வித்தியாசத்திற்கான காரணத்தை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை. | இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் 2023 மார்ச் 31 திகதிய கடித்தால் பணிப்பாளர் நாயகம் கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதுடன் குறித்த தெளிவுபடுத்தல் கிடைத்த பின்னர் தங்களுக்கு அனுப்புவதாக. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான செம்மையாக்களை செய்து 2023 ஆண்டிற்காக சரியான நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஒ) | 2022 ஆண்டின் நிகழ்சித் திட்டம் பிரகாரம் செலவினக் கூற்று (**ACA 2(i)** படிவம்) மற்றும் திறைசேரியினால் அச்சுக் குறிப்பு **SA** 10 பிரகாரம், 2022 ஆண்டில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் திறைசேரியின் திரண்ட நிதியல்லா சொத்துக் கணக்கு அறிக்கை (**SA** 82) பிரகாரம் அப்பெறுமதிக்கிடையில் ரூபா 11,423.16 மில்லியனான வித்தியாசம் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | கொவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதாரத் தொகுதி ஆயத்தப்படுத்தும் கருத்திட்டத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 6,326.05 மில்லியனான நிதியல்லா சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களின் கிரயத்தை அமைச்சின் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக. | கருத்திட்டத்தின் கீழ் கைப்பற்றிய அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்ததனை உறுதி செய்யும் ஆவண ரீதியான சான்றுகள் விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் மற்றும் அதற்கு சொந்தமான 59 நிறுவனங்களின் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் காட்டப்படும் கணனி மென் பிரதி பிரகாரம் வைத்திசாலை/ 25 நிறுவனங்களின் காணிகள் போன்று வைத்திசாலை / 05 நிறுவனங்களின் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | விரைவில் இச் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு உரிமை ஒப்படைக்கப்பட்ட இரண்டு வாகனங்களின் கிரயம் ரூபா 11,550,000 தொகையை 2022 திசெம்பர் 31 திகதி சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | இத் தவறை சீராக்கி கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும். |
| (கா) | கணக்காய்வினால் கோரிய தகவல்களை சில நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கீழ் காணப்படும் வைத்தியசாலைகள், ஏனைய சுகாதார நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 11 பிரிவுகளின் 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 2.66 மில்லியன் கிரயமான பண்டங்கள் மற்றும் பதுள்ளை மாகாண பொது வைத்தியசாலைக்கு உரிய கிரயம் குறிப்பிடப்படாத பண்டங்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த பராதீனம் செய்யப்பட்ட பண்டங்களின் கிரயத்தை அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டதா என கணக்காய்விற்கு உறுதி செய்யப்படவில்லை. அவ்வாறே சில வைத்தியசாலைகளில் பராதீன நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்காத சந்தர்ப்பங்களும், நியமிக்கப்பட்ட பராதீன | தற்போது 43 நிறுவனங்களிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய தகவல்களையும் விரைவில் வழங்குமாறு அனைத்து நிறுவனங்களையும் அறிவூட்டியுள்ளதாக, வருடாந்த பண்டக கணிப்பீட்டை நடாத்துவது, பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல், கணக்கீடு செய்தல் சரியான ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதுடன் பழுதடைந்த பொருட்களை பராதீனம் செய்தலை முறையாக மேற்கொள்வதாக. | கணக்காய்வினால் கோரியுள்ள தகவல்களை அனைத்து நிறுவனங்களினாலும் பெற்றுத்தர வேண்டியதுடன் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களிற்குரிய சரியான செம்மையாக்கல்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொணள்ள வேண்டும். அவ்வாறே கணிப்பீட்டுச் சபை அறிக்கை கிடைத்த பின்னர் வித்தியாசம், பற்றாக்குறை மற்றும் காணாமல் போதல் ஏதேனும் இருப்பின் நிதிப்பிரமாணம் 757(2) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுவினால் குறித்த பராதீன செயற்பாட்டை பூர்த்தி செய்திருக்காத சந்தர்ப்பங்களும் வருடாந்த பண்டக கணிப்பீட்டிற்குரிய பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (கி) | நிறுவன / வைத்தியசாலை மற்றும் 31 பிரிவுகளிற்கு 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 2,588.30 மில்லின் பெறுமதியான பண்டங்கள் மற்றும் நிறுவன / வைத்தியசாலை மற்றும் 30 பிரிவுகளிற்கு கிடைத்திருந்த பெறுமதி தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படாத 2057 சந்தர்ப்பங்களிற்குரிய பண்டங்கள் முறையாக ஆவணப்படுத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்களிற்கு உள்ளடக்கியதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | அனைத்து அன்பளிப்புக்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | அனைத்து அன்பளிப்புக்களையும் முறையாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வு சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 202,170.77 மில்லியன் மொத்த கிரயமான பல்வேறு சொத்துக்களும் ரூபா 119.75 மில்லியனான பல்வேறு செலவுகளும் தொடர்பாக முறையே விபரமான அட்டவணைகள் மற்றும் பல்வேறு தகவல்கள், பற்றுச் சீட்டுக்கள், கொடுப்பனவு வவுசர்கள் மற்றும் உரிய எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததனால் அப்பெறுமதிகளை திருப்பதிகரமாக ஒப்பாய்வு செய்வதற்கும் சான்றுறுதி செய்வதற்கும் முடியாதிருந்தது. அமைச்சிற்கு சொந்தமான வாகன பயன்பாடு தொடர்பான செயலாற்றல் மதிப்பீட்டிற்கு தேவையான 2021 மற்றும் 2022 ஆம் ஆடுகளிற்கான தகவல்களும் | இந்த **SA** 82 கூற்றில் குறிப்பிடப்பட்ட தகவல்களை மாதாந்தம் பரிசோதிக்க சுகாதார அமைச்சிற்கு வசதிகளை அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கியில்லை என, இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் 2023 மார்ச் 31 திகதி கடிதத்தின் மூலம் பணிப்பாளர் நாயகம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு மீண்டும் அறிவித்துள்ளதுடன் குறித்த தெளிவுபடுத்தல் கிடைத்த பின்னர் இது | இத் தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 42 (அ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் கோரியுள்ள தகவல்கள் மற்றும் ஏனைய சான்றுகளை வழங்காத ஒவ்வொரு நபரும் தவறை செய்தவராக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அதற்கு மேலதிகமாக பல காரணங்கள் தொடர்பாக 31 தகவல்கள் அழைப்பிதல் கடிதங்கள் மூலம் அழைப்பிக்கப்பட்ட கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் 2023 ஏப்ரல் 10 திகதி வரையும் சமரப்பிக்கப்படாமை அல்லது பூரண தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை அல்லது காரணமாக குறித்த துறையை உரியவாறு கணக்காய்வு செய்ய முடியவில்லை. சில தகவல்கள் அழைபித்தல் கடிதம் விநியோகித்து 19 மாதங்களை விட அதிக காலம் கடந்திருந்தது. மேலும் சேவையை கைவிட்டுச் செல்லும் கட்டளைகள் வழங்கப்பட்ட 95 மருத்துவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 81.91 மில்லியனை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள், 690 மருத்துவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியிருந்த பணம் தொடர்பான தகவல்கள், சேவையை கைவிட்டுச் செல்லும் கட்டளை வழங்கப்பட்டிருந்த குறைநிரப்பு மற்றும் உப மருத்துவ சேவைகளின் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2.47 மில்லியனை அறவீடு செய்வதற்குரிய தகவல்கள் மற்றும் இன்னும் 576 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பான தகவல்களும் தாதிகள், குறைநிரப்பு உப வ-வைத்தியர்கள் மற்றும் ஏனைய சேவைகளின் ஓய்வுபெற்ற அலுவலர்கள் 124 பேர்கள் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் 03 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் ஆட்சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்த படிகளின் சரியான தன்மையை கணக்காய்விற்கு உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகள், ‘‘வெளிநாடு சென்ற வைத்தியர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாததால் அரசிற்கு தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்க முடியுமென, இது CIGAS நிகழ்சித் திட்டத்தால் பெற்றுக் கொள்ளும் அறிக்கை ஒன்றாவதுடன் அவ் அறிக்கையால் சொத்துக்களுக்குரிய உங்களால் கோரியுள்ள தகவல்கள் உருவாகுவதில்லையென, வாகனங்கள் தொடர்பான தகவல்களை விரைவில் பெற்றுத் தருமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக, ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் ஆட்சேர்த்து செலுத்திய படிகள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்காத நிறுவனங்களின் தகவல்களை பின்னர் சமர்ப்பிப்பதாக, சேவையை கைவிட்டுச் செல்தும் கட்டளைகள் வழங்கப்பட்டு இருந்த அலுவலர்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த பிரிவுகளிற்கு இடையில் உரிய ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக, தகவல்களை அழைப்பிக்க குறித்த தகவல்கள் சுகாதார அமைச்சிற்கு சொந்தமான அனைத்து வைத்திசாலைகள் மற்றும் நிறுவனங்கிலிருந்து மற்றும் குறித்த பிரிவுகளிலிருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பிக்க வேண்டியதால் அலுவலர்களை தொடர்ந்து அறிவூட்டி விரைவில் கணக்காய்விற்கு அனைத்து தகவல்களையும் பெற்றுத் தருவதாக.

ஏற்பட்ட நட்டம் - 2016 ஆண்டு" தலைப்பில் அனுப்பப்பட்டு 2017 செப்டம்பர் 14 திகதிய ஐயவினாவில் உள்ளடங்கிய விடயங்கள் தொடர்பாக அமைச்சின் சட்டப் பிரிவு மற்றும் அரச கணக்காய்வுப் பிரவினால் மேற்கொள்ளப்பட்ட 06 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த, நடைமுறைப்படுத்த முடியாதெனில் அதற்கான காரணங்களை காண்பிக்க அல்லது இந்த ஆபத்தை குறைத்துக் கொள்ள உத்தேசங்களை முன்வைக்குமாறு 2017 ஒக்டோபர் 12 திகதி கடிதம் மூலம் மேலதிக செயலாளர் (வைத்திய சேவைகள்) இற்கு அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் அவர் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் 2016 திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டியிருந்த ரூபா 58.36 மில்லியனான தொகையை அறவிடுவதற்குரிய நிகழ்கால முன்னேற்றம் தொடர்பான தகவல்கள், 2019 ஒக்டோபர் 22 திகதிய கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் பயிற்சியை விட்டுச் சென்ற 861 தாதி மாணவ மாணவியர்களிடம் இருந்து அறவிட வேண்டியிருந்த பணத்தை அறவிடும் நிகழ்கால முன்னேற்றம் மற்றும் 2018 முதல் 2021 வரையான காலத்தினுள் பயிற்சியை விட்டுச் சென்ற தாதி மாணவ மாணவர்கள் தொடர்பாக கோரப்பட்ட தகவல்கள், 2023 ஏப்ரல் 10 திகதி வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையானவாறு குறித்த கால எல்லையினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு | தொடர்ந்தும் ஓராண்டைவிட அதிக 12 கணக்காய்வு ஐயவினாக்களிற்காக பதில் வழங்க வேண்டியதுடன், எதிர்காலத்தில் விரைவில் அந்த கணக்காய்வு | அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் உரிய காலத்தினுள் பதில் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்த வேண்டிய போதும், 2023 ஜுன் 20 திகதியளவிலும் பதில் கிடைக்காத மொத்த கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 71 ஆனது. | ஐயவினாக்களிற்காக பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான 1997 ஆண்டு முதல் தீர்க்கப்படாத ரூபா 362,702 ஆன கட்டுநிதி மீதியை மீளாய்வாண்டிலும் தீர்த்திருக்கவில்லை. | சுகாதார செயலாளரினால் நியமித்த குழுவினால் வழங்கிய பரிந்துரை பிரகாரம் விரைவில் அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளரிற்கு அறிவித்துள்ளதாக. | இக் கட்டுநிதி மீதியை விரைவில் தீர்க்க நடவடிககை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்தவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம், சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என பின்வரும் அவதானிப்புன்களின் பிரகாரம் உறுதியானது. | | |
| (அ) செலவின விடயங்கள் **82** இற்காக ஒதுக்கப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 7,981.9 மில்லியனான தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 6,176.7 மில்லினான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. சேமிப்பு மொத்த தேறிய ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தை கொண்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றிக்கை இலக்கம் 03/2022 இன் 2 மற்றும் 3 பந்தி ஊடாக செலவுகளை கடுமையாக கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளதாக, அதன் பிரகாரம் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் அத்தியவசிய செய்பாடுகளிற்காக மாத்திரம் கட்டுநிதி வழங்கப்படுவதாக. | நிதிப்பிரமாணம் **50** இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம், சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 இன் திருத்திய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ஏற்பாடு ஒதுக்காத போதும், 4 மூலதன செலிவன விடயங்களிற்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 421.6 மில்லியன் ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டிருந்ததுடன் இவ்வாறு ஒதுக்கிக் கொண்ட மேலதிக ஏற்பாடுகளில் ரூபா 399.7 மில்லியன் சேமிப்பாக இருந்தது. அந்த சேமிப்புக்களின் சதவீதம் மேலதிக ஏற்பாட்டின் 84 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) மூலதன செலவின விடயங்கள் 2 இற்காக குறைநிரப்பு மதிபபீடு மற்றும் நிதிப்பிரமாணம் 66 மூலம் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 910 மில்லியனான மேலதிக ஏற்பாடு மழுமையாக மற்றும் ஆரம்ப மதிப்பீட்டிலிருந்தும் சில பகுதி சேமிப்பாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் செயற்பாட்டு வேலைத் திட்டத்திற்கு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குரியதாக 2022 திசெம்பர் 31 திகதியன்று கடப்பாட்டு மீதி முறையே ரூபா 1,405.45 மில்லியன் மற்றும் ரூபா 2,027.43 மில்லியனாக கூட்டுத்தொகை ரூபா 3,432.88 மில்லினானதுடன் பொறுப்பு மீதிகள் முறையே ரூபா 6,653.94 மில்லியன் மற்றும் ரூபா 21,051.10 மில்லியனாக கூட்டுத்தொகை ரூபா 27,705.04 மில்லியனானது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இற்கு இணங்காதவாறு 2022 நிதிக்கூற்றுக்களில் கடப்பாடு | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க குறித்த நிறுவனங்களை | அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொறுக்கள் பற்றிய கூற்றில் செயற்பாட்டு வேலைத் திட்டதிற்குரியதாக ரூபா 4.03 மில்லினான ஆண்டிறுதி கடப்பாட்டு மீதியையே ஆண்டிறுதி ஆண்டிறுதி பொறுப்பு மீதியாக காட்டப்பட்டிருந்தது. | அறிவூட்ட நடவடிக்கை எடுப்பதாக. | எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94 (i) இற்கு இணங்காதவாறு அமைச்சிற்குரிய நிறுவனங்களால் கூட்டுத் தொகை ரூபா 3,591.58 மில்லியனான ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | பொது திறைசேரியினால் கடந்த ஆண்டு செலவின் அடிப்படையில் மாத்திரம் ஏற்பாட்டை அங்கீகரித்துள்ளதாக, ஒதுக்கிய ஏற்பாட்டிற்கு போதிய கட்டுநிதி வழங்கப்படுமாயின் வைத்தியசாலை தொகுதியினுள் பாரியளவு பொறுப்புக்கள் ஆண்டிறுதியல் எஞ்சுவதில்லையென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது திறைசேரி அங்காரமின்றி ரூபா 26,763.57 மில்லியான பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | இதன் பின்னர் அங்கீகார எல்லையை விஞ்சி பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமென வைத்திசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களை அறிவூட்டியுள்ளதாக. | திறைசேரி அங்காரமின்றி பொறுப்புக்களிற்கு உட்படக் கூடாது. |
| (ஈ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பணம் மற்றும் அந்த இரண்டு நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் வைத்திய வழங்கல் பிரிவிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்திற்கு இடையிலான முறையே ரூபா 48,359.49 மில்லியன் மற்றும் ரூபா 1,142.47 மில்லியனான வித்தியாசத்திற்கு காரணத்தை இனங்கண்டு கணக்கை சீராக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வித்தியாசம் 2008 ஆண்டிலிருந்து நிலவுவதால் அதனை சீராக்குவதற்காக 2 நிறுவனங்களிற்கு இடையில் கணக்கிணக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மற்றும் 2023 ஆண்டு முதல் கணக்காண்டு முடிவடையும் போது சரியான பொறுப்புக்களை இனங்காண இயலுமை காணப்படுவதாக. | இவ் வித்தியாசததிற்கான காரணத்தை இனங்கண்டு கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

### 2.4.1 நிமித்த உப கட்டுநிதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையினால் திருத்தி நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம், பணி முடிவடைந்து 10 நாட்களிற்குள் பெற்றுக் கொண்ட உப கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் 229 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 7.88 மில்லியனான நிமித்த உப கட்டுநிதியை குறித்த பணி முடிவடைந்து 01 மாதத்திற்கும் 05 மாதங்களிற்கும் இடையிலான வீச்சளவு தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | அந்த அந்த பிரிவுகளில் காணப்படும் மனிதவள பற்றாக்குறை, தொடர்ச்சியாக வேலைத் திட்டங்களை நடாத்திச் செல்லல், கொழும்பிலிருந்து தூரப் பிரதேசங்களில் வேலைத் திட்ட தொகுதியாக வேலைத் திட்டங்களை நடாத்திச் செல்லல் மற்றும் கடந்த ஆண்டு இடம்பெற்ற தொற்று நிலைமையும் இந்த தாமதத்திற்கு காரணமானதாக மற்றும் இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறையை மேலும் முறையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிமித்த உப கட்டுநிதியை பணி முடிவடைந்தவுடனே தீர்க்க வேண்டும். |

### 2.4.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அரச அமைச்சு/ திணைக்களங்களிற்கு இடம் மாறிச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 72.95 மில்லியனான கடன்படுனர் மீதி தொடர்பாக 2004 ஒக்டோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் தாபன விதிக்கோவை **xxiv** அத்தியாயத்தின் 1:6 மற்றும்1:7 ஆகிய பிரிவுகளிற்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த கடன்படுனர் மீதிகளிற்கிடையில் ரூபா 45.15 மில்லியனான | குறித்த அலுவலர்கள் இடமாறிச் சென்ற இடங்கள் தொடர்பான சரியான தகவல்களை அறிந்து கொள்வதன் கடினம், கடன் மீதிகள் இணங்காமை ஆகிய காரணங்களால் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு இதுவரை முடியாதுள்ளதாக, இடமாறிச் சென்ற இடங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை மேலும் மேற்கொண்டு வருவதாக, இடமாறிச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அலுவலர் இடமாறிச் சென்று **03** மாதங்களினுள் கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்படுனர் மீதி 5 ஆண்டுகளை விஞ்சி பழமையானதுடன் அது மொத்த கடன்படுனர் மீதியின் 62 சதவீதம் அளவானது. எஞ்சிய கடன்படனர் மீதிகளின் ரூபா 21.98 மில்லியனான கடன்படுனர் மீதி 03 மாதங்களை விஞ்சிய கடன்படுனர் மீதிகளானது. அதன் பிரகாரம் மொத்த கடன்படுனர் மீதியில் ரூபா 67.13 மில்லியன் அல்லது 92 சதவீதமானவை அலுவலர்களின் கவனயீனத்தினால் ஏற்பட்ட கடன்படுனர் மீதியென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அலுவலர்களின் கடன் மீதிகளை சுவீகரித்தல் உரியவாறு இடம்பெறாத காரணத்தால் பழைய கடன் மீதி உறுதி செய்து கொள்ளும் பிரச்சினை இந் நிலுவை கடன் மீதிகளை அறவிடல் மற்றும் தீர்த்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதன் பிரச்சினையொன்றாக ஆகியுள்ளதாக, அனைத்து கணக்காளர்களையும் அறிவூட்டுவதனூடாக நீண்ட கால கடன் மீதிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் ஆண்டுகளின் போது இந்த கடன் மீதிகளை முடியுமான அளவு குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஆ) | அட்டவணை இலக்கம் 3.3 இல் காட்டப்படும் ரூபா 2.43 மில்லியனான 29 கடன்படுனர் மீதிகளிற்குரிய அலுவலர்கள் இடமாறிச் சென்ற சேவை நிலையங்கள் குறிப்பிடப்பட்டு இருக்காததால் கடன்படுனர் மீதிகளின் சரியானதன்மை கணக்காய்வின் போது உறுதியாக வில்லை. | இக் கடன் மீதிகள் முற்பண பீ கணக்கில் காணப்படும் பழைய கடன் மீதிகளாவதுடன் இடமாறிச் சென்ற நிறுவனங்கள் தொடர்பாக விரைவில் கண்டறிந்து தீர்க்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | இத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | அட்டவணை இலக்கம் 3.3 இல் காட்டப்படும் ரூபா 2.23 மில்லியனான 69 கடன்படுனர் மீதிகளிற்குரிய அலுவலர்கள் இடமாறிச் சென்ற மாகாண சபை நிறுவனங்கள் எதுவென குறிப்பாக இனங்கண்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிறுதி கணக்குகளை இணக்கம் செய்யும் போது அனைத்து தகவல்களையும் உள்ளடக்க முடியாது போயுள்ளதுடன் 2023 ஆண்டிறுதி கணக்குகளை இணக்கம் செய்யும் போது அனைத்து தகவல்களையும் சமர்ப்பிக்க முயற்சிப்பதாக. | - மேற்படி - |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 13.08 மில்லியனான கடன்படுனர் மீதி சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களிற்கு இடம் மாறிச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட | இக் கடன் மீதிகள் 5 ஆண்டுகளையும் மற்றும் 10 ஆண்டுகளையும் விட பழைய கடன் மீதிகளாவதுடன் பல காரணங்களால் இக் கடன் மீதிகளை தீர்க்க இதுவரை இயலுமை கிடைக்கவில்லை. இக் | இந் நிலைமைக்கு காரணமான விடயங்களை இனங்கண்டு குறித்த செம்மையாக்கங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கடன்படுனர் மீதியானது. ஒரே செலவின தலைப்பினுள் காணப்படும் நிறுவனங்களிற்கு இடையில் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் இருக்க முடியாத போதும் 2022 திசெம்பர் 31 திகதி வரை இந்த கடன்படுனர் மீதியை அடையாளங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் பிரகாரம் இந்த கடன்படுனர் மீதி இணக்கக் கூற்றை சமப்படுத்த பொய்யாக உள்ளடக்கிய மீதிகளாகும் எனும் சந்தேகத்தை கணக்காய்வின் போது தள்ளிப்போட முடியாதிருந்தது. | கடன் மீதிகளை அறவிட சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் கணக்காளர்களை அறிவூட்டலின் ஊடாக நீண்ட கால் கடன் மீதிகளை அகற்ற நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படுவதாக, எதிர்வரும் ஆண்டுகளில் இக் கடன் மீதியை முடியுமான வரை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக, 2020 ஆண்டு முதல் ஒரே செலவின தலைப்பினுள் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் இடம் பெறாதவாறு நடவடிக்கை எடுப்பதாக. | |
| (உ) | சேவைத் தடைக்குற்பட்ட 222 அலுவலர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 9.76 மில்லியனானதுடன் அவற்றிலிருந்து ரூபா 7.26 மில்லியன் அதாவது 74 சதவீத கடன் மீதிகள் 5 ஆண்டுகளை விஞ்சிய பழைய கடன் மீதிகளானது. | இவற்றில் சில கடன் மீதிகளை அறவிடுவதற்காக சட்ட பிரிவிற்கு அனுப்பி உள்ளதுடன் மற்றைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிற்கு சமர்ப்பித்து நீண்ட கால கடன் மீதிகளை தீர்க்க தேவையான ஆலோசனை வழங்கியுள்ளதாக. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | சேவையை விட்டுச் சென்ற **888** அலுவலர்களிடமிருந்து கூட்டுத் தொகை ரூபா **25.08** மில்லியனான கடன் மீதிகள் அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து ரூபா **11.58** மில்லியன் அதாவது **46** சதவீத கடன் மீதிகள் **5** ஆண்டுகளை விஞ்சிய பழைய கடன் மீதிகளானது. இம் மீதிகள் ஒவ்வொறு வருடமும் தொடர்ந்து அதிகரித்திருந்ததுடன் அவற்றை அறவிட போதிய முயற்சிகள் எடுத்திருக்கவில்லை. | இவ் அலுவலர்களின் நிகழ்கால முகவரிகளை கண்டறிய முடியாமை, பிணையாளர் இல்லாமை ஆகிய விடயங்களின் மீது இம் மீதிகளை அறவிட முடியாத காரணத்தால் 5 ஆண்டுகளிற்கு அதிகமான நிலுவை கடன் மீதி காணப்படுவதுடன் அனைத்து நிறுவனங்களினதும் கணக்காளர்களை அறிவூட்டி கடன் மீதிகளை தீர்க்க தேவையான ஆலோசனை வழங்கியுள்ளதாக. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஓய்வு பெற்ற **349** அலுவலர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொகை ரூபா **19.21** மில்லியனானதுடன் அவற்றிலிருந்து ரூபா **9.79** மில்லியன் அதாவது **51** சதவீத கடன் மீதிகள் ஓராண்டை விட பழைய கடன் மீதிகளானது. | ஓய்வூதிய திணைக்களத்தை அறிவூட்டி மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 05/2019 பிரகாரம் செயற்பட்டு பழைய கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | தாபன விதிக்கோவை **xxiv** அத்தியாயத்தின் பிரிவு **4.4** முதல் **4.6** வரையான ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால் **2022** திசெம்பர் **31** திகதிக்கு மரணித்த அலுவலர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொகை ரூபா **6.58** மில்லியனானது. அவற்றில் **26** அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா **1.43** மில்லியன் அதாவது **19** சதவீத கடன் மீதி **05** ஆண்டுகளை விட பழைய கடன் மீதிகளானது. அவ்வாறே இந்த கடன்படுனர் மீதியில் ரூபா **3.25** மில்லியன் அதாவது **49** சதவீதம் ஓராண்டை விஞ்சிய் மீதிகளானது. | இவற்றில் கனிசமான அளவினது மரணப் பணிக்கொடை இதுவரை தீர்க்கப்படாமை மற்றும் மரணப் பணிக்கொடைக்கு உரித்தாளர்கள் முன்வராத காரணத்தால் கோவையின் முன் நடவடிக்கைகள் இடம் பெறாமை போன்ற காரணங்களினால் அறவீட்டு நடவடிக்கைகள் இது வரை இடம் பெறாததுடன் எதிர்வரும் காலத்தின் நீண்ட கால கடன் மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்படுமென. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | இடமாறிச் சென்ற, சேவை தடைக்குட்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த 95 பேர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 18.28 மில்லியனிற்கு உரிய ஆதன/ வாகன கடன் கடிதக் கோவைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | கடிதக் கோவைகளை அழைப்பிக்கும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக. | இக் கடன் கடிதக் கோவைகளை விரைவில் கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம், அமைச்சிற்குரிய 26 நிறுவனங்களிற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 1,091 மில்லியனான வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 6.32 மில்லியன் தொகையை சுத்திகரிப்பு சேவைகளை நடாத்திச் சென்ற நிறுவனமொன்று தொடர்பாக காணப்படும் புலனாய்வொன்று காரணமாக நிறுத்தி வைத்துள்ளதாக, ஆரம்ப விசாரணைகள் | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடிவடைந்த பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக, எஞ்சிய தொகையை 2023 மே மாதம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதாக. | |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) 2021 இலக்கம் 09 கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் (திருத்தம்) சட்டத்தின் 8 (1) பிரிவு | 2020 மே மாதம் 20 திகதி முதல் வலுப்பெறும் வகையில் கொவிட் 19 தொற்றின் முன் சுகாதார சேவை வழங்களிற்காக தேவையான சில மருந்து, அறுவை சிகிச்சை பொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதற்குரிய ஏனைய உருப்படிகள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (**VAT**) அறவிடலிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதும் அதன் ஏற்பாடுகளுக்கு இணங்காது 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் 17 வைத்தியசாலைகளினால் கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக 1550 சந்தர்பங்களில் மேற்கொண்ட கொள்வனவுகளிற்காக 92 வழங்குனர்களிற்கு கூட்டுத்தொகை ரூபா 70.12 மில்லியனான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (**VAT**) செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக உரியவாறு தொடர்பாடல் ஆகாத காரணத்தால் செலுத்தப்பட்ட **VAT** வரிக்குரிய அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்திக் கொண்டதுடன், அத் தகவல்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததாக, குறித்த வரி விடுதலை வழங்கியுள்ள தினத்திற்கு பின்னர் கொள்வனவு செய்த உபகரணங்களிற்காக கொடுபனவு செய்கையில் அவ்வாறு செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையை குறித்த நிறுவனம் மற்றும் நபர்களினால் தங்களது வரி அறிக்கையிற்கு உட்படுத்தி உரியவாறு வரித் தொகை செலுத்தியில்லாத நபர்களிடமிருந்து செலுத்திய தொகையை மீண்டும் அரசிற்கு பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து நிறுவன தலைவர்களையும் அறிவூட்டியுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 | ரூபா 22.91 மில்லியனான மருந்துகள் பற்றாக்குறை மற்றும் ரூபா 218.04 மில்லியனான மருந்துகள் காலாவதியானமை தொடர்பாக முறையே 05 ஆண்டுகளிற்கும் 13 ஆடுகளிற்கும் இடையில் மற்றும் 2 ஆண்டுகளிற்கும் 13 ஆடுகளிற்கும் இடையிலான காலமொன்று கடந்துள்ள போதும் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மருந்துகள் வழங்கல் பிரிவில் தரமின்றிய மருந்துகளின் பராதீன நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்து வருவதுடன் காலாவதியான மருந்துகளை அகற்ற தற்போது நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக. | நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நட்டமொன்று அல்லது நட்டசேதமொன்று ஏனும் ஏற்பட்ட உடனே அதன் அளவு மற்றும் காரணத்தை குறிப்பாக அறிந்து கொள்ளவும், அதற்கு பொறுப்பு வாய்ந்தவர்களை தீர்மானிப்பதற்கும் விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | **V** ஆம் அத்தியாயத்தின் 7.1 பிரிவு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் கடமை ஒழுங்கு விதி முதலாம் பகுதியின் 172 ஆம் விதி | பதவியை விட்டுச் சென்றதாக கருதப்படும் அலுவலர் ஒருவருக்கு அதுபற்றி உடனடியாக பதிவுத் தபாலில் அறிவித்து அனுப்ப நடவடிக்கை எடுப்பது நிறுவன பிரதானியின் பொறுப்பான போதும், அமைச்சினால் அங்கீகரித்த விடுமுறை முடிவடைந்தவுடன் கடமைக்கு அறிக்கையிடாத வைத்திய அலுவலர்களிற்கு சேவையை வெறிதாக்கிய அறிவித்தலை விநியோகிக்கும் தாமதம் 17 ஆண்டுகள் வரையானது. | தனிநபர் கடிதக் கோவைகளிற்கு பொறுப்பாகவுள்ள விடய அலுவலர்கள் வெவ் வேறாக மற்றும் பொதுவாக சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொள்ளும் அலுவலர்களின் பதிவேடுகள் பேணிச் செல்வதாக மற்றும் உரிய தினத்தில் கடமைக்கு அறிக்கையிடாத அலுவலர்களிற்கு சேவையை வெறிதாக்கிய அறிவித்தலை விநியோகிக்க விடய அலுவர்களை அறிவூட்டியுள்ளதாக. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்புக்களை புறக்கணித்த அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | **XII** ஆம் அத்தியாயத்தின் 23 மற்றும் 23(1) பிரிவு | தொற்று நோய் விஞ்ஞான நிறுவனத்தின் முன்னால் பெண் பணிப்பாளர் **29** | குறித்த வெளிநாடு செல்லும் **29** சந்தர்ப்பங்களிற்குரிய வெளிநாட்டு | இது தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும XV ஆம் அத்தியாயத்தின் 10.1 பிரிவு, | சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்லும் போது சந்தர்ப்பதிற்கு ஏற்ப பெற்றுக் கொள்ள வேண்டிய முறையான அங்கீகாரம் மற்றும் தீவிற்கு வெளியில் செலவிடும விடுமுறைக்காக அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை விண்ணப்பத்தையேனும் வழங்கியதனை உறுதி செய்ய முடியமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | விடுமுறைகளின் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக ஏனைய எழுத்துமூல சான்றுகளை குறித்த பிரிவினுள் இல்லையென எனக்கு அறிவித்துள்ளதாகவும், இது உள்ளக நிர்வாகத்தில் காணப்பட்ட பலவீனம் காரணமாக ஏற்பட்டதாக இதன் பின்னர் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக. | பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 பெப்ரவரி 20 திகதிய இலக்கம் 03/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் **3(III)** பந்தி | ஓய்வு பெற்ற திகதியன்று கடமையாற்றிய பதவியை விட குறைந்த சம்பள அளவுடன் கூடிய வேறொரு பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியிருந்த 22 அலுவலர்களிற்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு முரணாக அவர்கள் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் செலுத்தி இருந்த மாதாந்த சம்பளத்தை மாதாந்த படிகளான செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்களிற்கு மாதாந்த படிகள் செலுத்தும் போது கூடுதலாக செலுத்தியுள்ள படிகளை மீண்டும் அறவிட்டு வருவதாக. | இது தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை நடாத்தி கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டியதுடன் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்ட அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்திற்கு மேற்கொள்ளும் ஒழுங்கான திருத்தம் பிரகாரம் சட்டத்தின் 83 பிரிவின் கீழ் அத்தியவசிய தேவைப்பாடொன்றான உழைக்கும் போது வரி செலுத்தும் முறையின் கீழ் நிறுத்தல் வரி கழித்தலை 2020 சனவரி 01 திகதி முதல் | வரி கடப்பாட்டிற்கு உட்படும் ஊழியர் தனது விருப்பின் பிரகாரம் தனிநபர் வருமானத்தில் இருந்து வரி அறவிட வேண்டாமென சேவை வழங்குனரிடம் கோரும் உரிமை கிடைத்திருந்ததால் அமைச்சு மற்றும் அதன் | உள்நாட்டு இறைவரி சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அகற்றி 2020 ஏப்ரல் 01 திகதி முதல் வலுப்பெறும் வகையில் தனிநபர் வருமான முற்பண வரி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், PN/PAYE/2020-01 மற்றும் 2020 ஏப்ரல் 15 திகதிய வரி அறிவித்தல் பிரகாரம் 2020 சனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரையான கால எல்லைக்குரிய விநியோகித்திருந்த வரி அறிவித்தலின் ஏற்பாடுகளை பின்பற்றி இருக்காததுடன் அமைச்சு, வைத்தியசாலை மற்றும் 24 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடல் பிரகாரம் மேற்குறித்த 03 மாத காலப் பகுதிக்காக அரசிற்கு இழக்கப்பட்டிருந்த வரி வருமானம் ரூபா 7.65 மில்லியன் அளவானது. | கீழான நிறுவனங்களில் சேவையிலுள்ள அநேக அலுவலர்கள் அதற்காக விருப்பம் தெரிவித்திருக்காமை, அதன் பிரகாரம் விருப்பம் தெரிவிக்காத அலுவலர் பட்டியல் குறித்த வைத்தியசாலை ஊடாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதுடன் அனுப்பாத வைத்தியசாலைகளுக்கு குறித்த பட்டியல்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் இடமிருந்து குறித்த வரித் தொகையை கழித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாக. | |

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### 2.8.1 அதிகாரயற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் ஒருவர் 2022 ஆகஸ்ட் 20 திகதி சமர்பித்த வெளிநாட்டு விடுமுறை விண்ணப்ப பத்திரம் பிரகாரம் 2022 செப்டம்பர் 20 திகதி முதல் தனிப்பட்ட விடயமொன்றிற்காக அவுஸ்திரேலியாவிற்கு செல்ல 84 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை மற்றும் 02 நாட்கள் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை 2022 செப்டம்பர் 29 திகதி விடயப் பொறுப்பு அமைச்சிரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர் வெளிநாடு சென்றிருந்தது அவுஸ்திரேலியாவின் கென்பரா வைத்தியசாலையில் மருத்துவ அலுவலராக கடமையாற்ற கைச்சாத்திடப்பட்ட சேவை ஒப்பந்தமொன்றின் பிரகாரம் வெளிநாட்டு தொழிலிற்காகவென தகவல்கள் கணக்காய்விற்கு | அலுவலர் அங்கீகார வெளிநாட்டு விடுமுறை முடிவில் சேவைக்கு அறிக்கையிடாததால் 2022.12.15 திகதி முதல் அமுலாகும் வகையில் சேவையை வெறிதாக்கிய அறிவித்தல் விநியோகிக்கப்பட்டது. அலுவலர் வெளிநாடு செல்ல முன்னர் வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளதுடன், வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை நடாத்தி பொறுப்பு வாயந்த அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த மருத்துவர் சம்பளத்துடன் கூடிய விடுமுறையை பெற்றுக் கொள்ள பல பொய்யான தகவல்களை சமர்பித்து வெளிநாட்டு விடுமுறை அங்கீகரித்துக் கொண்டிருந்ததார்.

## 2.9 நிதி மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஜுலை 01 திகதி முதல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு இருந்த மருத்துவ அலுவலர் ஒருவரின் முறையான நியமனக் கடிதத்தை, கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட அலுவலரின் பேர்வழிக் கோவையில் உள்ளடக்கப்படாததுடன் இந்த மருத்துவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட பதவியணியிற்கு நியமிக்க 5 வருட ஆகக் கூடிய காலத்தின் கீழ் 2016 மார்ச் 03 திகதி சேவையின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். 2020 மார்ச் 02 திகதி முதல் அவர் மீண்டும் நிரந்தர சேவை நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும் அவர் நிரந்தர சேவை நிலையத்திற்கு கடமைக்கு அறிக்கையிட்டதற்கான சான்றுகள் பேர்வழிக் கோவையில் உட்படுத்தப்படவில்லை. மீண்டும் 2020 செப்டம்பர் 04 திகதி அவரை பாராளுமன்ற உறுபினர் ஒருவரின் செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்காக தற்காலிகமாக விடுவிக்குமாறு அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு எவ்வித முறையான அங்கீகாரமும் இல்லாது சிறுநீரக சுத்திகரிப்பு மற்றும் சிறுநீரக இணைப்பு தேசிய மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரினால் அவரை 2020 | இவ் அலுவலரின் முறையான நியமனக் கடிதம் விநியோகிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் மருத்துவ சேவைகள் பிரிவினால் அந் நியமனக் கடிதத்தை இதுவரை விநியோகிக்க வில்லையெனவும், இந்த அலுவலர் உரித்தாகும் 2007.07.01 குழுவின் மருத்துவ அலுவலர்களின் நியமனத் திகதி 2007.06.30 என திருத்தி வழங்கப்படுவதால் அதற்காகுரிய ஆவணங்களுடன் அலுவலர் கோரிக்கை விடுக்க வேண்டுமென 2022.09.22 திகதி அறிவித்துள்ளதாக, எனினும் அலுவலரின் பேர்வழிக் கோவை ஊடாக தற்காலிக விடுவிப்பு நடவடிக்கை நீடிக்கப்பட்டு வருவதால் இதுவரை அது தொடர்பாக அலுவலர் அறிவூட்டப்படாததுடன், எதிர்காலத்தில் அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | இது தொடர்பாக முழுமையான முறையான விசாரணை ஒன்றை நடாத்தி முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் 10 திகதி சேவையின் பின்னர் சுகாதார அமைச்சிற்கு விடுவித்திருந்தார். 2020 செம்டம்பர் 11 திகதி முதல் 2021 நவம்பர் 15 திகதி வரை இம் மருத்துவர் எவ்வித கடமையையும் மேற்கொண்டிருக்காத போதும் அக் காலத்திற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,830,872 தொகை அவரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2016 மார்ச் 04 திகதி முதல் 2020 மார்ச் 02 திகதி வரை மற்றும் 2021 நவம்பர் 16 முதல் இவ்வறிக்கை திகதி வரையான சம்பளத்தை மீள்நிரப்பிக் கொண்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2016 சனவரி முதல் பயிற்சிக்காக 22 மத்திய அரச வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டிருந்த பயிற்ச்சி மருத்துவ அலுவலர்களிற்கு 2022 மார்ச் வரையான காலத்திற்காக ரூபா 47.40 மில்லியன் சட்டரீதியற்ற படிகளாக செலுத்தப்பட்டு இருந்தது. ஏனைய வைத்தியசாலைகளிற்கு உரியதாக 2016 முதல் 2022 திசெம்பர் வரை மேலதிகமாக செலுத்தியுள்ள தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | வழங்கப்பட்டிருந்த பதில் இந்த கணக்காய்வு பந்திக்கு தொடர்பற்றதாகும். | செலுத்தியுள்ள சட்டரீதியற்ற அனைத்து தொகைகளையும் குறித்த அலுவலர்களிடம் இருந்து அல்லது பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிட்டு அது பற்றி கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும். |
| (இ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பாலுருப்பு சிறுநீர் அறுவைசிகிச்கை அறையில் (Genito-Urinary Operation Theater – GUOT) அதாவது நவலோக்க அறுவைசிகிச்கை அறையில் (Nawaloka Cardiac Operation Theater - NCOT) அறுவை நுகர்வுப் பொருள் இருப்பு தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது வைத்தியசாலையினால் அந்த அறுவைசிகிச்சை அறையில் மருந்து மற்றும் நுகர்வுப் பொருள் இருப்பு தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 715 (2) (ஆ), 751 (5), | கணக்காய்வின் அறிவுறுத்தல் பிரகாரம் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாத நோக்கில் GUOT இன் கடமை பொறுப்பு அலுவலரின் சேவையை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக, அறுவை நுகர்வுப் பொருட்களை கையேற்றல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து அது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, இங்கு | மேற்கொள்ளும் விசாரணைகளை விரைவில் முடிவுறுத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

755 (1) மற்றும் 758 (1) பிரகாரமும், மருந்து முகாமைத்துவம் தொடர்பான கைநூலில் 2008 இரண்டாம் பதிப்பின் 09 ஆம் அத்தியாயததின் இலக்கம் 1 முதல் இலக்கம் 5 வரையினூடாக குறிப்பிட்டுள்ள நியதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததால் அறுவைசிகிச்சை அறையின் மருந்து மற்றும் நுகர்வுப் பொருள் இருப்புக்கள் முறையின்றி புத்தகங்களில் குறிக்கப்பட்டு இருந்ததாகவும், களஞ்சியப்படுத்தி இருந்ததாகவும், அது தொடர்பாக உயர் முகாமையின் மேற்பார்வை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக கிரயம் ரூபா **8.84** மில்லியனான **1,555** அலகுகளுடன் கூடிய அறுவைசிகிச்சை நுகர்வுப் பொருள் இருப்பொன்று மோசடியாக அறுவைசிகிச்கை அறை **B** இல் கனிஷ்ட பதவியணியினரின் மலசல கூடத்தினால் பிரவேசிக்க முடியுமான அதற்கு அருகில் அமைந்துள்ள அறுவைசிகிச்சை தையல் அறையின் சிவிலின் உள்ளே பொலித்தீன் உரைகளில் அடுக்கி மறைத்து வைத்திருந்ததாகவும், அறுவைசிகிச்சை நுகர்வுப் பொருள் **5** வகைகளிற்குரிய **27** அலகுகள் நவலோக்க அறுவைசிகிச்கை அறையிலிருந்து **G** அறுவைசிகிச்சை அறைக்கும அதன பின்னர் அறுவைசிகிச்சை அறை **D** இற்கும் முறையற்றதாக மற்றும் மோசடியாக வெளியேற்றப்பட்டு இருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய 07 பரிந்துரைகளை கணக்காய்வாளர் நாயகத்தினால் சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பியிருந்த போதும் அதன் முன்னேற்றத்தை 2023 ஜுன் 30 திகதி வரையும் கணக்காய்விற்கு அறிக்கையிட்டு இருக்கவில்லை. அவ்வாறே மேலும் இந்த அறுவைசிகிச்சை அறையில் பயன்படுத்தியிருந்த அறுவைசிகிச்சை நுகர்வுப் சேதத்திற்குட்பட்ட அறுவை நுகர்வுப் பொருட்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணையை மேற்கொண்டுள்ளதுடன் தற்போது முதன்மை விசாரணை மேற்கொள்ளப் படுவதாக, கணக்காய்விற்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக தற்போது முதன்மை புலனாய்வொன்றை மேற்கொள்வதுடன் அங்கு சமர்பிக்கப்படும் பரிந்துரைகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏற்பட்டுள்ள நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக.

பொருட்கள் 3 வகைகளை மாதிரியாகக் கொண்டு ஆழமாக பரிசோதிக்கும் போது அறுவைசிகிச்சை அறையில் மேற்கொண்டிருந்த அறுவை சிகிச்சைகளின் தேவைப்பாட்டை விட கூடுதலாக அந்த அறுவைசிகிச்சை நுகர்வுப் பொருட்கள் 3 வகைகளை விநியோகித்து இருந்ததாகவும், அவற்றின் கிரயம் ரூபா 4.67 மில்லின் அளவாகும் என அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரச வைத்தியசாலைகளில் இருந்து உருவாகும் மருந்தது கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக சுகாதார அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தனியார் கம்பனியொன்று 2019 ஜூலை 11 திகதி முத்தரப்பு ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திட்டு இருந்ததுடன் அது 2018 திசெம்பர் 13 திகதி முதல் வலுப்பெற்றிருந்த போதும் அமைச்சினால் கவனயீனமாக அல்லது வேண்டுமென்றே இவ் ஒப்பந்தத்தை குறித்த வைத்தியசாலைகளுக்கு வழங்கி இருக்காததால் ஒப்பந்த பிரகாரம் மருத்துவ கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் மற்றும் வெளியேற்றல் மேற்கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஒப்பந்தத்தின் அட்டணை I இன் 3 ஆம் நிபந்தனை பிரகாரம் சேவை வழங்குனரால் வழங்க வேண்டிய வைத்தியசாலையின் மருத்துவ கழிவுப் பொருட்களை வேறாக்க மற்றும் களஞ்சியப்படுத்த தேவையான நிறமுடைய உரைகளை வைத்தியசாலையினால் பெறுகை செய்து ஏனைய வெளித் தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 19 வைத்தியசாலைகளை மாதிரியாகக் கொண்டு பரிசோதிக்கும் போது 2019 ஆண்டு முதல் 2022 ஒக்டோபர் மாதம் வரை உரைகளிற்காக அந்த அந்த வைத்தியசாலைகளினால் ரூபா 127.40 மில்லியன் செலவிட்டு

2019.07.19 ஒப்பந்தம் கைச்சதாத்திட்ட பின்னர் ஒப்பந்த பிரதிகளை கோரியுள்ள நிறுவனங்களுக்கு அந்த ஒப்பந்த பிரதிகளை வழங்கியதாக, மஞ்சள் சிவப்பு மற்றும் ஊதா நிற உரைகள் மற்றும் சிவப்பு நாடாவுடன் கூடிய மஞ்சள் பெட்டிகளிற்காக வைத்தியசாலைகளினால் வெளித்தரப்பினரிற்கு பணம் செலுத்தி கொள்வனவு செய்திருந்தால் அப்பணத்தை சேவை வழங்குனரிற்கு செலுத்த வேண்டியுள்ள தொகையிலிருந்து அறவிடுமாறு ஆலோசனை வழங்கியதாக, புதிய ஒப்பந்தத்தின் v (h) பந்தி பிரகாரம் சேவை வழங்குனர் ஈட்டும் மாதாந்த வருமனத்தில் 1.5 சதவீதத்தை சுற்றாடல் மேற்பார்வை கட்டணமொன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உரித்தாக வேண்டுமென அறிவித்துள்ளதாக, சேவை வழங்குனரிடமிருந்து சேவையை பெற்றுக் கொள்ளும் அனைத்து அரச வைத்தியசாலைகளும் குறித்த படிவத்தை அனுப்பியுள்ளதாக மற்றும் நிறுவனம் தொடர்பான தகவல்களை விரைவில் முன்வைக்க நடவடிக்கை

முத்தரப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் அனைத்து தரப்பினர்களிற்கும் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் மற்றும் நிபந்தனைகளை அறியப்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால் அரசிற்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்தை கணக்கிட்டு மீள் அறவிட வேண்டும்.

சுற்றாடல் மேற்பார்வை வருமானத்தை சரியாக அரச கணக்குகளிற்கு செலவாகுவதனை உறுதி செய்யும் வகையில் வைத்தியசாலைகளினால் பின்பற்ற வேண்டியதான திட்டவட்டமான முறைமையொன்றை மற்றும் வெளியேற்றப்படும் மருத்துவ கழிவுப் பொருட்கள் அளவின் பாரம் நிறுத்தல் மற்றும் அறிக்கையிடுவதன் சரியான தன்மையை உறுதி செய்து

இருந்ததுடன் வைத்தியசாலைகளில நோயாளர் பராமரிப்பு சேவையில் ஈடுபடும் ஆளணியினரால் மேலதிக பணியொன்றாக சிவப்பு நாடாவுடன் கூடிய மஞ்சல் பெட்டிகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஒப்பந்தத்தில் V (h) நிபந்தனை பிரகாரம் சேவை வழங்குனர் ஈட்டும் மாதாந்த வருமானத்தில் 1.5 சதவீத சுற்றாடல் மேற்பார்வை கட்டணமொன்று (Environmental Monitoring Fee ) மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உரித்தாக வேண்டிய போதும் அக் கட்டணத்தை அறவிடும் முறை பற்றி முறையான வேலைத் திட்டமொன்று இருக்காததனால் அரசிற்கு கிடைக்க வேண்டிய சுற்றாடல் மேற்பார்வை கட்டண வருமானத்தை சரியாக அரச கணக்குகளிற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேற்குறிப்பிடப்பட்ட அரசிற்கு ஏற்படுத்தியிருந்த நட்டம் 19 வைத்தியசாலைகளிற்கு மாத்திரம் உரித்தாவதால் மேற்குறிப்பிட்ட வழங்குனரிடமிருந்து சேவையை பெற்றுக் கொண்ட ஏனைய அரச வைத்தியசாலைகள் தொடர்பாகவும் பூரண பரிசோதனையொன்றை மேற்கொண்டு அதற்குரிய நட்டத்தை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிப்பபடுவதுடன் மேற்குறிப்பிட்ட தரப்பினர்களிடையில் 2014 ஆண்டு கைச்சாத்திட்டிருந்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் இணைப்பு 01 இல் உள்ளடங்கும் பூரண ஒப்பந்தமும், 2014 மற்றும் 2019 ஆண்டுகளில் கைச்சாத்திட்டு இருந்த முத்தரப்பு ஒப்பந்தம் பிரகாரம் சேவை வழங்குனரிடமிருந்து சேவையொன்றை பெற்றுக் கொண்ட அனைத்து அரச வைத்தியசாலைகள் தொடர்பாக கணக்காய்வினால் படிவம் பிரகாரம் கோரியிருந்த தகவல்களும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. இவ்வாறு பாரிய கொடுப்பனவொன்றை செய்யும் பொருளாதார எடுப்பதாக, சரியாக நிறையை நிறுத்தல் மற்றும் குறித்துக் கொள்வதனை கடுமையான மேற்பார்வை ஒன்றின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களினால் வெளியேற்றும் மருத்துவ கழிவுகளின் அளவின் நிறையை நிறுத்தல் மற்றும் அறிக்கையிடலின் சரியான தன்மை தொடர்பாக பொதுவான வேலைத் திட்டமொன்றை தயாரிக்கும் வரை வைத்தியசாலைகள் மட்டத்தில் போதிய உள்ளக கட்டுப்பாடொன்றை ஸ்தாபித்துக் கொள்ளுமாறு 2022.12.10 திகதி அறிவுறுத்தல் வழங்கியதாக, அவ்வாறே அனைத்து வைத்தியசாலைகளிற்காக வழங்கியுள்ள Healthcare Waste Management Training Module for Health Staff ஊடாக சரியாக மருத்துவ மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முறை தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத் திட்டத்தின் ஊடாக பயிற்றுவிப்பாளர்களை பயிற்று வித்துள்ளதாக. கொள்வதற்காக பலமான உள்ளக கட்டுப்பாடொன்றை வைத்திசாலை மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவ்வாறே கோரியுள்ள தகவல்களை விரைவில் கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும்.

நடவடிக்கையொன்றிற்காக அரசு மேற்கொள்ளும் செலவினத்தின் பொருளாதார நலன்களை உச்சப்படுத்திக் கொள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் வெளியேற்றும் இரசாயன கழிவுப் பொருட்கள் அளவின் பாரத்தை நிறுத்தல் மற்றும் அறிக்கையிடலின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்வதற்காக குறைந்த பட்ச உள்ளக கட்டுப்பாட்டு வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும், அதற்காக வைத்தியசாலைகளினால் பின்பற்ற வேண்டிய பொது வேலைத் திட்டமொன்றை அமைச்சினால் தயாரித்திருக்காததுடன் வைத்தியசாலை மட்டத்திலும் போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை ஸ்தாபித்திருக்கவில்லை.

(உ) குருணாகலை போதனா வைத்தியசாலையில் புதிய தொழிநுட்பத்துடன் கூடிய புகையற்ற புதிய சுடலையொன்றை நிர்மாணிப்பதற்காக **2020** மே **09** திகதி ரூபா **19.43** மில்லியனான தொகையொன்றிற்கு ஒப்பந்ததாரர் ஒருவருடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு **2021** மே **22** திகதி அதாவது இவ் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வேண்டிய காலத்தை விட **06** மாதங்கள் தாமதித்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், நிர்மாணிக்கப்பட்ட இந்த சுடலை எதிர்பார்த்தவாறு வைத்தியசாலை தேவைப்பாட்டை பூரணப்படுத்த முடியாதென சுகாதார அமைச்சு மற்றும் வைத்தியசாலையினால் இனங்கண்டிருந்ததாகவும், சுடலையை நிர்மாணித்து ஓராண்டு செல்ல முன்னர் அடிக்கடி உடைதலிற்கு உள்ளாகுவதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரினால் தபுள்ள மாநகர சபையினுள் **2019** ஆண்டில் நிர்மாணித்திருந்த சுடலையிலும் இவ்வாறான நிலைமை காணப்படுவதாகவும், அது தொடர்பாக வைத்தியசாலையின் கவனத்தை செலுத்த வேண்டுமெனவும் **2021**

சுடலையை வழங்கி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்த ஒப்பந்ததாரரினால் பணம் செலுத்தாததன் மீது இயந்திரத்தின் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதில்லை என அறிவித்ததன் பின்னர் இப் பிரச்சினைக்கு தீர்வொன்றாக ஆண்டினுள் வழங்கியுள்ள ஏற்பாட்டில் இருந்து கொடுப்பனவு செய்ய முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து அனுப்ப நடவடிக்கை எடுத்த போதும், 2021 ஆண்டினுள் முற்பணம் கிடைக்காததன் மீது இப் பிரச்சினையை சுகாதார அமைச்சிற்கு அறிவித்ததன் பின்னர் அதற்காக சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதார பிரிவினூடாக குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கும் பரிந்துரை மற்றும் அறிவுறுத்தலின்

இந்த விடயம் தொடர்பாக சுயாதீன முழுமையான புலனாய்வொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏப்ரல் **01** திகதி அனுப்பிய இலக்கம் எச்எஸ்எம்/எப்/ரீஎச்கேயூ/**2020**/ஏகிவ் **03** கொண்ட கணக்கயாய்வு ஐயவினா மூலம் அறிவித்திருக்கையில் அதன் மீது கவனத்தை செலுத்தாது வைத்தியசாலை தேவைப்பாட்டை நிவர்த்தி செய்ய இயலாத இந்த சுடலைக்காக ஒப்பந்ததாரரிற்கு செலுத்தியிருந்த ரூபா **16.38** மில்லியனான தொகை விளைவற்ற கொடுக்கல் வாங்கலென்றாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிர்மாணிக்கப்பட்ட சுடலை வைத்திசாலை தேவைப்பாட்டிற்கு போதாதுள்ளமை தொடர்பாக அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில் சுகாதார பிரிவின் ஊடாக மீண்டும் புலனாய்வு செய்து அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கணக்காய்விற்கு அறிவிக்குமாறு **2022** ஜுன் **21** திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானித்திருந்த போதும் அந்த புலனாய்வு அறிக்கை மற்றும் செயன்முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

மீது கொடுப்பனவு நடவடிக்கை மற்றும் சுடலையை மீண்டும் செயற்படுத்துவ தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2022.09.30 சுடலையின் பிரச்சினையை தீர்க்க நியமிக்கப்பட்ட குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, இதன் பிரகாரம் தற்போது குறித்த ஒப்பந்ததாரர் இயந்திரத்தை சுமுகமான நிலைக்கு ஆக்கியுள்ளதுடன் சுடலைக்கு மின்சாரம் மற்றும் நீர் மாணி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக.

(ஊ) **2022** ஆண்டிற்காக சிலாபம் பொது வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக ஒப்பந்தததாரருடன் கைச்சாத்திட்டு இருந்த சுத்திகரிப்பு சேவை வழங்கும் ஒப்பந்தம் பிரகாரம் பகல் மற்றும் இரவு நேர சேவைக்காக சுகாதார தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் **122** நபர்களை தினந்தோறும் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய போதும் அதற்கு குறைவாக ஊழியர்களை ஈடுபடுத்தி சேவைக்கு வருகைதராத போதும் வரவுப் பதிவேட்டில் போலியான கையொப்பத்தை இட்டு சேவைக்கு வருகைதந்திருந்ததாக குறிப்பிட்டிருந்ததுடன் ஒப்பந்தம் பிரகாரம் சீருடையுடன் ஆயத்தமாகி அடையாள அட்டையுடன் சேவையாற்ற வேண்டிய போதும், எவ்வித ஊழியர்களும் அடையாள அட்டை அணிந்திருக்காததுடன்

இந்த வைத்தியசாலையின் நானாவித சேவை பிரிவுகளில் சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளது சேவை தேவைப்பாட்டின் மீதாகும், தொழிலாளர்களின் வருகையை தீர்மானிப்பதற்காக வரவுப் பதிவேடொன்றை தயாரித்துள்ளதுடன் அதனை பேணிச் செல்வது சிற்றூழியர் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தினால் ஆகுமென, அனைத்து சுத்திகரிப்பு தொழிலாளர்களும் பல இடங்களில் பரந்துள்ளதால் ஒரே முறையில் பரிசோதிப்பதனை சரியாக மேற்கொள்வது ஓரளவு

இவ் ஒப்பந்தம் தொடர்பாக சுயாதீன முழுஜமயான புலனாய்வொன்றை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்திய அனைத்து தொகையையும் அறவிட வேண்டியதுடன் பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும

| | | | |
|---|---|---|---|
| | சீருடையை அணிந்திருக்காத சந்தர்ப்பங்கள் மற்றும் சில சுகாதார ஊழியர்களை இரண்டு இடங்களில் சேவையில் ஈடுபடுத்தி இருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாக மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது., போலியாக கையொப்பம் இடப்படுவதனை கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்திக் கொண்ட பின்னரும் குறித்த கம்பனியின் மேற்பார்வை அலுவலர் மோசடியாக போலியான பெயர்களை உள்ளடக்குவதை நிறுத்தவில்லையென அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது தெரிவு செய்யப்பட்ட கிட்டய காலமான **2022** செப்டம்பர் **07** திகதி முதல் **2022** செப்டம்பர் **21** திகதிக்கு இடையிலான **15** நாட்கள் காலத்தினுள் சேவையில் ஈடுபடுத்தி இருக்காத ஊழியர்களிற்காக ரூபா **431,361** ஆன தொகை செலுத்தி இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பிரச்சினைக்குரியதாகும் என. தற்போது அனைத்து ஊழியர்களிற்கும் சீருடையுடன் அடையாள அட்டையை அணிந்து இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியதாக வைத்தியசாலையினுள் அனைத்து சுத்திகரிப்பு ஊழியர்களின் மேற்பார்வை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சிற்றூழியர் கட்டுப்பாட்டாளரினால் மேற்கொள்வதாக செப்டம்பர் மாத பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது இத் தொகையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | |

## 2.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைத்தியசாலை ஒன்றில் நோயாளர் பராமரிப்பு சேவை மற்றும் அதற்கு உதவுகின்ற ஏனைய சேவைகளை முகாமைத்துவம் செய்வது போன்று நோயாளர் பராமரிப்பு சேவைகளிலிருந்து வெளியேற்றப்படும் சேலயின் போத்தல், வெற்றுக் கேண், கதிர் பத்திரம், காட்போட் போன்றவை வெற்றுப் பாத்திரங்களின் விற்பனை வருமான முகாமைத்துவத்தினூடாக சரியான கூடிய வருமானமொன்றை அரச வருமானத்திற்கு அறவிட்டுக் கொடுப்பது வைத்தியசாலை முகாமைத்துவத்தின் பொறுப்பான போதும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெற்றுப் பாத்திரங்களை அரசிற்கு ஆகக் | தற்போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு அனைவரையும் அறிவூட்டி அகற்றப்படும் வெற்று சேலயின் போதல்களை உச்ச அளவில் திரட்டி அளவை நிறுவை செய்து ஆவணப்படுத்தி கொள்வனவாளர்களிற்கு விற்று அதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதாக, இரத்த சுத்திகரிப்பு அலகினால் அகற்றப்படும் அனைத்து **5L** மற்றும் **10L** பிலாஸ்டிக் கேன்களை விற்று அதிகூடிய வருமானத்தை சேர்த்துக் கொள்ள | சுத்திகரிப்பு சேவையின் வெற்றுப் பாத்திரங்களை மீண்டும் வழங்குனர்களிற்கு ஒப்படைக்கக் கூடாததுடன் அவற்றின் சரியான வெற்று பாத்திர வருமானத்தை அரச கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும். அமைச்சின் கீழ் காணப்படும் அனைத்து வைத்தியசாலைகளிலும் வெற்று பாத்திர வருமானத்தை ஈட்டுவது தொடர்பாக |

கூடிய வருமானம் கிடைக்கும் வகையில் வெளியேற்றுவதற்காக ஒழுங்கான முறைமையொன்றை ஸ்தாபிக்காததனால் 2021 ஆண்டு மற்றும் 2022 நவம்பர் 30 திகதி வரை ரூபா 1.19 மில்லியன் குறைந்த வருமானமொன்று மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பொதுவாக கணக்கிடலின் பிரகாரம் 2021 ஆண்டு மற்றும் 2022 ஆண்டுகளில் வெற்று சேலயின் போதல் விற்பனையால் வைத்தியசாலையினால் இழக்கப்பட்டிருந்த வருமானம் கிட்டியளவாக ரூபா 4.43 மில்லியனான போதும், வைத்தியசாலையின் இரத்த் சுத்திகரிப்பு அலகிற்கு விநியோகித்திருந்த இரத்த சுத்திகரிப்பு திரவம் உள்ளடங்கிய 5L மற்றும் 10L பிலாஸ்டிக் கேன் அளவிற்குரிய வெற்று கேன்களை வெளியேற்றுவதன் மூலம் வைத்திசாலையினால் இழக்கப்பட்டிருந்த வருமானம் கிட்டியளவாக ரூபா 2.62 மில்லியனான போதும், 6 வகை சேலயின் போதல்கள் மற்றும் 2 வகை இரத்த சுத்திகரிப்பு திரவக் கேன்களிற்குரியதாக கிடைத்திருந்த காட்போட் உரைகளினால் மாத்திரம் வைத்திசாலையினால் இழக்கப்பட்டிருந்த வருமானம் கிட்டியளவாக ரூபா 1.37 மில்லியன் எனவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே வைத்திசாலையின் சுத்திகரிப்பு சேவையை வழங்கும் நிறுவனத்தினால் வழங்கும் சுத்திகரிப்பு இரசாயன பொருட்களின் வெற்றுப் பாத்திரங்கள் அறவீடின்றி மீண்டும் அந் நிறுவனங்களிற்கு வழங்குவதால் வருமானத்தை இழந்திருந்ததுடன் இந்த வெற்று பாத்திரங்களிற்கு தரமற்ற சுத்திகரிக்கும் இரசாயன பொருட்களை நிரப்பி மீண்டும் வைத்தியசாலைக்கு சமர்பிக்கும் ஆபத்தும் காணப்பட்டது. அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய வைத்தியசாலைகளினாலும் தங்கள் வைத்தியசாலையினுள் உருவாகும் வெற்றுப் நடவடிக்கை எடுப்பதாக, சுத்திகரிப்பு சேவையை வழங்கும நிறுவனத்திற்கு வெற்று பாத்திரங்களை மீள் வழங்கிய போதும் சுத்திகரிப்பு திரவத்தை மீண்டும் வைத்திசாலைக்கு வழங்கும் போது முத்திரை இடப்பட்ட கேன்களினூடாக வழங்கப்படுகிறது. எனினும், தரமற்ற இரசாயன பொருட்கள் வைத்தியசாலைக்கு கிடைக்கும் நிகழ்தகவு குறைவாகும் என மற்றும் எதிர்காலத்தில் இது தொடர்பாக பரிசோதித்து சுத்திகரிப்பு சேவை நிறுவனத்திற்கு வழங்கும் வெற்றுக் கேன்களை வைத்தியசாலைக்கு பெற்று விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக, இது தொடர்பாக பரிசோதித்து அதன் பிரகாரம் அறவீடு அல்லது தேவையான முன்நடவடிக்கை எடுப்பதாக, டெண்டர் நடைமுறையை பின்பற்றி வெற்றுப் மாத்திரங்களை விற்பனை செய்வதாக.

ஒழுங்கு முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு குறித்த நட்டங்களை பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டியதுடன் வைத்தியசாலை மட்டத்தில் வெற்று பாத்திர வருமானம் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுவூட்ட வேண்டும்.

பாத்திரங்களை அரசிற்கு அதிகூடிய வருமானம் கிடைக்கும் வகையில் வெளியேற்றுவதற்காக ஒழுங்கான முறைமையொன்றை ஸ்தாபிக்காததனால் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. உதாரணமாக த சொய்ஷா பெண்கள் வைத்தியசாலை, சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, காசல் வீதியில் பெண்கள் வைத்தியசாலை மற்றும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை ஆகிய வைத்திசாலைகள் 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் 500 மில்லி லீற்றர் வெற்று போதல் விற்பனையால் மாத்திரம் ஈட்டிக் கொள்ள முடியுமாக இருந்த வருமானத்திலிருந்து ஈட்டியிருந்தது 2 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான குறைந்த வருமானமாவதுடன் 2022 ஆண்டில், த சொய்ஷா பெண்கள் வைத்தியசாலையினால் பயன்படுத்திய பின்னர் அகற்றி இருந்த வெற்று சேலயின் போதல்களின் அளவு 39,719 ஆன போதும் அவ்வாண்டில் வைத்தியசாலையினால் வெற்று சேலயின் போதல் விற்பனையினால் எவ்வித வருமானத்தையும் ஈட்டி இருக்கவில்லை.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டி 3.5 பிரிவிற்கு முரணாக **2019** முதல் **2022** ஆண்டு வரை மட்டக்ளப்பு போதனா வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவைக்கு பயன்படுத்தும் புடவை மற்றும் பட்டில் விரிப்புகளை கழுவுவதற்கு தேவையான ஐந்து வகை சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் நேரடி ஒப்பந்த முறையின் கீழ் தனியார் நிறுவனமொன்றில் இருந்து கொள்வனவு செய்வதற்காக ரூபா **18.58** மில்லியன் தொகை செலுத்தப்பட்டு இருந்தது. அதன் விளைவாக, இங்கு பெறுகைகளிற்கு பங்குபற்ற தகைமையுள்ள தரப்பினரிற்கு நியாமான, சமமான மற்றும் உச்ச சந்தர்ப்பமும், சுத்திகரிப்பு இரசாயன பொருட்களிற்காக குறைந்த பட்ச போட்டி விலையை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமும்

தேசிய போட்டி விலைமனு கோரல் (**NCB**) முறை ஊடாக வழங்குனர்களை தெரிவு செய்ய தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக, அலகு பொறுப்பு தாதி அலுவலர் **CSSD** பிரிவு மற்றும் புடவை கழுவும் மொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்புபேற்க்க வேண்டியதுடன் ஏனைய தாதிமார்களின் எண்ணிக்கை **5** ஆவதுடன் அவர்கள் கடமை நேர பட்டியல் அடிப்படையின் மீது ஒதுக்கியுள்ளதுடன் சுகாதார உதவியாளர் எண்ணிக்கை **5** மாத்திரம் நாளாந்தம் தமது கடமைக்கு வருவதாகவும்,

இது தொடர்பாக பரிசோதித்து அத்தியவசிய ஆளணியினரை மாத்திரம் ஈடுபடுத்தவும் மேலதி நேர படிகள் குறையும் வகையில் கடமை நேர பட்டியல் முறையொன்றை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வைத்தியசாலையில் மத்திய அறுவை சிகிச்சை வழங்கல் பிரிவிடம் **(CSSD) 4** சலவை இயந்திரங்கள் மற்றும் இரண்டு உளர்த்தும் இயந்திரங்கள் காணப்பட்ட போதும் அப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஆறு தாதிமார்கள் மற்றும் பதினொரு சுகாதார பணி உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்ததாகவும், **2022** ஆண்டில் அவர்களிற்காக மேலதிக படிகளாக முறையே ரூபா **3.87** மில்லியன் மற்றும் ரூபா **1.93** மில்லியனான தொகை செலுத்தப்பட்டிருந்தன. | அவர்களில் அநேகமானவர்கள் விடுமுறை செல்வதாக, இந்த வைத்தியசாலையில் உள்ள **3** சலவை இயந்திரங்கள் மற்றும் **2** உளர்த்தும் இயந்திரங்களும், மாற்றீடாக ஒரு தினத்தில் **24** மணிநேரமும் வாரம் பூராவும் செயற்படுவதுடன் இரண்ட சலவை இயந்திரங்களும் மிகவும் பழையதாகையால் அவற்றை அடிக்கடி திருத்த வேண்டியதாக. | |
| (இ) | கண்டி தேசிய வைத்தியசாலையில் மருத்துவ அலுவலர்களின் விடுதி கீழ் மாடியில் அவ் அலுலர்களின் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மத்திய நிலையமொன்று மற்றும் பாலர் பாடசாலை ஒன்றை நடாத்திச் செல்ல தனியார் நிறுவனமொன்றிற்கு இடவசதிகள் வழங்கப்பட்டிருந்தது. 2021 ஒக்டோபர் 12 திகதிய மதிப்பீட்டு அறிக்கையூடாக ரூபா 78,500 ஆன மாதாந்த வாடகை மதிப்பிடப்பட்டு இருந்த போதும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் குறித்த தனியார் நிறுவனத்திடம் மாதாந்த வாடகையை அறவிட நடவக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக 2021 நவம்பர் முதல் 2022 திசெம்பர் வரையான 14 மாத காலங்களிற்காக மாத்திரம் அரசிற்கு ரூபா 1.10 மில்லியனான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வாடகைத் தொகையை அறவிட வேண்டாமென மருத்துவ அலுவலர்களின் நலன்புரி சங்கத்தினால் முறைப்பாடொன்றை வைத்தியசாலை பணிப்பாளரிற்கு முன்வைத்துள்ளதாக, அதன் பிரகாரம், குறித்த நிலுவை வாடகையை மற்றும் மாதாந்த வாடகையை செலுத்துமாறு 2023.03.09 திகதிய கடிதம் மூலம் தலைவர், மருத்துய அலுவலர்களின் நலன்புரி சங்கத்திற்கு அறிவித்துள்ளதாக. | இந்த வாடகைத் தொகையை அறவிட்டு அது பற்றி கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும். |
| (ஈ) | பேராதெனிய போதனா வைத்தியசாலையின் மருத்துவ அலுவலர்களின் விடுதி கீழ் மாடியில் அவ் அலுலர்களின் குழந்தைகளுக்கான **2475** சது அடியிலான நில அளவில் பாலர் பாடசாலை ஒன்றை மற்றும் பகல்நேர பராமரிப்பு மத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்ல தனியார் நிறுவனமொன்றிற்கு இடவசதி வழங்கப்பட்டிருந்தது. இது **2007** | இந்த வைத்தியசாலையில் பாலர் பாடசாலை மற்றும் பகல்நேர பராமரிப்பு மத்திய நிலையத்தை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மாதாந்த சந்தை வாடகையாக மாதாந்தம் ரூபா **50,000** வீதம் **2** வருடங்களிற்காக மதிப்பிட்டிருந்த போதும் **2022** சனவரி மாதம் முதல் | - மேற்படி - |

| | | | |
| --- | --- | --- | --- |
| | ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்படுவதுடன், அதற்காக உரிய அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. **2022** பெப்ரவரி **10** திகதிய மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ரூபா **50,000** ஆன மாதாந்த வாடகையொன்றை மதிப்பிட்டுள்ள போதும், இதனை ஆரம்பித்த **2007** ஆண்டு முதல் **2023** சனவரி **31** திகதி வரை எவ்வித வாடகை தொகையையும் அறவிட்டிருக்கவில்லை. | அத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந் நிறுவனத்தை அறிவூட்டியுள்ளதுடன் இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுப்பதாக. | |
| (உ) | சீனா கடன் உதவி கருத்திட்டத்தின் கீழ் ரூபா 12.73 மில்லியனான GE Health Care / Optima XR 200 AMX வகையின் Mobile X ray இயந்திரம் ஒன்றை 2020 ஜுன் 25 ஆம் திகதி சிரிமாவோ பண்டாரநாயக விஷேட சிறுவர் வைத்தியசாலையின் கதிர்வீச்சு பிரிவிற்கு வழங்கப்பட்டு இருந்தது. இவ் இயந்திர கலத்தின் சாட்டுதல் காலம் போதாத காரணத்தால் தேவையான பரிசோதனைகளை உரியவாறு மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2022 ஒக்டோபர் 28 திகதி வரை 04 நோயாளர் பரிசோதனைகள் எனும் மிக்கக் குறைந்த பரிசோதனை எண்ணிக்கை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த இயந்திரம் திருத்த வேலைகளின் பின்னர் 2023.01.01 திகதி முதல் நோயாளர் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்துவதாக. | இது தொடர்பாக பரிசோதித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பேராதெனிய விஷேட சிறுவர் வைத்தியசாலையில் 2005 திசெம்பர் 05 திகதி தாபிக்கப்பட்ட **MRI** இயந்திரம் மூலம் 07 மாகாணங்களில் 12 மாவட்டங்கள் மேவுகை ஆகுமாறு சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர்கள் மற்றும் ஏனைய வைத்தியசாலைகளின் சிறுவர்களிற்கு நோயாளர் பராமரிப்பு சேவையை வழங்கியிருந்தது. 2018 மார்ச் 12 திகதி ஒக்சிஜன் சிலிண்டர் மற்றும் அதன் பொருத்தி களைந்து இயந்திரத்தினுள் இழுக்கப்பட்டு சென்று இருகிய காரணத்தால் இயந்திரத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளதால் செயலற்றிருந்ததுடன் ரூபா 17.6 மில்லியனான தொகையை செலுத்தி திருத்த வேலைகளை | ஒக்சிஜன் சிலிண்டர் இயந்திரத்தினுள்ளே இழுக்கப்பட்டு சென்றதனால் இயந்திரம் 2018.03.12 திகதி செயலிழந்தது எனவும், ஒக்சிஜன் சிலிண்டரை அகற்றி திருத்தி 2018.10.09 திகதி ஒப்படைக்கப்பட்டது எனவும், இயந்திரம் மீண்டும் 2018.10.13 திகதி செயலிழந்தது எனவும், அக் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் 23 எனவும், இந்த இயந்திரத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் பொது 283 இன் ஆரம்ப அறிக்கை மற்றும் 284 | திருத்தத்தின் பின்னர் 04 நாட்கள் மாத்திரம் இயந்திரத்தை செயற்பட்டுத்தி உள்ளதுடன் இந்த திருத்தத்திற்காக செலுத்திய ரூபா 17.6 மில்லியனான தொகையை பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் இடமிருந்து அறவிட வேண்டியதுடன் இயந்திரத்தை விரைவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு 2018 மார்ச் 15 திகதி வைத்தியசாலைக்கு ஒப்படைத்திருந்த போதும் 2018 மார்ச் 16 திகதி மீண்டும் செயலிழந்திருந்தது. அத் திகதி முதலே இயந்திரம் பயன்பாடின்றி விளைவற்று நிலவியது. இதன் பிரகாரம் திருத்த வேலைகளிற்கு செலுத்திய தொகை விளைவற்றதாக இருந்ததுடன் 04 ஆண்டுகளை கடந்திருந்த போதும் 2022 திசெம்பர் 31 திகதியன்றும் இந்த இயந்திரத்தை உண்மை நிலைக்கு கொண்டுவர அல்லது புதிதாக **MRI** இயந்திரமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் நோயாளர்கள் கடும் கஷ்டத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்ததாக அவதானிக்கப்பட்டது. | அறிக்கை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, இந்த இயந்திரத்தை பராதீனம் செய்ய மேலதிக செயலாளர் கட்டுப்பாடு (1) இனால் குறித்த குழுவை நியமித்துள்ளதுடன் குழுவின் பரிந்துரை பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொள்வதாக. | |

## 2.11 சர்ச்செக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்தை மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், அரச வைத்தியசாலைகளில் அத்தியவசிய மருந்துகளை தொடர்ந்து வழங்கவும், மருத்துவ வழங்கல் பிரிவிற்காக தேவையென இனங்கண்டிருந்த முகாமைத்துவ தகவல் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்தல், பெற்று பொருத்துதல், செயற்படுத்துதல், பயிற்றுவித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற மொத்த ஒப்பந்தமும், ரூபா **341** மில்லியனிற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கியிருந்ததுடன் இவ் விரிவுபடுத்தும் நடவடிக்கையை இடைநடுவே நிறுத்தி ''ஸ்வஸ்த'' பெயரில் புதிய விரிவான தகவல் முகாமைத்துவ தொகதியொன்றை ஸ்தாபிக்கும நடவடிக்கையின் மென்பொருள் அபிவிருத்திக்காக மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா **101.8** மில்லியனிற்கு வேறொரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. | காணப்படும் மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் தொகுதியின் பின் உத்தரவாத காலம் **2022.10.22** திகதியுடன் முடிவடைய உள்ளதுடன் இத் தொகுதியை ஆரம்பித்த **2008** ஆண்டை விட நிகழ்காலததில் தேவைப்பாடு சிக்கலானதுடன் காணப்படும் தொகுதியை மேம்படுத்துவதால் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காததால் கிரய நலன் பகுப்பாய்வு பின்னர் அது தொடர்பாக தொழிநுட்ப அறிவுள்ள நிபுணர்களின் பரிந்துரையின் மீது புதிய தகவல் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்ய கொள்கை ரீதியாக தீர்மானித்து நடைமுறைப் படுத்தியுள்ளதாக மற்றும் அதற்காக | புதிய தகவல் தொகுதி ஒன்றை அறிமுகஞ் செய்கையில் கடுமையான உத்தரவாதத்துடன் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளதுடன் இந்த ஸ்வஸ்த தொகுதியை வடிவமைக்கும் மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா **101.8** மில்லியன் மற்றும் **3** வருட உத்தரவாத காலமொன்றும் ஆவதாக. | |
| (ஆ) | கோரிக்கையொன்று இல்லாது **2023** ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் காலாவதியாவதற்கு அன்மித்திருந்த **12** வகை மருந்துகளிற்குரிய மருந்து இருப்பொன்று வைத்திய வழங்கல் பிரிவினால் **2022** திசெம்பர் **24** ஆம் திகதி பேராதெனிய போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு இருந்தது. இந்த மருந்துகள் அநேகமானவை குறித்த வைத்தியசாலையினுள் பயன்படுத்தாவை எனவும் அதன் காரணமாக அந்த மருந்துகளை பயன்பாட்டிற்கு எடுக்காது காலாவதியாகி வருகின்றது. | இந்த வைத்தியசாலையின் கோரிக்கையின்றி மருத்துவ வழங்கல் பிரிவினால் கிடைத்த மருந்து அன்பளிப்பிலிருந்து ஒரு பகுதி காலாவதியாக அன்மித்துள்ளதாகவும் அது பற்றி 2022.12.27 திகதி எழுத்துமூலம் அனைத்து விஷேட வைத்திய நிபுணர்களின் மின் அஞ்சலிற்கும், மருந்தகர்களின் கூட்டத்திலும் அறிவூட்டி உள்ளதுடன் 2023.01.30 திகதி மருந்தகர் வழங்கல் பிரிவிற்கும் அறிவித்துள்ளதாக, அவ்வாறே மருந்து இருப்புக்கள் காலாவதியாவது தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து முயற்சிகளையும் இது தொடர்பாக எடுத்துள்ளதாக. | காலாவதியான மருந்துகளை முறையாக களஞ்சியங்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | குருணாகலை போதனா வைத்தியசாலையில் **2021** ஆண்டினுள் அவசர கொள்வனவாக (**Local Purchase**) ரூபா **9.80** மில்லியன் பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அந்த ஆண்டினுள் அவசர கொள்வனவு செய்யும் போது கணனி தரவுத் தொகுதியிலுள்ள மதிப்பீட்டு விலையையும் விஞ்சி **9** மருத்துவ வழங்கல் உருப்படிகளை கொள்வனவு செய்திருந்ததுடன் அந்த வழங்கல்களின் விலைகளின் வித்தியாசம் **24** சதம் முதல் ரூபா **2,461** இடையில் காணப்பட்டது. மேலும் இந்த மதிப்பீட்டு விலையை | வருடாந்த மருந்து மதிப்பீட்டின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவினால் உரியவாறு மருந்து இருப்புக்களை பெற்றுக் கொடுக்காததால் மற்றும் பிரதேச கொள்வனவிற்காக தேவையான அங்கீகாரம் வழங்க தாமதித்தல் ஆகிய விடயங்களின் மீது களஞ்சியத்தினுள் மருந்து இருப்பு முடிவடைந்தவுடன் வைத்தியசாலையின் வாட்டுக்கள் மற்றும் அலகுகளால் மேற்கொள்ளப்படும் கோரிக்கையை | இந்த நியாயமற்ற விலை முரண்பாடு தொடர்பாக பரீட்சிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்சி கொள்வனவு செய்திருந்த மருந்துகளின் பெறுமதி ரூபா **7.84** மில்லியனாவதுடன் அந்த மருந்துகளை மதிப்பீட்டு விலையில் கொள்வனவு செய்திருப்பின் அதன் பெறுமதி ரூபா **2.64** மில்லியனானது. | மருந்தகர்களினால் அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்ளப்படுவதாக, மருந்துகளை கடன் அடிப்படையில் குறைந்த அளவில் கொள்வனவு செய்யும் போது விலைகளில் வித்தியாசம் காணப்படுவதாக, இந்த மருந்துகளில் அதிக அளவானவை உயிர் பாதுகாப்பு மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகள் ஆவதுடன், உரிய பெறுகைகள் முறையை பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக. | |
| (ஈ) | விடுமுறை தினமொன்றில் சேவையாற்றுவதற்காக சம்பளத்தில் **1/20** படிகளை பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக ஒரு நாளில் **08** மணித்தியாலங்களிற்கு அதிகமாக சேவையாற்றுவதன் மீது அந்த மேலதிக சேவைக் காலத்திற்காக மேலதிக நேர படிகளை செலுத்த ஏற்பாடொன்று இல்லாத போது வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலையினால் மூன்று நிர்வாக மருத்துவ அலுவலர்களிற்கு **2022** ஆண்டில் விடுமுறை தின சம்பளமாக **1/20** படிகளை செலுத்திய நாட்களில் **08** மணித்தியாலங்களை விட சேவையாற்றிய காலத்திற்காக ரூபா **560,177** ஆன தொகையொன்றை மேலதிக நேர படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. | சுகாதார செயலாளரின் **Ministry of Health /CA /138, 2013/06/26** திகதியுடைய சுற்றறிக்கை மூலம் “1/20 படிகளை பெறுவது ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களில் 6 மணித்தியாலம் சேவை ஆற்றுதலிற்கு மாத்திரமே” என குறிப்பிடப்பட்டு உள்ளதாக, மற்றும் ஞாயிறு / அரச விடுமுறை தினங்களில் 1/20 படிகளிற்கு மேலதிகமாக எஞ்சிய கடமை/சேவைக் காலத்திற்காக 4 மணித்தியால உச்சத்தின் கீழ் மேலதிக நேர படிகளை பெற்றுக் கொள்ள முடியுமென சுகாதார செயலாளரின் **MO-01-18/2019** இன் தொடர் இலக்கம் 10 ஊடாக தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக, அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக. | இவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டியதுடன் மேலதிக தெளிவுபடுத்தல்களை நிறுவன பணிப்பாளர் நாயகத்திடம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய சுகாதார மூலஉபாய பொது திட்டம் 2016 – 2025 இன் சுகாதார நிருவாகம் மற்றும் சுகாதார மனிதவளம் மீதான தொனிப் பொருளை பிரதான 2 பிரிவுகளில் இனங்கண்ட சுகாதார மனிதவள பிரச்சினையாக குறைந்த பட்ச ஊழியர் எண்ணிக்கை மற்றும் (**Norms**) மாதிரிகள் நியமப்படுத்திய பிரமாணங்கள் பிரகாரம் திருத்தப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்காக உத்தேச மூல உபாயங்களாக சுகாதார மனிதவள கொள்கைகளை அபிவிருத்தி செய்தல் காண்பிக்கப்ட்டுள்ளது. எனினும் சுகாதார அமைச்சினால் 2022 திசெம்பர் 31 திகதியன்றும் இந்தக் கொள்கையை தயாரித்து இருக்காததுடன் 2022 செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்கு வைத்த பணிகளாக காண்பித்திருந்த சுகாதார மனிதவள மூலஉபாய திட்டமும் மூன்றாம் வரைபு கட்டத்தில் நிலவியதாக அவதானிக்கப்பட்டது. | மனிதவள மூலஉபாய திட்டத்தை தயாரித்தல், மனிதவள முகாமைத்துவ ஒருங்கினைப்பு பிரிவின் மூலம் மேற்கொள்வதாக, 2020 - 2030 திட்டத்தை வரைபு செய்துள்ளதுடன் அதன் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதாக. | திட்டமிட்டவாறு உரிய காலத்தினுள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 3.1.2 எதிபார்த்த நலங்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அரச நிறுவனமொன்றான பொறியியல் பணிகள் மீதான மத்திய மதியுரை பணியகத்தின் (**CECB**) மதியுரையின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் (**SEC**) நிர்மாணிக்கப்படும் ரூபா 583.78 மில்லியனான மதிப்பீட்டு பெறுமதியுடன் கூடிய சிலாபம் மாவட்ட பொது | 2019 மார்ச் மாதம் முதல் 2022 ஆண்டு முதலாம் காலாண்டு வரை நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை நிர்மாணம் தாமதமாவதற்கு காரணமாக இருந்ததுடன் பட்டியல் செலுத்தும் போது இடம்பெற்றுள்ள தாமதமும் | திட்டமிட்டவாறு உரிய காலததினுள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலையில் வைத்திய வாட்டு கட்டிடத் தொகுதியில் 2022 செப்டம்பர் 23 கணக்காய்வு திகதியளவில் கட்டமைப்பு ரீதியான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 2018 பெப்ரவரி 19 திகதி ஆரம்பித்திருந்த இந்த கருத்திட்டத்தின் 735 நாட்கள் ஒப்பந்த காலம் கணக்காய்வு திகதியளவில் 937 நாட்களால் விஞ்சி இருந்தது. | அதற்கு ஓரளவு பங்களிப்பு செய்துள்ளதாக, தற்போது கட்டிடத்தின் கட்டமைப்பு ரீதியான நிர்மாணங்களை மேற்கொண்டு வருவதுடன் இந்த நாட்களில் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் நிர்மாண மூலப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்து ஒப்பந்த தொகையினுள் குறித்த உருப்படிகளை மேற்கொள்ள முடியாமையும் சந்தையில் குறித்த மூலப்பொருட்கள் பற்றாக்குறையானதும் நிர்மாண பணிகள் மேலும் தாமதமாகி வருவதாக. | |
| (ஆ) | சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவிய கடுமையான இடவசதி பற்றாக்குயை மற்றும் அறுவை சிகிச்சை அறை மற்றும் தீவிர சிகிச்சை அலகொன்றையும் மிக விரைவில் ஸ்தாபிக்கும் தேவைப்பாடு காரணமாக சாதாரண கட்டிடமொன்றை நிர்மாணிக்க செல்லும் காலத்தை குறைத்துக் கொள்ள இரும்பு பயன்பாட்டுடன் தற்காலிக கட்டிடமொன்றை 06 மாத காலத்தினுள் நிர்மாணித்துக் கொள்ள திட்டமிட்டிருந்த போதும், 2022 செப்டம்பர் 23 கணக்காய்வு திகதியளவில் இக் கட்டிடத்தின் 02 ஆம் மாடியை பூர்த்தி செய்திருக்கவில்லை. இந்த தாமதத்திற்கு ஒப்பந்ததாரரின் கவனயீனம், திட்டம் தயாரிக்க முன்னர் உரியவாறு தேவைப்பாட்டை இனங்காணாததால் பின்னர் திட்டத்தை மாற்றுதல், நிர்மாண நிலத்தை பரிசோதித்து சாத்தியப்பாட்டு ஆவொன்று இன்றி திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், பட்டியல் செலுத்தும் தாமதங்கள் ஆகிய விடயங்கள் காரணமாக இருந்தன. அதன் விளைவாக ரூபா 85.18 மில்லியனான இந்த நிர்மாணத்தின் மதிப்பீட்டு செலவு ரூபா 131.95 மில்லியன் வரை அதிகரிக்க | இந்த அறுவை சிகிச்சை அறை மற்றும் வாட்டுடன்கூடிய கட்டிடத்தை ஆரம்ப திட்டத்தின் போது தீர்மானித்திருந்தது இரண்டு கட்டிடமாக நிர்மானிக்க ஆனதுடன் அதற்காக **SD&CC** நிறுவனம் அரச நிறுவனமொன்றாக இந்த கட்டிடத்தின் நிர்மாணம், திட்டமிடல் மற்றும் மதியுரை போன்ற அனைத்து விடயங்களையும் அந் நிறுவனத்திற்கு ஒப்படைக்க தீர்மானித்திருந்ததாக, திட்டம் தயாரிக்கும் போது உரிய அதிகாரிகளின் கருத்துக்களை முறையாக பெற்றுக்கொள்ளாது ஆரம்ப திட்டங்கள் தயாரிக்கப் பட்டதனால் உத்தேசிக்கப்பட்ட இரண்டு கட்டிடங்களை ஸ்தாபிப்பதற்காக தற்போது செயற்படும் நிலையில் உள்ள கட்டிடங்கள் சிலவற்றை உடைத்து அகற்றுவதற்கு உத்தேசித்தனால் அந் திட்டத்தை கைவிடுவதற்கு நேர்ந்ததாக, அதன் பிரகாரம் புதிய திட்டத்தை | கடமைகளை திட்டமிடும் போது அதற்கு தொடர்ப்புபட்ட அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் பிரேரனைகளை பெற்றுக் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் வழங்கிய ஒப்பந்தத்தை ஒப்பந்த காலத்தினுள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஒப்பந்ததாரர் 2021 மே 03 திகதி கோரியிருந்தமை அரச நிதி தேவையற்றவாறு அதிகமாக செலுத்தவும், நோயாளர் பராமரிப்பு சேவையை வழங்குதல் தடைப்படவும் காரணமாக அமைந்ததாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக வைத்தியசாலையில் அறுவை சிகிச்கை, களஞ்சிய இடவசதிகளில் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாகவும் வைத்தியசாலைக்கு வழங்கயிருந்த வைத்திய உபகரணங்கள் மற்றும் வழங்கல்கள் (**Aeromisr /Drug Nebulizer kit**) கட்டில், மெட்டை போன்ற பல பொருட்கள் நிர்மாணம் கைவிடப்பட்ட கட்டிடத்தில் விராந்தைகளில் பாதுகாப்பின்றி குவித்து வைக்க நேரிட்டிருந்தது. | தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது 2020.10.02 திகதியாகுமென, அதன் போதும் ஒப்பந்த காலம் விஞ்சி 28 மாதங்கள் கடந்து உள்ளதாக, கணக்காய்வு திகதியளவில் முன்று மாடியுடன் கூடிய கட்டிடத்தின் முதலாம் மாடி மற்றும் முன்றாம் மாடி நிர்மாணங்களை பூர்த்தி செய்து வைத்தியசாலைக்கு ஒப்படைத்துள்ளதுடன், இரண்டாம் மாடியின் நிர்மாணங்கள் 75 சதவீதம் அளவு பூர்த்தி செய்துள்ளதாக, ஆரம்ப மதிப்பீட்டு செலவிற்கு அடிப்படையாகியிருந்தது வெவ் வேறாக இரண்டு கட்டிடங்கள் நிர்மாணிப்பதாக, அதன் பிரகாரம் முன்று மாடி கட்டிடத்தில் மதிப்பீடு ரூபா 131.95 மில்லியன் வரை அதிகரித்துள்ளதாக, வைத்தியசாலைக்கு கிடைத்திருந்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் வழங்கலகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கணக்காய்வினால் சுட்டிக்காட்டியதன் பின்னர் உரிய வாறு காப்புச் செய்ய முடியுமான விதத்தில் மற்றும் பூட்டுக்களை இடமுடியுமானவாறு அந்த களஞ்சிய வளவை தயாரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக. |

### 3.1.3 எதிபார்த்த நலங்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுகாதார அமைச்சினால் செயற்படுத்திய | | |

இலங்கை புற்றுநோயாளர்களுக்கு உயர் தொழிநுட்ப கதிர் சிகிச்சை அளிப்பதற்காக அதி உயர் நிலையிலான கதிர் உபகரணங்களை வழங்குவது தொடர்பான கருத்திட்டத்தின் 01 கட்டத்தின் கீழ் கண்டி தேசிய வைத்தியசாலையில் புதிய புற்றுநோய் சிகிச்சை அலகிற்கு கிரயம் ரூபா 597.65 மில்லியனான **Elekta Synergy Platform Linear Accelerator (LINAC)** மற்றும் **Elekta Compact Linear Accelerator** இயந்திரத்தை 2021 ஆண்டில் வழங்கி இருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) புதிய புற்றுநோய் சிகிச்சை அலகின் வாயு பதனாக்கித் தொகுதியை பொருத்துவது 02 கட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசித்திருந்த போதும் அத் தொகுதியை பொருத்துவதற்கு முன்னர் அந்த அலகில் பொருத்த உத்தேசித்திருந்த **Linear Accelerator** இயந்திரம் குறித்த நிறுவனத்தினால் வழங்கியிருந்ததால் அந்த இயந்திரத்தை பொருத்துவதற்கு வாயு பதனாக்கித் தொகுதி அத்தியவசியமானதால் ரூபா 89.92 மில்லியன் கிரயமொன்றை மேற்கொண்டு **Backup Chiller** இயந்திரத்தை பயன்படுத்தி மையப்படுத்தப்பட்ட வாயு பதனாக்கித் தொகுதியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இயந்திரத்தை வழங்கிய நிறுவனத்தால் அதற்கு மேலதிகமாக **Chiller** இயந்திரம் ஒன்றை ஸ்தாபிப்பது பொருத்தமென 2020 திசெம்பர் 22 திகதிய கடிதம் மூலம் வைத்தியசாலை பணிப்பாளரிற்கு அறிவித்திருந்த போதும் இதுவரை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த வாயு பதனாக்கித் தொகுதியின் கொம்பிரசர் இயந்திரம் 2022 நவம்பர் 14 திகதி முதல் செயலிழந்திருந்ததுடன் அதனை திருத்த ரூபா 12.66 மில்லியன் மதிப்பீடொன்றை முன்வைத்து அதற்கான ஏற்பாட்டை ஒதுக்கி | மேலதிக **Chiller** இயந்திரமொன்றை ஸ்தாபிக்க தேவையான துரித செயற்பாடுகளை எடுக்குமாறும் தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குமாறும் 2021.10.12 திகதி இடம்பெற்ற நிர்மாண பணிகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலில் வழியுரித்தியதாக, அரச சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்காத வழங்குனர் ஒருவரால் பிரதான ஒப்பந்ததாரரான **CECB** நிறுவனத்தினால் வாயு பதனாக்கித் தொகுதியை கொள்வனவு செய்துள்ளதால் இந்த திருப்தியற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக, ஒப்பந்த நிறுவனத்தினால் பெறுகைகள் சட்ட திட்டங்களிற்கு மாற்றமாக மதிப்பீட்டுத் தொகையின் 50 சதவீத முற்பணத் தொகையை முற்பண செயலாற்றுகை பிணைமுறி ஒன்றை வழங்காது கோருவதாக. | இது தொடர்பாக முழுமையான முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதும் 2023 மார்ச் 20 திகதி வரையும் அதனை திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | புதிய புற்றுநோய் அலகிற்கு கிரயம் ரூபா 364.09 மில்லியனான Elekta Synergy Platform LINAC இயந்திரமொன்றை பொருத்தி அவற்றில் 80 சதவீத தொகையை அதாவது ரூபா 293.37 மில்லியன் தொகையை 2019 ஜுன் 28 மற்றும் 2019 ஒக்டோபர் 25 திகதி செலுத்தப்பட்டு இருந்தது. அதனூடாக பக்க விளைவுகளை குறைத்து புற்றுநோய் பிரதேசத்தை மற்றும் அதன் எல்லையை சரியாக இனங்கண்டு கதிர்களை மிகச் சரியாக புற்றுநோயிற்கு மாத்திரம் அனுப்பும் இயலுமை காணப்படுவதுடன் இந்த இயந்திரத்தை பயன்படுத்தி 2021 நவம்பர் 11 திகதி முதல் 2022 நவம்பர் 14 திகதி வரை 771 நோயாளர்களிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு 50 இற்கும் 60 இற்கும் இடையிலான நோயாளர் அளவிற்கு சிகிச்சை அளிக்கும் இயலுமை காணப்பட்டது.<br>அவ்வாறாயினும், இயந்திரத்தை பொருத்தியுள்ள பங்கரினுள் உள்ள மேலுள்ள பந்தியில் குறிப்பிட்ட மையப்படுத்திய வாயு பதனாக்கித் தொகுதியின் கொம்பிரசர் இயந்திரம் செயலிழந்துள்ள காரணத்தால் இந்த இயந்திரம் 2022 நவம்பர் 14 திகதி முதல் நோயாளர் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலைக்கு ஆகியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | கிரயம் ரூபா 233.55 மில்லியனான Elekta Compact LINAC இயந்திரமொன்றை 2021 ஏப்ரல் 06 திகதி புதிய புற்றுநொய் அலகில் ஸ்தாபித்திருந்ததுடன் அத் திகதி முதல் 2023 மார்ச் 20 திகதி வரை அதாவது 23 மாத காலமாக செயலற்று நிலவியதாகவும் அதன் காரணமாக அந்த இயந்திரத்தின் | மேல் பந்தியின் கீழ் குறிப்பிடப்படும் வாயு பதனாக்கித் தொகுதி செயலிழந்துள்ள காரணத்தால் அதனை திருத்தும் வரை சிகிச்சை நடவடிக்கைகளை ஆரம்பிக்க இயலாதுள்ளதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவாத காலமும் இயந்திரம் செயலற்று உள்ள போது முடிவடையும் ஆபத்தொன்று காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | **2019** பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் வைத்திய உபகரண மதிப்பீட்டு குழுவின் தீர்மானம் பிரகாரம் ஹம்பந்தொட்ட மற்றும் மஹரகம அபேக்ஷா ஆகிய இரண்டு போதனை வைத்தியசாலைகளிற்காக இரண்டு **Digital fluoroscopy** இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் மூலம் **2019** ஆண்டில் பெறுகைகள் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உபகரண கிரயம் ரூபா **172.40** மில்லியன் மற்றும் ஸ்தாபிக்கும் மற்றும் அறையை மேம்படுத்தும் கிரயம் ரூபா **4** மில்லியனான இந்த உபகரணம் **2** வருட உத்தரவாத காலத்தின் கீழ் **2020** ஒக்டோபர் **16** திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. கட்டளை நிபந்தனைகளின் பிரகாரம் இயந்திரத்தை **2020** திசெம்பர் **25** திகதிக்கு முன்னர் வழங்க வேண்டிய போதும் இந்த இயந்திரத்தை உயிரியல் வைத்திய பொறியியல் சேவை பிரிவின் பிரதான களஞ்சியத்திற்கு **2021** பெப்ரவரி **12** திகதி வழங்கப்பட்டிருந்தது. ஹம்பந்தொட்ட போதனா வைத்தியசாலையில் பொருத்துவதற்கு எதிர்பார்த்திருந்த இயந்திரத்தை கராபிட்டிய வைத்தியசாலையில் பொருத்தி இருந்ததுடன் மஹரகம் வைத்தியசாலையில் இயந்திரத்தை நிலைப்படுத்தும் இடத்தின் நிர்மாணம் **2023** மார்ச் **31** திகதியளவிலும் முடிவுறுத்தி இருக்காததுடன் இந்த இயந்திரத்தின் உத்தரவாத காலம் **2023** பெப்ரவரி **13** திகதி முடிவடைந்திருந்தது. | இப் பெறுகை தொடர்பாக முறையீடு சமர்பிக்கப்பட்டு இருக்காததால், அமைச்சின் பெறுகைகள் குழு தீர்மானம் 2020.06.19 திகதி ஒப்பந்த நிர்வாகம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக அமைச்சின் உயிரியல் பொறியியல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 3.1.4 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கேகாலை பொது வைத்திசாலைக்காக 04 மாடிகளுடன் கூடிய அவசர சிகிச்சை அலகொன்றை | இந்த கருத்திட்டத்தை சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவை 11) | கருத்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்த விரைவில் ஒழுங்கான முயற்சி |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்க 2018 ஆண்டில் ரூபா 320.10 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருந்தது. எனினும் 2019 ஏப்ரல் 16 திகதி பூர்த்தி செய்யவிருந்த இந்த கருத்திட்டத்தை கட்டிடத்தின் சிலப் மட்டம் வரை நிர்மாணித்த பின்னர் 2019 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்ததாரரினால் கருத்திட்டத்தை கைவிட்டு 03 ஆண்டுகளை விஞ்சிய காலம் கடந்திருந்த போதும், மீண்டும் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்காததன் மீது அதன் போது செலவிட்டிருந்த வேலைப் பெறுமதியான ரூபா 37.62 மில்லியனான தொகை விளைவற்று இருந்தது. | இன் கீழ் செயற்பட்டதுடன் சுகாதார செயலாளரினால் இந்த பெறுகைகள் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தற்போதே நடவடிக்கை எடுத்துள்ளதாக. | எடுக்க வேண்டியதுடன் இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்பு வாயந்த தரப்பினர் தொடரபாக செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலைக்காக ரூபா 501.21 மில்லியனான மதிப்பீட்டு தொகைக்கு 609 நாட்களினுள் பூர்த்தி செய்ய 2018 சனவரி 15 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு இருந்த அவசர விபத்து சிகிச்சை அலகின் நிர்மாணம் 2022 செப்டம்பர் 23 கணக்காய்வு திகதியளவிலும் கைவிடப்பட்டு இருந்ததுடன் நிர்மாணத்தின் ஆரம்ப கட்டமைப்பு ரீதியான நிர்மாணம் 2 பகுதிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாண தாமதங்கள் காணப்படல், பொறியியல் ஆலோசகரின் அறிவுறுத்தல்களிற்கு மாற்றமாக செயற்படல் போன்ற காரணங்களால் குறித்த நிர்மாண ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக 2021 ஏப்ரல் 22 திகதிய கடிதம் மூலம் சுகாதார அமைச்சின் செயலாளர் ஒப்பந்ததாரருக்கு அறிவித்திருந்த போதும் அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததால் அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. | இந்த பணிக்காக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக, பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்து சேவை மூலம் சட்ட நடவடிக்கை ஏற்பாடாகிக் கொண்டு வருவதாக. | - மேற்படி - |

**3.2 செயற்பாட்டு பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா மற்றும் அநுராதபுர பிரதேச | கணக்காய்வு சந்தர்ப்பத்தில் | அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ வழங்கல் பிரிவுகளில் மற்றும் மீரிகம ஆதார வைத்தியசாலை, அநுராதபுர போதனா வைத்தியசாலை வளவில் மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனைகளின் போது 25 பாகை செல்சியஸை விட குறைந்த வெப்பத்தில் வைக்க வேண்டிய 17 வகை மருந்துகள் 30 பாகை செல்சியஸை விட அதிக வெப்பத்துடன் கூடிய களஞ்சியங்களில் வைக்கப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. இந்த மருந்துகளிற்கு இடையில் ஒவ்வாமை, உயர் குருதியமுக்கம் நோய்களிற்கு பயன்படுத்தும் மருந்து மற்றும் நோய் எதிர்ப்பு மருந்து காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | அநுராதபுர போதனா வைத்தியசாலையின் **B** களஞ்சியத்தில் வெப்பநிலை செல்சியஸ் 25 பாகையை விஞ்சியிருந்ததால் அச் சந்தர்ப்பத்தில் அப் பிரச்சினையை தீர்த்துள்ளதுடன் **C** களஞ்சியத்தில் 03 வாயு மதனாக்கி இயந்திரங்கள் அதிக பழுதடைந்துள்ளதால் புதிதாக கொள்வனவு செய்ய ஏற்பாடு கோரப்பட்டுள்ளதாக மற்றும் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் வாயு மதனாக்கி இயந்திரத்தின் பிரச்சினையை உரியவாறு தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாக. | மருந்துகளிற்கும் உரிய குளிர் தன்மையை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஜுன் 27 திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்த அலகொன்றின் விலை ரூபா 98 ஆன Propofol injection BP (SR இலக்கம் - 01500301) தடுப்பூசி அலகுகள் 171,875 இலிருந்து 131,885 அலகுகள் 2021 ஜுலை 06 திகதி வெயாங்கொட களஞ்சியத்திற்கு அனுப்பியிருந்த போதும், ரூபா 12.92 மில்லியன் பெறுமதியான இந்த இருப்பு 2022 நவம்பர் 30 திகதி காலாவதியாகி இருந்ததுடன் அது கொள்வனவு செய்த மொத்த இருப்பின் 77 சதவீதமான உயர் பெறுமானமாக இருந்தது. | வைத்தியசாலை மதிப்பீட்டின் பிரகாரம் 171,875 அலகுகள் கிட்டத்தட்ட 7.4 மாதங்களிற்கு போதியதாவதுடன் தொற்று காலத்தினுள் வைத்தியசாலைகளில் அநேகமான அறுவை சிகிச்சைகளை மட்டுப்படுத்தி இருந்ததால் இந்த மருந்தின் பயன்பாடு குறைவடைந்ததாக மற்றும் எஞ்சிய அனைத்து கட்டளைகளையும் இடை நிறுத்த 2021 ஆண்டு ஜுலை மாதமளவில் நடவடிக்கை எடுத்ததாக. | மருந்துகள் காலாவதியாவதை முடியுமான அளவு குறையுமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரச வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்கப்பட்ட மருத்துவ வழங்களிற்கு இடையில் ரூபா 349.02 மில்லியன் பெறுமதியான மருந்துகள், அறுவை மற்றும் இரசாயனகூட பொருட்கள் 2022 ஆண்டில் தரமற்றதன் மீது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் இன்னும் ரூபா 31.75 மில்லியன் பெறுமதியான மருந்துகள் தரமற்றதால் தற்காலிகமாக | 2020 ஆண்டின் நடுப் பகுதியிருந்து வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகிக்க முன்னர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் தகைமை பரிசோதனைக்கு அனுப்புவதனை ஆரம்பித்ததுடன் காணப்படும் வசதிகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட எழுமாறான | வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்க முன்னர் தரமற்றவைகளை இனங்காண முடியுமான வகையில் இரசாயனகூட பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பவனையை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | மாதரி அளவை எதர்காலத்தில் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஈ) | மருத்துவ வழங்கள் பிரிவினால் வைத்தியசாலைகளிற்கு மருந்துகளை விநியோகிக்க முன்னர் தேசிய மருந்தக ஒழுங்கமைப்பு அதிகாரசபையின் கீழ் செயற்படும் தேசிய மருந்துகள் பாதுகாப்பு இரசாயனகூடம் மூலம் தகைமையை பரிசோதிக்கும இயலுடை இல்லாதிருந்தது. அதன் காரணமாக மருந்துகள் தரமற்றது என அறிக்கையாகும் சந்தர்ப்பத்தின் போது அந்த மருந்துகளில் அதிகளவு நோயாளர்களினால் பயன்படுத்தி முடிந்துள்ளதென பல வருடங்களாக அவதானிக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டிலும் போதியவில் அந் நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள மருந்துகளை வைத்தியசாலைக்கு விநியோகிக்க முன்னர் தகைமையை பரிசோதிக்கும் முறைமையொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | 2020 ஆண்டின் நடுப் பகுதியிருந்து வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகிக்க முன்னர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் தகைமை பரிசோதனைக்கு அனுப்புவதனை ஆரம்பித்ததுடன் காணப்படும் வசதிகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட எழுமாறான மாதரி அளவை எதர்காலத்தில் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்க முன்னர் தரமற்றவைகளை இனங்காண முடியுமான வகையில் இரசாயனகூட பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். |
| (உ) | 2004 மற்றும் 2005 ஆண்டுகளில் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒப்படைத்திருந்த மருத்துவ வழங்கல்களின் பற்றாக்குறைக்கு உரியதாக அக் கூட்டுத்தாபனத்தால் குறித்த தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 6,059,463 இனை 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் அறவிட இயலாதிருந்தது. | உடன்படிக்கை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதென சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக மற்றும் இதற்காக போக்குவரத்து ஒப்பந்ததாரர் பொறுப்பேற்க வேண்டுமென தீர்மானித்துள்ள விசாரணை அறிக்கை வெளியிடப்படும் வரை கடந்துள்ள காலம் தொடர்பாக ஏதேனும் அலுவலர் பொறுப்பேற்க வேண்டுமா என தீர்மானிப்பது கடினமாகும். | இது தொடர்பாக முறையான கண்டறிதல் ஒன்றை மேற்கொண்டு குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்காக பொறுப்வாய்ந்த அலுவலர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2009 முதல் 2020 ஆண்டு வரையான 11 ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய மருந்தக களஞ்சியங்களில் இடம்பெற்றுள்ள மருந்து சேதம் மற்றும் நட்டங்களை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் அறவிட அல்லது பதிவழிக்க முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 285 சம்பவங்களிற்கு உரியதான ரூபா 452 மில்லியனான | மருத்துவ வழங்கல் பிரிவின் தரமற்ற மருந்துகளின் பராதீன நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்து வருவதுடன் காலாவதியான மருந்துகளை அகற்ற தற்போது நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக. | மருந்துகளின் சேதம் மற்றும் நட்டத்தை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் அறவிடல் அல்லது பதிவழித்தலிக்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேதம் மற்றும் நட்டங்களை 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதனுள் 05 ஆண்டுகளிலும் குறைந்த ரூபா 64.8 மல்லியனான 37 சம்பவங்களும் 05 இற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான ரூபா 294.5 மில்லியனான 146 சம்பவங்களும் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 92.9 மில்லியனான 102 சம்பவங்களும் உள்ளடங்கி இருந்தன. | | |
| (எ) | மருத்துவ வழங்கள் பிரிவிற்கு சொந்தமாக இருந்த இலக்கம் 53 களஞ்சியம் 2016 மே 18 திகதி வெள்ளத்தில் மூழ்கியதன் பின்னர் ஏற்பட்டுள்ள சேதத்திலிருந்து மேலும் அறவிட அல்லது பதிவழிக்கவுள்ள தொகை ரூபா 199.26 மில்லியனாகும். அதன் பிரகாரம் 06 ஆண்டுகளிற்கு அதிக காலமாக இத் தொகை தீர்க்கப்படாதது தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் குறித்த அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக உறுதி செய்து கொள்ள, நிதிப்பிரமாணம் 104 (3), 104(4) மற்றும் 109 கீழான அறிக்கைகள் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தால் 2015 ஆகஸ்ட் 20 திகதி முதல் 2016 ஆகஸ்ட் 20 வரையான காலப் பகுதிக்காக பெற்றுக் கொண்ட ரூபா 400 மில்லியன் பெறுமதியான காப்புறுதி காப்பிற்குரிய நிபந்தனைகள் உள்ளிட்ட காப்புறுதி ஒப்பந்தம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | காப்புறுதி காப்பின் பிரதியொன்று தற்போது மருத்துவ வழங்கல் பிரிவிடம் உள்ளதுடன் எதிர்காலத்தில் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் ஆரம்ப அறிக்கை, இறுதி அறிக்கை, நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான கோரிக்கை பத்திரம் மற்றும் காப்புறுதிக் காப்பிற்குரிய நிபந்தனைகள் உள்ளிட்ட காப்புறுதி ஒப்பந்தம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | இந்த சேதம் தொடர்பாக உரித்தாக வேண்டிய காப்புறுதி காப்பு ரூபா 320 மில்லியனான போதும் கிடைத்துள்ள தொகை ரூபா 206.31 மில்லியனாகும். அதன் பிரகாரம் மேலும் காப்புறுதி நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 113.69 மில்லியனான தொகையை அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்ததற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மேலும் காப்புறுதி நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுத்ததற்கான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மாதிரி கணக்காய்வு பரிசோதனையாக ரூபா 12.36 மில்லியனான மருந்து பற்றாக்குறை சம்பவங்கள் 34 இற்குரிய 05 அவதானிப்பு பத்திரங்களை பரிசோதித்ததுடன் அவற்றில் அவதானிக்கப்பட்ட மருந்து இருப்புக்கள் விநியோகித்தல் முறையாக மேற்கொள்ளாமை பற்றாக்குறை ஏற்பட பிரதான காரணமாக உள்ளதாக. எவ்வாறாயினும் இந்த அவதானிப்பு பத்திரம் விநியோகிக்கப்பட்டு ஆண்டு 9 – 12 இற்கிடையிலான காலமொன்று கடந்திருந்த போதும் அது தொடர்பாக பொறுப்வாய்ந்த அலுவலர்கள் குறித்த செயற்பாடுகள் தொடர்பாக அவதானிப்பு பத்திரங்களை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்த இருப்புக் கணிப்பீட்டின் போது முன்வைக்கப்பட்ட அவதானிப்பு பத்திரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஆரம்ப கண்காணிப்பு சபை 2023/02/09 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதாக. | பொறுப்புவாய்ந்த அலுவலர்களால் அவானிப்பு பத்திங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சரியான தகவல்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (ஒ) | மருந்து மற்றும் அறுவை சிகிச்கை பொருட்களின் காலாவதியாதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது பெறுமதி ரூபா 77.82 மில்லியனான காலாவதியான இருப்புக்கள் 11 ஆண்டுகளிற்கு அதிக காலமாக களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | தரமற்ற மருந்து பராதீன நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்து வருவதுடன் கலாவதியான மருந்துகளை அகற்றுவதற்காக தற்போது நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக. | தரமற்ற மருந்துகளை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | மருந்து இருப்புக்கள் காலாவதியாக முன்னர் ஆக்ககூடியவாறு பயன்படுத்த பின்பற்ற வேண்டிய படிமுறைகள் தொடர்பாக 2021 நவம்பர் 08 திகதிய சுகாதார செயலாளரின் இலக்கம் 01/2021 கொண்ட உள்ளக சுற்றறிக்கை ஊடாக சுட்டிக் காட்டியிருந்த போதும் மருத்துவ வழங்கல் பிரிவினால் இதுவரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுகாதார செயலாளரின் இலக்கம் 01/2021 கொண்ட உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து நேரங்களிலும் நடவடிக்கை எடுப்பதாக. | சுகாதார செயலாளரின் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருந்து உற்பத்திக்கு முதலீட்டு கவர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள ஹம்பன்தொட்டை ஆரபொக்க தோட்டத்தில் மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்ட விசேட மருந்து உற்பத்தி வலையம் ஒன்றை ஸ்தாபிக்க ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியனான ஏற்பாட்டினால் அப் பணியை பூர்த்தி செய்யாது அவற்றின் 66 சதவீதம் ஏனைய 02 செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டு இருந்தது. | நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமையின் மீது குறித்த கருத்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமாகியதுடன் எஞ்சிய ஏற்பாடு வேலைகள் முடிவடைந்த ஏனைய கருத்திட்டம் ஒன்றிற்கு மாற்றப்பட்டதாக. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் குறித்த கருத்திட்டத்திற்காக ஆக்ககூடிய அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களினதும் பெறுகைகள் நடவடிக்கைகளிற்குரிய மொத்த நிர்வாக பொறுப்பு, அனைத்து வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளிற்குரிய பெறுகைகளை செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வைக்காக ஸ்தாபிக்கப்பட்ட பெறுகைகள் பிரிவிற்கு இணைக்கப்பட்ட மேலதிக செயலாளர் (பெறுகைகள்) உள்ளிட்ட ஏனைய ஆளணி அலுவலர்கள், அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அவசர சுற்றிவலைப்பு மற்றும் ஆரம்ப விசாரணை நடாத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு பிரிவின் அலுவலர்கள் மற்றும் அமைச்சின் மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் முறையான புலனாய்வு மற்றும் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் 2.2 பிரகாரம், பெறுகைகள் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பொறுப்பு அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுவதுடன், அவ் வழிகாட்டியின் 2.8 பிரகாரம் நியமிக்கப்படும் பெறுகைகள் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிற்கும் நி.பி 135 மற்றும் அ.பெ.வ. 2.4 பிரகாரம் அப் பெறுகைகள் நடவடிக்கைகளின் அதிகார ஒப்படைப்பு மேற்கொள்ளப்படுவதாக, மேற் குறிப்பிடப்படும் வழிகாட்டிகளிற்கு உரியதாக வெளியிடப்பட்டுள்ள பெறுகைகள் செயற்பாட்டுக் கோவையின் 2.7.4., 2.7.5., 2.7.7., 2.8.3., 2.8.4. மற்றும் 2.8.5. பிரிவுகளிற்கு இணங்கி அங்கு குறிப்பிடப்பட்டுள்ள கலவைக்கு இணங்கும் வகையில் அனைத்து | பெறுகைகள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சுயாதீன உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுக்காற்று தொடர்பான நிர்வாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் புலனாய்வு பிரிவின் அலுவலர்கள் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டு இருந்ததுடன் இந் நிலைமை பெறுகைகள் நடைமுறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் சுயாதீன தன்மையை பேணுவதற்கு மற்றும் பெறுகைகள் செயல்முறையில் ஏற்பட முடியுமான பல முறைகேடுகள் தொடர்பான வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் சுயாதீன பரிசோதனை மேற்கொள்வது தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்த முடியுமென கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாது. | பெறுகைகள் குழுக்களிற்கும் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, பெறுகைகள் பிரிவின் அலுவலர்கள் உள்ளடங்களாக பெறுகைகள் நடவடிக்கைளிற்காக தொடர்புபடும் அனைத்து அரசு அலுவலர்களும், கணக்காய்வில் குறிப்பிடப்படும் கடப்பாடுகளுடன் மோதுதல் (**Conflict of Interest**) இல்லாமை உள்ளடங்களாக பெறுகைகள் வழிகாட்டி 1.4 இல் குறிப்பிடப்படும் பெறுகைகள் நெறிமுறைகளிற்கு இணங்க சுயாதீனமாக செயல்படுவதாக வழிகாட்டி 2.12 பிரகாரம் வாக்குறுதி வளங்கி, அவ்வாறு செயற்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாமை இலஞ்சம் அல்லது ஊழல் தடுப்பு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் குற்றமாவதாக. | |
| (ஆ) | காலி புதிய மகப்பேற்று வைத்தியசாலைக்காக OT, ICU மற்றும் NICU இற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள், வழங்கல், ஸ்தாபித்தல், பரிசோதித்தல், பரீட்சித்துப் பார்த்தல், செயற்படுத்திக் காட்டுதல் மற்றும் பயன்பாட்டாளர் பயிற்சி மற்றும் பராமரிப்பு செய்வதற்குரியதான மதிப்பீட்டு கிரயம் யூரோ 2,659,630 இணை அடிப்படையாகக் கொண்டு 2021 செப்டம்பர் 27 திகதி கேள்வி மணு கோரப்பட்டு இருந்தது. 2022 பெப்ரவரி 18 திகதி முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை பிரகாரம் சாதகமான பதில் வழங்கிய 02 மணுதாரர்களில் குறைந்தபட்ச விலையை முன்வைத்த மணுதாரரிற்கு ஒப்பந்தத்தை யூரோ 2,554,253.78 தொகைக்கு ஒப்படைக்க 2022 மார்ச் 31 திகதி அமைச்சு | லொட் இலக்கம் 2.1 மற்றும் 2.2 இன் கீழ் உள்ள பத்து உபகரணங்களுக்காக தொடர்புடைய தனிப்பட்ட விவரக்குறிப்பு இணக்கப்பாடு இணைப்பில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளதாக, எந்தவொரு உற்பத்தி அல்லது உற்பத்தியாளரிற்காக இணையத்தில் உள்ள தொழில்நுட்பத் தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக மற்றும் பொதுவாக முழுமையற்றதாகவும் இருக்கலாம எனவும் அரசாங்க பெறுகைகள் செயல்முறைக்கு எவ்வித தாக்கமும் ஏற்படவில்லையென. | இது தொடர்பாக முறையான முழுமையான விசாரணையொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் தொடர்பாக தேவையான செயற்பாடுகள் எடுக்க வேண்டும். |

பெருகைகள் குழு “**A**” தீர்மானத்திருந்தது. பெறுகைகளிற்கு உரியதாக 2022 பெப்ரவரி 18 திகதி வழங்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கை பிரகாரம் அனைத்து தொழில்நுட்ப பிரமாணங்களையும் பூரணப்படுத்தி செய்துள்ளதா குறிப்பிடப்பட்டிருந்த போதும், மேற்படி ஒப்பந்தத்தை ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்ட நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த கேள்வி மனு ஆவணங்களில் உள்ளடங்கிய கெட்டக் மற்றும் அந்த உபரணங்கள் தொடர்பாக இணையத்தின் ஊடாக பெற்றுக் கொண்ட தகவல்கள் அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது LOT 2.1 இன் 05 உறுப்படிகள் மற்றும் LOT 2.2 இன் 05 உறுப்படிகள் தொழிநுட்ப பிரமாணங்கள் 61 இனை பூர்த்தி செய்ய இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் தொழிநுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் அவ் அனைத்து பிரமாணங்களையும் குறித்த நிறுவனம் பூர்த்தி செய்துள்ளதாக காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2 (அ) மற்றும் (ஏ) இன் கீழ் குறிப்பிடப்படும் பெறுகைகள் செயற்பாடுகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய நோக்கங்கள் அடையப் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) போட்டி கேள்வி மனு கோரலின் கீழ் சுகாதார அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களுக்காக 2022/2023 ஆண்டுகளுக்குரிய சுத்திகரிப்பு சேவை வழங்கும் ஒப்பந்தம் 2022 செப்டம்பர் 15 திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு இரசாயன பொருட்கள் உரிய தரத்தில் உள்ளதென ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் ஒன்றை

பெறுகைகள் நிபந்தனைகள் பிரகாரம் இரசாயனகூட பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கும் தேவையொன்று இல்லாததுடன் நியமம் மீதான உறுதிப்படுத்தல் தேவைப்படுவதென, கேள்விமனு நிபந்தனை 2.18(v) பிரகாரம் நிறுவனம் 2022.12.10 திகதிய கடிதம் மூலம் அறிவூட்டப்பட்டதுடன் அவர்களில் வயது 65 யை

இந்த பெறுகையின் போது பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக புலனாய்வு ஒன்றை நடத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினரிற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும், கேள்வி மனு நிப்பந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை

பெற்றுத்தருவதன் கீழ் வழங்க தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் 2022 செப்டம்பர் 16 ஆம் திகதி ஒப்பந்ததாரர் பிரதி பணிப்பாளர் நாயகம் (வழங்கல்) இற்கு இரசாயனகூட அறிக்கையின் பெறுவேறுகளிலிருந்து ஒரு பங்கு அகற்றப்பட்ட ஒரு இரசாயனகூட பரிசோதனை அறிக்கையொன்று மற்றும் இரசாயனகூட பரிசோதனை அறிக்கை இல்லாத “Material Safety Data Sheets” ஐந்து மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கேள்வி மணு நிபந்தனை 2.18 (v) பிரகாரம் ஊழியர்களின் ஆக்ககூடிய வயது எல்லை 65 ஆனபோதும் சுவசிரிப்பாய கட்டிடத் தொகுதிக்காக ஈடுபடுத்தி இருந்த சுத்திகரிப்பு பணியின் ஈடுபட்டிருந்த 44 ஊழியர்களில் 16 ஊழியர்கள் வயது எல்லை 65 வயதை விஞ்சி இருந்தன. கேள்வி மணு நிபந்தனை 4.75 (i) பிரகாரம் உத்தியோகபூர்வ அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டிய போதும் சுவசிரிப்பாய கட்டிடத் தொகுதியல் வேலையில் ஈடுபட வேண்டியிருந்த 44 ஆன மொத்த ஊழியர் எண்ணிக்கையின் 17 ஊழியர்களிற்காக மாத்திரம் உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கப்பட்டு இருந்ததாகவும் அந்த ஊழயர்கள் உததியோகபூர்வ அடையாள அட்டையை அணிந்திருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. பெறுகைகளின் போது இணங்கிய வியாபார சின்னத்துடன் கூடிய உபகரணங்களை மாத்திரம் பொறுப்பேற்க அல்லது வழங்கப்படும் உபகரணங்களை பரீட்ச்சித்து உண்மையாக வழங்கப்பட்ட வியாபார சின்னத்தை குறித்து பொறுப்பேற்க ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பெறுகைகள் தீர்மானம் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம் ஒப்பந்த நிறுவனத்தினால் வேலை பரிசோதகர்களிற்கு மற்றும் தொழிலாளர்களிற்கு செலுத்து ஒப்புக் கொண்ட நாள் சம்பளம் மற்றும் மேலதிக நேர விஞ்சிய ஊழியர்களில் ஒரு சிலரை அகற்றி உள்ளதாக, கேள்விமணு நிபந்தனை 4.75(i) பிரகாரம் 2022.12.13 திகதிய கடிதம் மூலம் நிறுவனத்தை அறிவூட்டியுள்ளதுடன் மேலும் இது தொடர்பாக முன்னேற்மொன்றை காட்டவில்லை எனில் ஒப்பந்த பிரகாரம் அதற்குரிய தண்டப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக, குறித்த வியாபாரக் சின்னத்தின் கீழ் மாத்திரம் பண்டங்களை சமர்ப்பிக்க வேண்டுமென நிறுவனத்திற்கு அறிவித்ததுடன் அவர்களால் அதற்கு பதிலாக குறித்த பண்டங்கள் உரிய வியாபாரம் சின்னத்தின் கீழ், தற்போதைய விலைகளின் பிரகாரம் வழங்க மற்றும் தேவையான அளவுகளை உரிய தினத்தில் ஒரே முறையில் தொகையாக பெற்றுக் கொள்ளும் கடினம் தொடர்பாக குறிப்பிட்டு வேறு வியாபார பெயரின் கீழ் குறித்த பண்டங்களை வழங்க அங்கீகாரத்தை கோரியுள்ளதாக. கேள்விமணு ஆவணங்களில் குறிப்பிடப்படும் பெறுமானங்களிற்கு புறம்பாக குறைவாக ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்து இருப்பின் அத்தொகையை மீண்டும் அறவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக.

எடுப்பதாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களிடம் உறுதி செய்து கொள்ள வேண்டும், பெறுகைகள் நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்ததாரர் உடன்பட்ட பிரகாரம் வழங்கப்படாத உபகரணங்களுக்காக கொடுப்பனவு செய்யக் கூடாது, பெறுகைகள் தீர்மானங்கள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம் உடன்பட்ட சம்பளம் மட்டும் மேலதிக நேர படிகளை செலுத்துவதாக உறுதி செய்து கொண்ட பின்னர் மாத்திரம் ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்த வேண்டியதுடன் உரிய உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், தரமற்ற இரசாயன பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யக் கூடாததுடன் உரிய தரத்திலான இரசாயன பொருட்களை பெற்றுக் கொள்ள பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வீதங்களை செலுத்துவதில்லை என அவதானிக்கப்பட்டது. 2022 திசெம்பர் 30 திகதி 6 இரசாயன பொருட்களின் மாதிரிகள் அரச இரசாயனகூடத்தினால் பரிசோதித்து விநியோகித்திருந்த பரிசோதனை அறிக்கை பிரகாரம் அவற்றில் 4 இரசாயன பொருட்கள் உரிய நியத்தில் இல்லையென உறுதியாகி இருந்தது. | | |
| (ஈ) | பிரதி பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவை – 1) இனால் இலங்கை பூராவும் காணப்படும் வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களின் பயன்பாட்டிற்காக நழுவி மாற்ற முடியுமான கட்டில் ஒன்றை ரூபா 113,800 வீதம் 168 கட்டில்களை அரச கைத்தொழிற் சாலையில் இருந்து கொள்வனவு செய்வதற்காக கொள்வனவுக் கட்டளையொன்றை **2013** செப்டம்பர் 26 திகதி விநியோகித்திருந்தது. 2015 ஆண்டின் இறுதி வரையும் 23 சந்தர்ப்பங்களில் இந்த 168, கட்டில்களை பூர்த்தி செய்து ஒப்படைக்கப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2014 திசெம்பர் அளவில் 74 கட்டில்களை அமைச்சிற்கு வழங்கியிருந்த போதும் அவற்றில் 37 மாத்திரம் உரிய நியமத்துடன் உள்ளதாக அவதானித்து அந்தக் கட்டில்கலிற்காக ரூபா 4.84 மில்லியன் 2017 மார்ச் 08 திகதி செலுத்தப்பட்டிருந்தது. அரச கைத்தொழிற் சாலையில் இருந்து கட்டில்களை பூர்த்தி செய்து வழங்கும் சந்தர்ப்பத்தில் விபரக் குறிப்புடன் பரிசோதித்து பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்காது கட்டில்களை ஒப்படைத்து ஓராண்டு அளவான நீண்டகால தாமதத்தின் பின்னர் அவற்றில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக 2015 ஜுலை 22 திகதி அரச கைத்தொழிற்சாலைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்டில்களில் காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்து கொள்வதற்கு காணப்பட்ட | அரச கைத்தொழிற்சாலை இனால் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட மாதிரி கட்டில்களை பரிசோதித்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல்களின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரி கட்டில்கள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுவதாக தேசிய டெங்கு தடுப்பு அலகின் பணிப்பாளரினால் 2014/02/12 திகதி அறிவித்துள்ளதாக, கட்டில்களை தயாரித்து முடிவுறுத்திய பின்னர் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் தேசிய டெங்கு தடுப்பு அலகின் மூலம் அரச கைத்தொழிற்சாலைக்கு அவ்வப்போது வழங்கப்படும் விநியோகத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதாக, அரச கைத்தொழிற்சாலை மூலம் வழங்கிய கட்டில்களில் காணப்பட்ட குறைபாடுகள் பற்றி சுகாதார சேவை பணிப்பாளரினால் 2015/07/22 திகதி அரச கைத்தொழிற்சாலைக்கு அறிவித்துள்ளதாக, கட்டில்களில் குறைபாடுகள் காணப்படுவதால் 168 கட்டிலல்களிற்குமான மொத்த தொகையையும் செலுத்த முடியாது என அறிவித்துள்ளதாக. | இது தொடர்பாக முழுமையான முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு பொறுப்வாய்ந்த தரப்பினர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. இந்நிலைமையில் அரச கைத்தொழிற்சாலைக்கு செலுத்த வேண்டிய எஞ்சி தொகையை செலுத்துதல் இந்த ஐயவினா திகதிய 2022 ஜுலை 19 திகதி வரை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களினால் 2020/2021 ஆண்டுகளில் சுத்திகரிப்பு சேவைகளை நடத்திச் செல்வது தொடர்பாக 2022 மார்ச் 21 திகதிய கடிதம் மூலம் அழைபிக்கப்பட்ட தகவல்களை 2022 ஒக்டோபர் 31 திகதி வரை சமர்பிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய 26 சுகாதார நிறுவனங்களின் தகவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2020/2021 ஆண்டிற்குரியதாக வைத்தியசாலைகளில் சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ள ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கான பெறுகைகளிற்குரிய பெறுகைகள் நிபந்தனை பிரகாரம், தான் வழங்க எதிர்பார்க்கும் இரசாயன பொருட்களிற்குரியதாக சமர்பிக்க வேண்டிய இரசாயனகூட பரிசோதனை அறிக்கைக்கு பதிலாக இரசாயன பொருள் மாதிரியை பரிசோதிக்காது விநியோகிக்கப்படும் இரசாயனகூட பரிசோதனை அறிக்கையல்லாத Material Safety Data Sheets (MSDS) இனை மாத்திரம் சமர்பித்த மூன்று சந்தர்பங்கள் மாதிரிக்குள் காணப்பட்டன.

பெறுகைகள் நிபந்தனை பிரகாரம் இரசாயனகூட பரிசோதனை அறிக்கையை சமர்பிக்கும் தேவைப்பாடு இல்லாததுடன் தரம் பற்றிய உறுதிப்பாடு தேவைப்படுவதாக, ஏதேனும் உற்பத்தியில் உள்ளடங்கும் பிரதான மூலப்பொருள், இரசாயன கலவையின் அளவுகள் மற்றும் மனித பாவனைக்கு தீங்கிழைக்கும் பொருட்கள் உள்ளடங்குகின்றனவா என மற்றும் அவற்றின் தீமையான தாக்கம் தொடர்பாக பகுப்பாய்வின் பின்னர் Material Safety Data Sheet (MSDS) அறிக்கை விநியோகிக்கப்படுவதால் தொழிநுட்ப ஆய்வுக்குழு மற்றும் பெறுகைகள் குழுவின் மூலம் இந்த சான்றிதழின் தரத்தை

Material Safety Data Sheet (MSDS) இரசாயனகூட அறிக்கையொன்றாக பெறுகைகள் நடவடிக்கையின் போது பயன்படுத்தும் தகைமை தொடர்பாக கைத்தொழில்சார் தொழிநுட்ப நிறுவனத்திடம் தெளிபடுத்தலை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அந்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | உறுதி செய்யும் சான்றிதழாக கருதி மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக. | |
| (ii) | இரசாயனகூட பரிசோதனை அறிக்கையை சமர்பித்திருந்த நிறுவனங்களும் 18 சந்தர்ப்பங்களில் பூரண பரிசோதனை அறிக்கையை சமர்பித்திருக்காத போதும் கேள்விமனு மதிப்பீட்டின் போது மற்றும் பெறுகைகள் தீர்மானம் எடுக்கும் போது பொறுப்பற்றதாக நடவடிக்கை எடுத்திருந்தது. | எதிர்காலத்தில் ஒவ்வொறு இரசாயன பொருட்களினதும் தரத்தை குறிப்பாக இனங்காண முடியமானவாறு கேள்விமனு நிபந்தனைகளை திருத்துவதாக. | பயன்படுத்தும் அனைத்து இரசாயன பொருட்களிற்கும் இலங்கை தரநிர்னயத்தை தயாரித்து அங்கீகரித்துள்ளதா என உறுதி செய்து கொள்ள வேண்டியதுடன் சமர்பிக்கப்படும் இரசாயனகூட அறிக்கையை சிறப்பாக பரிசோதிக்க வேண்டும். |
| (iii) | ஒப்பந்ததாரர் வழங்க இணங்கி இருந்த இரசாயன பொருட்களிற்கு பதிலாக வேறு இரசாயன பொருட்களை வழங்கியிருந்த 21 சந்தர்பங்கள் காணப்பட்டன. இதற்காக எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்காததால் இரசாயன பொருட்களுக்காக செய்யப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் பொறுப்பு வாயந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உரிய தரத்துடன் குறித்த சேவைகள் இடம் பெற்றுள்ளதாக கொடுப்பனவு செய்ய முன்னர் உறுதி செய்து கொண்டுள்ளதாக. | உரிய தரத்துடன் குறித்த சேவையை வழங்கியதாக உறுதி செய்து கொண்ட இரசாயனகூட அறிக்கைகளின் உறுதி செய்த பிரதிகள் விரைவல் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்குரிய பெறுகைகள் தீர்மானம் மாத்திரம் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்விமனு நிபந்தனைகள் தொடர்பாக அல்லது மனுதாரருடன் ஏற்படுத்திக் கொண்ட முன்கூட்டிய இணக்கப்பாடுகள் தொடர்பாக இந்த சேவையை நேரிடியாக பெற்றுக் கொள்ளும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவன அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த ஒப்படைக் கடிதத்தின் மற்றும் கேள்விமனு ஆவணங்களின் பிரதிகளை வைத்தியசாலைகளிற்கு அனுப்புவதாக. | சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்குரிய மற்றும் கொடுப்பனவு செய்வதற்குரிய கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் அதற்குரிய அனைத்து தகவல்களையும் இந்த சேவையை நேரடியாக பெற்றுக் கொள்ளும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவன அதிகாரிகளிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | சமர்பிக்கப்பட்ட சில கேள்விமனுக்களின் பிரகாரம் இரசாயன பொருட்களுக்காக 100 சதவீதம் வட்டம் வழங்கப்பட்டிருந்த சந்தர்பம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிய தரத்துடன் இரசாயன பொருட்கள் வழங்கப்படுவதாக சத்திய கடதாசியொன்றின் மீது அல்லது செயலாற்றுகை பிணைமுறியின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் அந்த மனுதாரர்களுக்கே கேள்விமனுவை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. | டென்டர் நிபந்தனைகளை தயாரிக்கும் போது இந்த விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் மேலும் கவனம் செலுத்துவதாக. | - மேற்படி - |
| (vi) | சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக தயாரித்த கிரய மதிப்பீடொன்று இல்லாது 23 சந்தர்ப்பங்களில் கேள்விமனு கோரப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளவாறான பாவனை பிரகாரம் குறித்த கிரய மதிப்பீட்டை தயாரித்து சமர்பிக்குமாறு குறித்த வைத்தியசாலைகளுக்கு அறிவிக்க நடவடிக்கை ஒழுங்கு செய்துள்ளதாக, எதிர்காலத்தில் சந்தை விலையை பிரமாணமாக பயன்படுத்தி பதிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. | புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் இந்த சுத்திகரிப்பு சேவைக்காக பயன்படுத்த வேண்டிய அத்தியவசிய உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருட்கள் எவையென என்பது தொடர்பாக மற்றும் உபகரணங்கள், இரசாயன பொருட்கள் மற்றும் தேவையான ஊழியர் அளவை தீர்மானிக்கும் முறை தொடர்பான பிரமாணங்களை ஸ்தாபிக்க வேண்டும். |
| (vii) | ஆண்டிற்காக சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு பிரகாரம் ஆண்டிற்காக தேவைப்பாட்டை இனங்கண்ட சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்களிற்கு இடையில் சில இரசாயன பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள் முழுமையாக அல்லது 70 சதவீதத்திற்கு குறைவாக வழங்கும் 34 சந்தர்ப்பங்கள் 11 வைத்தியசாலைகளிற்கு உரியதாக | எதிர்வரும் ஆண்டிற்காக கேள்விமனு கோருவதற்கு உரியதாக வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் தன்மையின் பிரகாரம் இது தொடர்பாக பொதுவான பிரமாணங்களை தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, அதன் பிரகாரம், நியமம் மற்றும் மதிப்பீடு தொடர்பான பொது பிரமாணங்களை தயாரிப்பதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (viii) | கேள்விமனு நிபந்தனைகள் பிரகாரம் வழங்க வேண்டிய இரசாயன பொருட்கள் திறக்கப்படாத சந்தைப் பொதியாக வேண்டியதுடன் நியமத்திற்கு இணங்க இரசாயன பொருட்களை வழங்குவதாக உற்பத்தியாளரின் முத்திரையுடன் இலங்கை நியமத்துடன் இணங்குவதாக கைத்தொழில்சார் தொழிநுட்ப நிறுவனத்தினால் உறுதி செய்த இரசாயன பொருட்களை வழங்க வேண்டிய போதும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் படி சில வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிற்காக ஒப்பந்ததாரர்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் மற்றும் தகவல்கள் சமர்பிக்கப்படாத 7 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | எழுமாறாக மாதிரிகளை பெற்று பரிசோதிக்கும் பொறிமுறையை ஸ்தாபிக்க வேண்டியதுடன் பெறுகைகளின் போது இணங்கிய மற்றும் இரசாயனகூட அறிக்கை சமர்பித்த வகைகளின் இரசாயன பொருட்களை மாத்திரம் பொறுப்பேற்க வேண்டும். |
| (ix) | மாதந்தம் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருட்களின் அளவுகளை வைத்தியசாலை/நிறுவனங்களின் தொற்றுக் கட்டுப்பாட்டு பிரிவின் அலுவலர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் பெறப்பட்டு, இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கி பொறுப்பில் வைக்கப்பட்டு தேவைக்கேற்ப விடுவிக்கப்பட வேண்டிய போதும் அந்த உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருட்கள் ஒப்பந்ததாரரின் பொறுப்பில் வைக்கப்பட்டு இருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் வைத்தியசாலை/ நிறுவனங்களினால் அது தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்காத 18 சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. | தற்போது சுகாதார அமைச்சின் சுயசிரிப்பாய வளவிற்காக பொது சுகாதார பரிசோதகரினால் சுத்திகறிக்கும் உதாரணங்கள் மற்றும் இரசாயன பொருட்களை முறையாக பரிசோதித்து பொது களஞ்சியத்திற்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களை அறிவுறுத்தி இது தொடர்பாக பரிசோதித்து முறையான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை ஒன்றை இது தொடர்பாக தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக | சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ளும் செயன்முறையின் உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்காக அச் செயன்முறைக்கு உரிய அனைத்து துறைகளையும் மேவுகை செய்யயும் வகையில் சுற்றறிக்கை ஒன்றை விநியோக்க வேண்டும். |
| (x) | கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் கேள்வி மனுதாரர் ஒருவரினால் வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 10 இற்காக இரசான பொருட்களிற்கு 100 சதவித வட்டம் வழங்குவதன் மூலம் | கணக்காய்வினால் அவதானிக்கப்பட்ட 03 வைத்தியசாலைகளின் ஒப்பந்தத்தை பொறுப்பேற்பதனை மறுத்த கேள்வி மனுதாரர்களினால் சமர்ப்பித்திருந்த கேள்வி | பதிலில் காண்பிக்கப்படும் அனைத்து விடயங்களையும் உறுதி செய்யும் ஆவணரீதியான சான்றுகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்தை பெற்றிருந்ததுடன் இன்னும் வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள 03 இற்காக கேள்விமனு சமர்ப்பித்து ஒப்பந்த ஒப்பந்தத்தை வழங்கியதன் பின்னர் அதனை பொறுப்பேற்பதை மறுப்பு செய்திருந்தது. அவ்வாறு மறுப்புச் செய்த வைத்தியசாலைகளிற்காக இரசாயன பொருற்களுக்காக விலைகள் சமர்ப்பித்தலும் இங்கு விசேட தன்மையானது. இந்த 03 நிறுவனங்களுக்குரிய கேள்விமனு பிணைகளின் மூலப் பிரதிகள் சிரேஷ்ட உதவி செயலாளர் (பெறுகைகள்) பிரிவிற்கு அழைப்பித்தல் மாத்திரம் மேற்கொண்டிருந்ததுடன் அந்த கேள்விமனு பிணையை அரசுடமை ஆக்குவது அல்லது ஒப்பந்த நிறுவனத்தை கறைநிரற்பட்டியல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | மனுப் பிணையை அரசுடமையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்டுள் காரணங்கள் திருப்தி அடைய முடியுமான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியுமானதால் கறைநிரைப்பட்டியல் படுத்தும் தேவைப்பாடு ஏற்படுவதில்லை என. | விரைவில் கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (xi) | பெறுகைகள் நிபந்தனைகள் பிரகாரம் வைத்தியசாலைகள்/ நிறுவனங்களுக்காக நியமிக்கப்பட்ட நிலையங்களுக்கு சுத்திகரிக்கும் தொழிலாளர்களை ஈடுபடுதல் ஒப்பந்ததாரரின் பொறுப்பான போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத 6 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், குறைவாக வழங்கிய தொழிலாளர்களின் அளவு 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையானது. | கொடுப்பனவு செய்ய முன்னர் சேவையை திருப்திகரமாக மேற்கொண்டதாக உறுதி செய்து கொண்டுள்ளதாக. | புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் ஊழியர்களின் தேவையான அளவை தீர்மானிக்க வேண்டிய விதம் பற்றிய நியமங்களை ஸ்தாபிக்க வேண்டும். |
| (xii) | சுகாதார மேம்பாட்டு பணியத்தின் சுத்திகரிப்பு சேவையை நடத்துச் செல்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்களுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு இணங்காதவாறு 2021 சனவரி முதல் செப்டம்பர் வரை ரூபா 285,824 தொகை ஏனைய செலவாக செலுத்தப்பட்டிருந்தது. | சுகாதார மேம்பாட்டு பணியத்தின் சுத்திகரிப்பு சேவையை நடத்துச் செல்வதற்காக ஏனைய செலவினமாக வேலை பரிசோதகர்களுக்கு செலுத்திய ரூபா 285,824 தொகை குறிப்பிடப்பட்டுள்ளதாக. | இது தொடர்பான ஆவண சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (xiii) | ஒப்பந்ததாரர் பெறுகையின் போது வியாபார சின்னத்தையுடைய | ஒப்பந்த வழங்கல் பத்திரத்துடன் கேள்விமனு ஆவணங்களில் பிரதி | இது தொடர்பாக முழுமையான முறையான |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களை வழங்குவதற்கு இணங்கிருந்த போதும் 4 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிற்கு அவ்வாறு வியாபார சின்னத்தையுடைய உபகரணங்களை வழங்கி இருக்கவில்லை. இணக்கப்பாட்டின் பிரகாரம் வழங்காதிருந்த உசகரணங்களுக்காக செலுத்திய தொகையை பொறுப் வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டி உள்ளது. | ஒன்றை பின் இணைப்பாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்புவதுடன் அங்கு குறித்த இணக்கப்பாடு தொடர்பாக குறிப்பிடப்படுவதாக. | விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த தரப்பினர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xiv) | மேல் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் பிரகாரம் வைத்தியசாலை மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்காக சுத்திகரிக்கும் சேவையை பெற்றுக் கொள்வதும் தொடர்பாக அமைச்சினால் மற்றும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாடு தொகுதி மிகப் பலவீனமான நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த பலவீன உள்ளக கட்டுப்பாட்டு தொகுதி காரணமாக நீண்ட காலமாக் அரச பணத்தை தவறாக செலவிட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறுதியானது. | கேள்வி மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட வியாபார சின்னங்களை உள்ளடக்க முடியுமானவாறு கேள்விமனு ஆவணங்களை திருத்துதல், கேள்விமனு மதிப்பீட்டின் போது கேள்விமனு உடன் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு இரசாயன பொருட்களினதும் தரம் இலங்கை தரத்திற்கு இணங்குவதாக உறுதி செய்யும் சான்றுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், “இலங்கை தரமொன்றை வழங்க முடியாத சுத்திகரிப்பு பொருட்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கை தரமுடைய சுத்திகரிப்பு பொருட்களை பெற்று தருவதாக சத்திய கடதாசி ஒன்றின் மூலம் சான்று படுத்த வேண்டும். அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் கேள்விமனு மதிப்பிட்டு அக் கேள்விமனுவை அகற்றப்படும்” என்று கேள்விமனு ஆவணங்களில் உள்ளடக்குதல், 2023 ஆண்டு முதல் பெறுகைகள் வழிகாட்டி கோவையில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் உண்மையான நுகர்வின் பிரகாரம் குறித்த மதிப்பீட்டை தயாரித்து சமர்ப்பிக்குமாறு குறித்த | சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ளும் செயன்முறையின் உள்ளக கட்டுப்பாட்டை வலுவூட்ட அச் செயற்பாட்டின் அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட வேண்டியதுடன் பெறுகைகள் செயன்முறையில் காணப்படும் பலவீனங்களை அகற்றி பெறுகைகள் செயன்முறையை வலுவூட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வைத்திசாலைகளுக்கு அறிவித்து அனுப்ப நடவக்கைகளை ஒழுங்குபடுத்துதல், எதிர்வாரும் ஆண்களுக்காக கேள்விமனு கோரலிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் தன்மைகளின் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் தொடர்பான பொது பிரமாணங்களை தயாரிப்பதற்காக குழுவொன்றின் மூலம் பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஊ) | 2022 ஒக்டோபர் 31 திகதி வரை கணக்காய்விற்கு தகவல்களை சமர்பித்த 16 வைத்தியசாலைகளின் தகவல்கள் பிரகாரம் 2021 ஆண்டிற்காக வைத்தியசாலையினால் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களிற்கு மற்றும் சிற்றூழியர்களிற்கு சமைத்த உணவு வழங்க தேவையான மூல உணவுப் பொருள் தேவைப்பாட்டை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு எவ்வித நடைமுறை சாத்திய அடிப்படையுமின்றி தயாரிக்கப்பட்டிருந்தது. இம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒரு சில உருப்படிகள் ஆண்டினுள் எந்தவொறு நாளும் கட்டளை இடப்பட்டிருக்காததுடன் சில உருப்படிகள் மிகவும் சிறியளவில் கட்டளை இடப்பட்டிருந்தன. இதனூடாக போட்டி மட்டுப்படுத்தப்படல், பெறுகைகள் நடைமுறை சிக்கலான நிலைக்காகுதல், பெறுகைகள் நடைமுறையின் போது முறைகேடுகளிற்கு சந்தர்ப்பம் வழங்குதல், இந் நிலைமை பற்றி அறிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் ஒரு சிலரினால் தமது அனுபவம் பிரகாரம் வைத்திசாலையினால் கட்டளையிடாத மற்றும் குறைவாக கட்டளையிடும் பொருட்களிற்காக குறைந்த | மூல உணவுகளை வழங்கும் பெருகைக்காக மதிப்பீடு தயாரித்து அனுப்புவது குறித்த வைத்தியசாலைகள் மூலம் ஆவதுடன் அந்த மதிப்பீடுகளில் காணப்பட்ட சில பலவீனங்கள் காணப்படுவதால் அதற்காக கடந்த ஆண்டில் உள்ளவறான கட்டளையிடப்பட்ட அளவுகளை அடிப்படையாகக் கொள்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக, எதிர்வரும் பெறுகைகளில் உள்ளவாறான வழங்கல் அளவுகள் பற்றி கவனத்துடன் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வைத்தியசாலைகளில் தங்குமிட சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளர்களுக்கு மற்றும் சிற்றூழியர்களுக்கு சமைத்த உணவுகளை வழங்க இதுவரை அனுப்பியுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்கள் ஊடாகவும் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள் மற்றும் அமைச்சினால் இனங்கண்ட குறைபாடுகளை தவிர்த்துக்கொள்ள தேவையான செயற்பாடுகளை எடுத்து அது பற்றி கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும். |

அலகு விலையையும் கூடுதலாக கட்டளையிடும் பொருட்களிற்காக கூடுதலான அலகு விலையையும் முன்வைப்பதனூடாக அனைத்து போட்டியாளர்களிற்கும் சமமான சந்தர்ப்பம் இல்லாது போதல், மேலே பெறுமதியொன்றுடன் கேள்விமனு கோரப்படுவதன் காரணமாக சமர்பிக்க வேண்டிய மணுபிணையின் மற்றும் தெரிவு செய்யப்பட்டால் சமர்பிக்க வேண்டிய செயலாற்றுகை பிணைமுறியின் பெறுமதி உயர் பெறுமதியை எடுப்பதால் கேள்விமனு சமர்பித்தல் மட்டுபபடுத்தப்படல் மற்றும் நடைமுறை சாத்தியமான மதிப்பீடு ஒன்றை தயாரித்து வைத்தியசாலைகளின் பிரதேச பெறுகைகள் குழுவினூடாக மேற்கொள்ள முடியுமான பெறுகைகளை அமைச்சின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்வதன் காரணமாக பெறுகை செயன்முறையில் கனிசமான தாமதமொன்று ஏற்படல் போன்ற பாதகமான நிலைமைகள் ஏற்பட முடியுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்விற்கு தகவல்களை சமர்பித்த 16 வைத்திசாலைகளின் தகவல்களை பகுப்பாய்வு செய்கையில் அந்த வைத்திசாலைகளினால் மதிப்பிட்ட வருடாந்த தேவைப்பாட்டின் 967 உருப்படிகள் அதாவது 63 சதவீதத்தின் உண்மையான தேவபைப்பாடு 50 சதவீதத்திலும் குறைவானது. வருடாந்த தேவைப்பாட்டின் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான கட்டளையிட்ட உருப்படிகளின் எண்ணிக்கை 280 அல்லது மொத்த உருப்படி எண்ணிக்கையின் 18 சதவீதமானது. அவ்வாறே வருடாந்த தேவைப்பாட்டின் 75 சதவீதத்திலும் அதிகமாக கட்டளையிட்ட உருப்படிகளின் எண்ணிக்கை 150 அதாவது மொத்த உருப்படி அளவின் 10 சதவீதமானது.

(எ) 2019 ஆண்டின் போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வழங்கியிருந்த ஹெக்டயார் 1.4309 அளவிலான இரவுலிக்கண்டம் (Iravelikkandam) காணியை சுற்றி மதிலொன்றை நிர்மாணிக்க 3 கட்டத்தின் கீழ் ரூபா 27.84 மில்லியனான மொத்த கிரய மதிப்பீடொன்றிற்கு 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இருந்தது. இந்த பெறுகையின் மூன்று கட்டங்களுக்குரியதாக தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான திட்டம் (Structural Plans) மதிப்பிடப்பட்ட வேலை அளவுகளை கணக்கிட்ட விதத்தை உறுதி செய்யும் அளவை அறிக்கை (Taking off Sheets) மற்றும் வேலைத்தள லொக் குறிப்பு புத்தகம் 2022 நவம்பர் 29 ஆம் திகதியான கணக்காய்வு திகதி வரையும் மதியுரை சேவையை வழங்கும் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கி இருக்காததுடன் அந்த பதிவேடுகளை பெற்றுக் கொள்ளாது வைத்தியசாலையினால் அந்நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்திருந்தது. மூன்றாம் கட்டத்திற்குரிய வேலை விடயம் A - 01 இன் கீழ் பரள் அலலது அங்கீகரிக்கப்பட்ட் தரத்திலான நிரப்பும் பொருட்களை ஈடுபடுத்தி எல்லை மதில்களின் அத்திவரத்தின் இரண்டு பக்கத்திற்கும் மூன்று அங்குல தட்டுகளாக ஈடுபடுத்த மதிப்பிட்ட பரள்களின் அளவு 575 கன மீற்றர் ஆனபோதும் ஒப்பந்ததாரரினால் பரள 2235.86 கன மீற்றர் அதாவது மதிப்பீட்டு தேவைப்பாட்டை விஞ்சி 289 சதவீதமான பரள் இட்டதாக ரூபா 4.88 மில்லியனான தொகையை முறையாக மேற்கொண்ட வேலைகளின் அளவை திட்டவட்டமாக உறுதி செய்து கொள்ளாது, தவறான சமச்சீர் கோட்டு வரைபடமொன்றின் (Contour Plan) அடிப்படையில் மற்றும் இடப்பட்ட நிரப்பு பொருளின் தரத்தை மற்றும் Taking off Sheet வேலைத்தள லொக் குறிப்பு புத்தகத்தை எதிர்காலத்தில் வழங்க முடியும் என, பரள்களின் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக மாற்று நிரப்பு வழியாக களிமண் குறைந்த மணலுடன் கூடிய மண் நிரப்ப ஒப்பந்தார முன்மொழிந்ததுடன் **CECB** அதனை அங்கீகரித்ததாக நிலக்கீழ் நீர்மட்டம் வரை மண் நிரப்பி தனி தட்டொன்றாக மண் கலவை உள்ளடக்கியதாக, **CECB** இனால் மண் கலவை உள்ளடக்கம் தொடர்பாக இரசாயனகூட பரிசோதனை ஒன்றை செய்யவில்லை என, ஆரம்ப அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை நிரப்பு பொருட்கள் காணியிற்கு வெளியில் கொட்டப்பட்டதாக, ஆரம்ப அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் காணி நிர்பபலை ஆரம்பித்ததாக, அதன் பிரகாரம் நிரப்பப்பட்ட அளவின் மீது முதலாவது கொடுப்பது CECB இனால் பரிந்துரைத்துள்ளதா, CECB இன் நேரடி கண்கானிப்பின் கீழ் நிரப்பல் நடவடிக்கைகள் மேற்கொண்டதாக, ஒப்பந்த நிலத்தில் நீர் காணப்படுவதால் **A** பகுதிக்கு நேரடி பிரவேசத்தை பெற்றுக் கொள்ள முடியாது போனதாக, மற்றும் MOH அலுவலக அருகில் எல்லை சுவர்களின் முன்பக்க பகுதியின் பாதுகாப்பிற்காக மண் நிரப்பி உள்ளதாக, தினந்தோறும் கொன்கிரீட் மிகக் குறைந்த அளவு இடப்பட்டதால் கொன்கிரீட் கியுப் பரிசோதனை அறிக்கை **CECB** இடம் முறையான பரிசோதனை ஒனறை மேற்கொண்டு பதிலிலான விடயங்களை உறுதி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் உறுதி செய்ய முடியாத விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கணக்காய்வினால் உத்தேசித்த பௌதீக பரிசோதனை ஊடாக அளவைகளில் சரியான தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

கலவை உள்ளடக்கம் தொடர்பாக இரசாயனகூட பரிசோதனை அறிக்கையின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த வேலை விடயத்திற்கான அளவைகளின் சரியான தன்மையை பௌதீக ரீதியான பரிசோதனை ஒன்றினூடாக கணக்காய்விற்கு உறுதி செய்யுமாறு கோரிய போதும் 2023 ஜுலை 17 திகதி வரை அந்த பௌதீக ரீதியான பரிசோதரனை ஒழுங்கு செய்யப்படவில்லை. அவ்வாறே மூன்று கட்டங்களிற்குமாக கொன்கிரீட் பீம் மற்றும் கொன்கிரீட் தூன்களிற்காக பயன்படுத்திய கொண்கிரீட்களிற்காக இரசாயனகூட பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ளாது ரூபா **1.06** மில்லியன் தொகையை ஒப்பந்ததாரரிற்கு செலுத்தி இருந்ததுடன் **2022** இன் **14** இலக்கம் கொண்ட பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் **20 (1)** பிரிவு பிரகாரம் முறையான வரி இன்வொஸ் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ளாது ரூபா 748,649 ஆன பெறுமதி சேர் வரித் தொகையொன்றை ஒப்பந்தாரரிற்கு மற்றும் மதியுரை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்து.

(ஏ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு தேவையான வைத்திய இரசாயனகூட பரிசோதனை சேவை வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலை அருகில் தனியார் மருத்துவ இரசாயனகூடம் ஒன்றை தெரிவு செய்து அந்த இரசாயனகூட பரிசோதனை சேவையை பெற்றுக் கொள்வதற்காக இரண்டு ஆண்டுகளில் முறையே ரூபா 4.89 மில்லியன் மற்றும் ரூபா 3.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

இல்லையென, கொன்கிரீட் வேலைகள் அவர்களால் கிட்டிய மேற்பார்வை செய்து, அங்கீகார கொன்கிரீட் கலவையை இட்டுக் கொண்டதாக உறுதி செய்துள்ளதாக, வரி இன்வொஸ் இதனுடன் இணைத்துள்ளதாக, வெட் வரி செலுத்துவது தொடர்பான தகவல்கள் உள்நாட்டு இறைவர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாக.

| | | | |
|---|---|---|---|
| (i) | இரசாயனகூட பரிசோதனை சேவையை பெற்றுக் கொள்வது தொடர்பாக வைத்தியசாலையினான் பதிவு செய்திருந்த வழங்குனர்கள் மூவரும் வைத்தியசாலையுடன் நேரடி தொடர்புடைய தரப்பினர் அவர். | வெளிப்படத் தன்மையை மேம்படுத்தும் முயற்சியாக 2020 ஆண்டில் தனியார் வைத்திய இரசாயனகூட பரிசோதனைக்காக தேசிய பத்திரிகை ஊடாக கேள்விமனு கோரல் மேற்கொள்ளப்பட்டதாக. | வழங்குனர்களை பதிவு செய்யும் செயல் முறையின் மறைப்பின்மை தன்மையை பேணிக்கொள்ள வேண்டியதுடன் வைத்தியசாலையுடன் நேராக/மறைமுக தொடர்பற்ற தரப்பினரை பதிவு செய்து கொள்ள வேண்டும். |
| (ii) | **2018** மற்றும் **2019** ஆண்டுகளில் மேற்கொண்டிருந்த இந்த பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிரதேச பெறுகைகள் குழு உறுப்பபினர்கள் மூவரிற்கு மேலதிகமாக இந்த வழங்கலை ஒப்படைத்த தனியார் இரசாயன கூடத்தில் உரிமையாளர் உள்ளிட்ட தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்கள் பெறுகைகள் குழுவின் அங்கத்தவராக செயற்பட்டிருந்தார். அவ்வாறே **2019** ஆண்டிற்குரியதாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிராந்திய பெறுகைகள் குழு அங்கத்தவர் ஒருவரிற்கு பதிலாக வேறு அலுவலர் ஒருவர் பெறுகைகள் தீர்மானத்திற்காக கையொப்பமிட்டுள்ளார். | வைத்தியசாலை மருத்துவ அதிகாரி முன்னிலையில் கேள்விமனு சமர்ப்பிக்கும் ஒரு இரசாயனகூட உரிமையாளர் அவர் என அறிந்திருக்கவில்லையென, 2017.01.21 திததி இலக்கம் **D/LS/Labtest**/2017 சுற்றறிக்கை பிரகாரம் தனியார் மருத்துவ இரசாயனகூடத்தை தெரிவு செய்வதற்காக அனைத்து நிபுணத்துவ மருத்துவர்கள் மற்றும் கணக்காளர்கள் உள்ளிட்ட குழுவொன்று அமைக்கப்பட்டதாக, எவ்வாறாயினும் இந்த தவறு மீண்டும் இடம்பெறாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழு அங்கத்தவர்களை நியமிக்க வேண்டியதுடன் தொடர்பு மீதான இணக்கப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரிவுகளை மீறியது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | **2018** மற்றும் 2019 இரண்டு ஆண்டுகள் தொடர்பாக தனியார் இரசாயனகூடத்தில் இருந்து பெருமளவு செய்து கொண்டிருந்த **15** வகை பரிசோதனைகளை மாதிரியாகக் கொண்டு பரிசோதிக்கும் போது, அந்த **15** வகை பரிசோதனைகளும் வைத்தியசாலைக்கு சொந்தமாக உள்ள இரசாயனகூட உதாரணங்கள் மூலம் செய்து கொள்ள முடியுமான பரிசோதனை வகைகள் என அவதானிக்கப்பட்டது. இந்த **15** வகை பரிசோதனைகளுக்குரிய இரண்டு வருடங்களில் முறையே | சில பரிசோதனைகளை காணப்படும் உபகரணங்களின் உற்பத்தி தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமான போதும் உபகரணத்திற்கு சேதனை பொருட்களை இட்டதன் பின் ஆயுட்கால குறைவடைவதால் சில காலப்பகுதியினுள் கட்டளையிடப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளும் போது அவற்றின் கிரயம் ஆக்கபூர்வமற்றதாக, அந்த | சுயாதீன புலனாய்வொன்றை மேற்கொண்டு அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைகள் **1,386** மற்றும் **1,307** அளவொன்றை செய்து கொண்டு முறையே ரூபா **2.33** மில்லியன் மற்றும் ரூபா **2.04** மில்லியன் தொகையை தனியார் இரசாயனகூடத்திற்கு செலுத்தியிருந்தது. | பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வது இலாபரமற்றதாக முடியுமென, பரிசோதனையின் அவசரத் தன்மை தொடர்பாக தீர்மானம் குறித்த நிபுணத்துவ மருத்துவர்களினால் அவர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள நோயாளிகளின் நிலைமை பிரகாரம் தீர்மானிக்கப்பட்டதாக. | |
| (iv) | வைத்தியசாலை இரசாயன கூடத்தில் காணப்படும் **BS 480 Automated Biochemistry Analyser** எனும் உபகரண பயன்பாட்டின் **2017, 2018** மற்றும் **2019** ஆகிய ஆண்டுகளுக்குரிய தரவுகளை பெற்றுக்கொள்ள முடியாததால் அத்தரவுகளை அழித்து அல்லது ஏதேனும் முறையில் மாற்றி இருந்ததாக அவதானிக்கப்பட்டது. இந்த உபகரணத்தின் தரவுகளுக்காக பிரதேசத்தை பெற்றுக் கொள்ள முடியுமான **Admin** கடவுக் குறியீட்டை வைத்திசாலை இரசாயனகூடத்திற்கு வழங்கியுள்ளதன் காரணமாக உபகரணத்தின் தரவுகளின் பாதுகாப்பு தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியின் கோரிக்கை பிரகாரம் கணக்காய்வினால் உத்தேசிக்கப்பட்டவாறு இந்த அவதானிப்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பரிசோதித்து அறிக்கையை சமர்பிக்க சுயாதீன புத்திஜீவிகள் குழு ஒன்றை நியமிக்க அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, அவ்வரிக்கையை எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுப்பதாக. | - மேற்படி - |
| (ஐ) | **2018** ஜுலை **16** திகதிய இலக்கம் **2080/22** கொண்ட அதிவிஷேட வர்தமானி பிரகாரம், சுத்திகரிப்பு சேவை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிற்காக அரசினால் அதிகரித்த படிகளை செலுத்துவது தொடர்பாக அமைச்சின் பெறுகைகள் குழு **2018** திசெம்பர் **17** திகதி வழங்கியிருந்த பெறுகைகள் தீர்மானத்தின் (a) முதல் (f) வரையான நிபந்தனைகளிற்கு முரணாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையினால் | சுத்திகரிக்கும் தேவையை வழங்கும் கம்பனியின் சம்பள பத்திரத்தின் பிரகாரம் சுத்திரிப்பு ஊழியர்களுக்கு 2018 ஆகஸ்ட் மாதத்தில் அதிகரித்த சம்பளம் கிடைத்துள்ளதாக, ஊழியர் சேமலாக நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொண்ட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்ட வீகிதத்திற்காக செலுத்தப்பட்டுள்ளதா என உறுதி செய்யுமாறு தொழிலாளர் | மேலதிகமாக செலுத்தியுள்ள மற்றும் செலுத்தப்பட்ட வரி தொகையை குறித்த நிறுவனங்களிடம் இருந்து அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிட்டு கணக்காய்விற்கு அறக்கையிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுத்திகரிப்பு ஊழியர்களின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுபனவாக ரூபா **10.15** மில்லியன் தொகையை கூடுதலாக செலுத்தியிருந்ததுடன் **2002** இன் **14** இலக்கம் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் **20 (1)** பிரிவின் பிரகாரம் முறையான வரி பட்டியல் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ளாது இக் காலப் பகுதிக்காக ரூபா **3.20** மில்லியனான தொகையை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக செலுத்தியிருந்தது. | ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக, சுத்திகரிப்பு சேவையை வழங்கும் கம்பனி அவர்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பதிவு இலக்கத்துடன் வரியை உட்படுத்தியுள்ளதுடன், அவர்கள் ஊதியம், இரசாயன மற்றும் ஏனைய செலவுகள் போன்ற அவர்களின் மாதாந்த செலவுகளிற்காக முன்வைக்கும் பட்டியல்களுக்கே அது உள்ளடக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அவர்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பாக விவரம் வழங்கப்பட்டுள்ளதாக. | |
| (ஒ) **2021/2022** ஆண்டிற்காக அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு தேவையான சுத்திகரிப்பு சேவையை வழங்கும் ஒப்பந்தத்தை ரூபா **62.69** மில்லியன் மதிப்பீட்டுத் தொகைக்கு தனியார் சுத்திகரிப்பு சேவை நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. **2022** ஜுலை **05** திகதி மேற்கொண்ட கள பரீட்சித்தலின் பிரகாரம் அன்றைய தினம் பகல் நேர சேவைக்கு **18** தொழிலாளர்கள் குறைவாக ஈடுவடுத்தி இருந்ததாகவும், **2021** ஒப்பந்த ஆண்டு முழுவதும் பொய்யான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த சுத்திகரிப்பு தொழிலாளர் எண்ணிக்கையை விட தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தியதாக அறிக்கையிட்டு ஒப்பந்த மொத்த தொழிலாளர் எண்ணிக்கைக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பரிசோதகர்களிற்கு மற்றும் தொழிலாளர்களிற்கு உண்மையாக செலுத்திய சம்பளம் தொடர்பாக உறுதி செய்து கொள்ளாது ஒப்பந்தத்தின் **15.1** நிபந்தனைக்கு முரணாக வைத்தியசாலையினால் **2021** பெப்ரவரி முதல் **2022** சனவரி | 18 தொழிலாளர்களின் சம்பளம் வெட்டப்பட்டுள்ளது என, பதிவேடுகளின் ஏதேனும் நியாயமற்ற தன்மையை இனங்காணலுக்கு மற்றும் பௌதீக ரீதியான வரவை பரீட்சிப்பதற்கு ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தரை இணைத்துள்ளதாக, நிர்வாக உத்தியோகத்தரும் எழுமாறாக கண்காணிப்பு செய்வதாக. கொடுப்பனவு வவுசர்களை தயாரிக்கும் போது ஒப்பந்தத்தின் 15.1 நிபந்தனை பிரகாரம் உறுதி செய்த சம்பள பத்திரத்தை மற்றும் ஏனைய ஆவணங்களை பரீட்சிக்குமாறு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக, குறைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் 2021/2022 இற்காக மேலதிக உபகரண பட்டியலை கவனத்திற் கொண்டு மீண்டும் 2022/2023 இற்காக உபகரண பட்டியலை 2021.07.12 திகதி | சுத்திகரிப்பு ஊழியரக்ளின் வரவு மற்றும் வழங்குனரால் வைத்தியசாலைக்கு சமர்பித்த வரவு அறிக்கை தொடர்பாக வைத்திசாலை மேற்பார்வையை வலுப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்த பிரகாரம் மாதத்தின் சம்பளம் செலுத்தியதாக உறுதி செய்து கொள்ள வேண்டியதுடன் **2021** பெப்ரவரி மாதம் முதல் **2022** சனவரி வரை வழங்குனரிற்கு மேலதிக தொகை செலுத்தப்பட்டுள்ளனவா என பரீட்சிக்க வேண்டும். அவ்வாறே வைத்தியசாலையின் வருடாந்த தேவைப்பாட்டை சரியாக மதிப்பிட வேண்டியதுடன் களஞ்சியத்தில் எஞ்சியுள்ள சுத்திகரிக்கும் சேவை உபகரணங்களை |

| | | |
|---|---|---|
| வரை ரூபா **40.08** மில்லியன் தொகையை சுத்திகரிப்பு ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டு இருந்ததுடன் களஞ்சியத்தில் எஞ்சிய உபகரணங்கள் இருப்பு அளவு தொடர்பில் கவனம் செலுத்தாது உபகரணங்களை கொள்வனவு செய்ததன் காரணமாக **2022** ஜுலை **05** திகதியன்று கிரயம் ரூபா **2.13** மில்லியனான **8** வகைகளிற்குரிய **357** உபகரண அலகுகள் பிரதான களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டன. | சமர்ப்பித்துள்ளதாக, மேலதிக உபகரணங்களை ஒப்பந்ததாரரின் வழங்கல் இன்றி எதிர்காலத்தில் பயன்படுத்துவதாக மற்றும் களஞ்சியங்களில் காணப்படும் உபகரணங்களை விநியோகிக்க வேண்டாமென ஒப்பந்ததாரருக்கு அறிவித்துள்ளதாக. | கவனத்திற் கொண்டு மாதாந்த கொள்வனவை மேற்கொள்ள வேண்டும். |
| (ஓ) கொழும்பு தேசிய வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவின் இரசாயனகூடத்திற்காக **Fully Automated Biochemistry Analyzer** உபகரணமொன்றை கொளவனவு செய்வதற்காக **2019** ஆகஸ்ட் **30** திகதி தேசிய போட்டி கேள்விமனு முறையை பின்பற்றி விலைகளை கோரி **2021** மே மாதத்தில் ரூபா **7.50** மில்லியன் பெறுமதியான இந்த உபகரணத்தை கொள்வனவு செய்திருந்த போதும் அதன் போது நோயாளர் பிரிவின் இரசாயனகூடத்திற்கு சொந்தமாக காணப்பட்ட உபகரண பயன்பாட்டுடன் மேற்கொண்ட சராசரி நாளாந்த பரிசோதனை கொள்ளவான 614 பரிசோதனைகளை விஞ்சி குறைந்த பட்சம் தினந்தோறும் 4000 அளவான பரிசோதனைகள் மேற்கொள்ள முடியுமான இந்த உபகரணத்தை கொள்வனவு செய்யும் தேவைப்பாட்டை இனங்கண்டிருக்கவில்லை எனவும், இந்த பெறுகைகளிற்கு உரியதாக வைத்தியசாலையினால் தயாரித்திருந்த தொழிநுட்ப விபரப் குறிப்பை உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அனுப்பி அங்கீகரித்துக் கொண்டும் இருக்காததுடன் இவ்வாறான உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது உட்படுத்த வேண்டிய 02 தீர்மானமிக்க வரையறைகளை அதற்கு உள்ளடக்கி இருக்கவில்லை | முன்னர் காணப்பட்ட உயிரியல் இரசாயன பகுப்பாய்வு (**Bio Chemistry Analyzer**) 10 ஆண்டுகள் அளவு பழமையானது என, அது தொடர்ச்சியாக உடைதலிற்கு உள்ளாவதனால் **Lipid Profile** போன்ற பரிசோதனைகளுக்காக பயன்படுத்த முடியாது என, ஒரு நாளைக்கு 4000 பரிசோதனைகளை மேற்கொள்ள முடியமான பகுப்பாய்வாக்கி ஒன்றை கொள்வனவு செய்துள்ளது அனைத்து பரிசோதனைகளையும் வழங்கும் நோக்கத்தை அடைந்து கொள்ளவும் வெளி நோயாளிகள் மற்றும் சிகிச்கை நோயாளிகள் தனியார் இரசாயனகூடங்களின் சேவைகளை பெற்றுக் கொள்வதனை தடுப்பதற்கென, அதன் போது தொழிநுட்ப ஆய்வு குழுவினால் அந்த உபகரணத்திற்கு பொருத்தமானவாறு விபரக் குறிப்பை தயாரித்துள்ளதாக, எனினும், தொழிநுட்ப ஆய்வு குழுவிற்காக உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவரை சேர்த்துள்ளதுடன் இந்த விபரக் குறிப்பு | உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அதன் தேவைப்பாட்டை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் அதை ஒழுங்கானவாறு பதிவிட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விவரம் குறிப்பு உள்ளதெனின் அந்த அங்கீகார பொருள் விவரக் குறிப்பை பயன்படுத்த வேண்டுமெனவும் அங்கீகார தொழிநுட்ப விபரக் குறிப்பு இல்லை எனில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பை உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு அனுப்பி அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினால் சுற்றறிக்கையின் ஊடாக கட்டாயப்படுத்த வேண்டும். அரச பெருகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் |

எனவும், தெரிவு செய்யப்பட்டிருந்த மணுதாரர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த விபரக் குறிப்பிற்கு இடையில் தீர்மானமின்ன (CRITICAL) 05 விபரக் குறிபபுக்கள், தேவைப்பாட்டு விபரக் குறிப்புகளிற்கு முரணானதால் அந்த மணுக்களும் மறுக்கப்பட வேண்டியதாக இருந்த போதும் அதற்கு பதிலாக அது தொடர்பான தெளிவுபடுத்தல் இன்றி பெறுகைகள் குழுவினால் அந்த மணுதாரரின் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தாகவும், விபரக் குறிப்புக்களில் உறுப்படி இலக்கம் 41.4 பிரகாரம் Original Equipment Manufacturer (OEM) certificate certifying the equipment is brand new and the date of Manufacturer certified by the manufacturer shall be handed over with the equipment எனும் விபரக் குறிப்பு முக்கிய பிரமாணமொன்றான போதும் மேற்குறிப்பிட்ட உபகரணத்தை வழங்கும் சந்தர்ப்பத்தில் இந்த சான்றிதழை வழங்கி இருக்காததால் இந்த உபகரணம் Brand new நிலையிலான உபகரமொன்றா என உறுதியாக வில்லையெனவும், மூன்றாம் தரப்பினரின் சேதன பொருட்கள் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரிசோனை 15 வகைகள் என்னவென்று இனங்காணப்பட்டு அந்த சேதன பொருட்களிற்கான திறந்த போட்டி குறைந்த விலையொன்று பெற்றுக்கொள்ள 2022 மார்ச் 31 திகதி வரை வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மற்றும் கைநூலின் 2.12, 2.14.1, 4.2.2, மற்றும் 6.3.6 ஆம் ஏற்பாடுகளிற்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை எனவும், இந்த வகையான உபகரணங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற Reagent, consumable, மற்றும் Calibrator அவரால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதாக.

பரிந்துரைத்த மணுதாரர் விபரக் குறிப்பின் அனைத்து பிரிவுகளிற்கும் இணங்கியதாக.

கணக்காய்வில் குறிப்பட்டதன் பிரகாரம் அதன் போது பெறுகைகள் கால அட்டவணை தயாரிப்பு இடம் பெறவில்லையென நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக இவ்வாறு தாமதித்துள்ளதாக, **Compliance Certificate** எனும் உபகரணம் புதியதென உறுதி செய்யும் ஆரம்ப உபகரண தயாரிப்பாளரின் சான்றிதழ் ஒன்று என, இது பின்னர் ஒப்படைக்கப்பட்ட போதும் இயந்திரம் புதியதென காண்பிப்பதற்கு இது போதியதென.

15 அலைவரிசைகளை திறப்பதற்கு வழங்குனர் உடன்பட்டள்ளதுடன் அதனால் மூன்றாம் தரப்பினர் சேதன பொருட்கள் பயன்படுத்தும் இயலுமை கிடைப்பது என.

பெறுகைகள் குழு அங்கத்தவர்கள் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்களால் குறித்த படிவங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டதாக, தற்பொது கேள்விமணு திறப்பது தொடர்பாக நடவடிக்கைகள் உரிய படிவப் பத்திரமொன்ரில் குறித்திற்கொண்டு பேணிச்செல்வதாக, முன் பெறுகைகளிற்காக திணைக்கள தலைவரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக.

நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையான பிரமாணங்கள் கேள்விமணுவிற்கு உள்ளடக்கப்படாதமை, தேவைப்பாடு பொருள் விபரக் குறிப்பிற்க் முரணாகுதல், Reagent, consumable, மற்றும் Calibrator தொடர்பாக 27 சதவீத விலை அதிகரிப்பு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு தனது கவனத்தை செலுத்தாதது தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு விடயங்களை உறுதிப்படுத்த வேண்டும். மூன்றாம் தரப்பினரின் சேதன பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் 15 வகை பரிசோதனைகள் என்னவென்று இனங்கண்டு அந்த சேதன பொருட்களிற்காக திறந்த போட்டி ஆக குறைந்த விலையொன்றை பெற்றுக்கொள்ளலை விரைவு படுத்த வேண்டும்.

தொடர்பாக இதற்கு 01 ஆண்டும் 08 மாதங்களுக்கு முன்னர் அதாவது 2017 சனவரி 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அலகொன்றின் விலை (வெட் இன்றி) மற்றும் இந்த உபகரணங்கள் தொடர்பாக 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த அலகொன்றின் விலைக்கு (வெட் இன்றி) இடையில் 27 சதவீத விலை அதிகரிப்பு மீதான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழு தமது கவனத்தை செலுத்தாததனால் மேற் குறிப்பிட்ட உபகரணத்திற்காக பயன்படுத்திய Reagent, consumable, மற்றும் Calibrator யிற்காக ஆகக்கூடிய பெறுமதியொன்று வழங்குனரிற்கு செலுத்தும் சூழலென்றை வைத்தியசாலையினால் நிர்மானித்துள்ளதாக அவதானிக்கப்ட்டது.

அவ்வப் போது வேறுபாடாகும் டொலர் விகிதமுடன் பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது விலை மாற்றங்கள் சாதாரணமாக இடம்பெருவதொன்றாகும் என, மேலும், இங்கு 2017-2019 ஆகிய 2 ஆண்களிற்கு கிட்டிய காலத்தினுள் விலைகள் மிகவும் வித்தியாசமாக முடியுமானதால் அவ்வாறு விலை இணக்கம் செய்ய முடியாது என.

(ஔ) சுகாதார அமைச்சின் கீழ் உள்ள **9** வைத்தியசாலைகளுக்கு திரவ தன்மையான மருத்துவ ஒக்சிஜன் களஞ்சியப்படுத்த **10** தாங்கிகள் அனைத்து உதிரிப்பாகங்கள் உடன் வழங்கி பொருத்துவதற்காக அமைச்சு **2020** ஆம் ஆண்டின் போது தேசிய போட்டி கேள்விமனு முறையின் கீழ் விலை கோரி விலைகளை சமர்ப்பித்த ஒரே மனுதாரருக்கு ரூபா **75.75** மில்லியனுக்கு **2020** திசெம்பர் **19** ஆம் திகதி ஒப்பந்தத்தை வழங்கி இருந்ததுடன் அத்திகதி முதல் **336** நாட்களில் கடமையை பூர்த்தி செய்ய வேண்டும்.இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த 09 வைத்தியசாலைகளில் காணப்பட்ட தனியார் கம்பனி ஒன்றினால் இலவசமாக வழங்கி பொருத்தியிருந்து தாங்கிகளில் உரிமை கட்டணம் அறவிடாது 2024 ஆண்டின் போது குறித்த வைத்தியசாலைகளுக்கு ஒப்படைக்க முடியுமென அறிவித்திருந்த போதும், தற்போது

ஒக்சிஜன் தாங்கிகளில் உரிமை குறித்த தனியார் நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படுவதாக, 2024 ஆண்டு வரை வழங்கலை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு சந்தை ஏகபோக உரிமையை பேணி செல்ல சந்தர்ப்பம்

உபகரணத்தை கொள்வனவு செய்யும் போது அதன் தேவைப்பாட்டை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் அதை முறையாக ஆவணப்படுத்த

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளில் காணப்பட்ட ஒக்சிஜன் களஞ்சிய தாங்கி மூலம் போதிய அளவு ஒக்சிஜன் தேவைப்பாட்டை அடைந்து கொண்டிருந்த போது, குறித்த வைத்தியசாலையினால் ஒக்சிஜன் களஞ்சியபடுத்துவதற்கு புதிதாக தாங்கி தேவை என்று எழுத்து மூலம் கோரி இல்லாத போதும் மற்றும் 2024 ஆணடிற்குப் பின்னர் திரவ தன்மையான மருத்துவ ஒக்சிஜன் போட்டி விலைகளின் கீழ் கொள்வனவு செய்து நிலவிய தாங்கிகளுக்கு நிரப்பும் இயலுமை இருக்கும் போது புதிதாக தாங்கி நிர்மாணிக்கும் தேவைப்பாடு இல்லை என அவதானிக்கப்பட்டது. அதனால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த பெறுகை விளைவற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. | வழங்கி இருந்ததாக, இந்த சந்தை ஏகபோக உரிமையை இல்லாது செய்ய பெறுகைகள் நிறுவனத்தினால் சாதகமாக தலையீட்டை மேற்கொண்டு உள்ளதாக, அதற்காக சுகாதார செயலாளரினால் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி உள்ள 2019.10.14 திகதிய கடிதம் மூலம் போட்டி முறைமை ஒன்றிற்கு இணங்கும் வரை நடைமுறை சேவைவ் வழங்குனரிடம் இருந்து தொடர்ந்தும் சேவையை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளதாக, அதே போன்று காசல் வீதி பெண்கள் வைத்தியசாலைக்கு குறித்த நிறுவனத்தினால் வழங்கியுள்ள ஒக்ஸிஜன் தாங்கி எதிர்காலத்தில் களற்றி அகற்றி நடவடிக்கை மேற்கொள்ளவதாக குறித்த நிறுவனத்தினால் வாய் மூலம் அறிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படுவதாக அறிவித்துள்ளதாக. | வேண்டும். |
| (ii) | ஒப்பந்ததாரரினால் 05 தாங்கிகள் மாத்திரம் வழங்கி பொருத்தப்பட்டு இருந்தது. எவ்வாராயினும் இந்த 5 வைத்தியசாலைகளில் 02 வைத்தியசாலைகளில் மாத்திரம் முறையாக ஒக்சிஜன் தாங்கிகளை பொறுப்பேற்று பயன்படுத்தி வருவதுடன் ஏனைய 03 வைத்தியசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 20.15 மில்லியன் கிரயமான 03 ஒக்சிஜன் தாங்கிகள் $1^1/_2$ வருடங்களுக்கு கிட்டிய காலமாக விளைவற்று காணப்பட்டன. | ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் நிறுவனத்தால் தமது பொறுப்பில் உள்ள ஒக்சிஜன் தாங்கியை களற்றி அகற்றிய பின்னர் அவசரமாக ஒக்சிஜன் தாங்கிகளை ஸ்தாபிக்க முடியாததால் எதிர்கால ஆபத்தான தன்மைக்கு முகம் கொடுப்பதற்காக குறித்த வைத்தியசாலைகளில் அமைச்சிற்கு சொந்தமான ஒக்சிஜன் தாங்கிகளை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டதாக. | ஒழுங்கான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு விடயங்களை உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| (iii) | திட்டமிட்ட காலத்தை விட 09 மாதங்கள் தாமத்துடன் ஒப்பந்தத்தை ஒப்படைத்த | கேள்விமனு திறக்கும் திகதியளவில் இலங்கையினுள் கொவிட் | முறையான புலனாய்வொன்றை மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் பெறுகைகள் ஆரம்பத்தில் ரூபா 8.22 மில்லியனிற்று பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த 10000 லீற்றர் திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கி ஒன்றிற்காக 2022 ஆண்டளவில் ரூபா 17.28 மில்லியனான தொகையை அதாவது 100 சதவீதத்திற்கும் அதிகமான விலையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 19 தொற்று நிலைமை பரவியதால் பெறுகைகள் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதாக, இதன் காரணமாக முன்கூட்டிய கேள்விமனுக் கூட்ட நடவடிக்கைகள் மற்றும் கேள்வி மனு மதிப்பீடு தொடர்பான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையை வழங்க 13 மாதங்கள் அளவு காலம் தாமத்துள்ளதாக. | தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (iv) | அமைச்சினால் பெறுமதி சேர் வரியாக ரூபா **710,220** தொகை கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டு இருந்ததுடன் இத் தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து அல்லது பொறுப்பு வாயந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | வெட் வரி செலுத்தும் போது பட்டியலிற்குரிய வரித் தொகை அல்லாது கொடுப்பனவு செய்யப்படும் திகதிக்குரிய வரி கொடுப்பனவு செய்யப்படுவதாக. | மேலதிக கொடுப்பனவை ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |
| (v) | பொது ஒப்பந்த சட்டம் பிரகாரம் ரூபா **5** மில்லியனை விஞ்சுகின்ற ஒப்பந்தத்திற்காக ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் பெறுகைகளில் இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக. | பொது ஒப்பந்த சட்ட ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |
| (vi) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த **20,000** லீற்றர் கொள்ளவான திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கியின் உரிமை வைத்தியசாலைக்கு உரியதா இல்லையா என்பது தொடர்பாக வைத்திசாலை அறிந்திருக்காத காரணத்தால் போட்டி விலையின் கீழ் திரவ மருத்துவ ஒக்சிஜனை வழங்கிக் கொள்ள முடியாதிருந்தது. | குறித்த திரவ மருத்துவ ஒக்சிஜன் களஞ்சிய தாங்கியின் உரிமை வைத்தியசாலைக்கு உரியதென, எனினும், இதனை ஸ்தாபித்து நீண்ட காலம் கடந்துள்ளதால் அதனுடன் தொடர்பான கடிதக் கோவைகளை கண்டறிய முடியாதிருப்பதாக. | ஒழுங்கான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அரசிற்கு நட்டமொன்றை ஏற்படுத்தியுள்ளனவா என கண்டறிந்து குறித்த நட்டங்களை பொறுப்பு வாயந்த தரப்பினரிமிருந்து அறவிட வேண்டும். |
| (க) | தேசிய கண் வைத்தியசாலையில் காணப்படும் உள்ளக தொலை பேசித் தொகுதி **2012** ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு இருந்ததுடன் இத் தொகுதியின் பராமரிப்பு மற்றும் சேவைக்காக **2012** ஏப்ரல் **28** திகதி முதல் **2020** ஏப்ரல் **27** வரை **08** ஆண்டு காலத்தினுள் தொகுதியின் வழங்குனரிற்கு வருடாந்தம் கொடுப்பனவு செய்து | | |

இச் சேவை பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) வழங்குனரால் முன்வைக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தம் தொடர்பாக தொலைத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவிடம் இருந்த தொழிநுட்ப அறிக்கை ஒன்றை பெற்றுக் கொண்ட பின்னர் **05** நிபந்தனைகளின் கீழ் வழங்குனரினால் முன்வைக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தை அங்கீகரித்து அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழு தீர்மானித்திருந்த போதும் **2014/2015** மற்றும் **2015/2016** ஆகிய இரண்டு ஆண்டுகள் தவிர ஏனைய ஆண்டுகளில் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளை வழங்குனரிற்கு எழுத்து மூலம் அறிவித்திருக்காததுடன் வழங்குனரினால் முன்வைக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தத்தை அதன் பிரகாரமே வைத்திசாலையினால் ஏற்றுக் கொண்டு செயற்பட்டிருந்தது. | குறித்த ஆண்டுகளில் உரியவாறு தொழிநுட்ப மதிப்பீட்டு அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ள போதும் தவறுதலாக அவ்வாறு ஒப்பந்ததாரர் அறிவிக்கப்படவில்லை என, எதிர்காலத்தில் உரியவாறு ஒப்பந்ததாரர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுப்பதாக. | பெறுகைகள் நிபந்தனைகளின் பிரகாரம் தொகுதியின் பராமரிப்பு மற்றும் சேவைகள் பெறப்பட்டுள்ளனவா என மதிப்பீடின்றி மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |
| (ii) பெறுகைகள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளை பிரகாரம், மாதத்திற்கு ஒரு முறை தொலை பேசித் தொகுதி சேவைச் செய்யாமை மற்றும் காலாண்டு ரீதியாக கொடுப்பனவு செய்யாமை காரணமாக உள்ளக தொலைத் தொடர்ப்புத் தொகுதியின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் இடம்பெறாததால் கடந்த 07 ஆண்டு காலத்தினுள் வழங்குனரிற்கு செலுத்தியிருந்த ரூபா 2 மில்லியனிற்கு அதிக தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலகளாக அவதானிப்பதுடன் பெறுகைகள் நிபந்தனை பிரகாரம் தொகுதியின் பராமரிப்பு மற்றும் சேவைகளை பெற்றுக் | | |

| | | |
|---|---|---|
| கொண்டுள்ளனவா என மதிப்பீடின்றி அனைத்து கொடுப்பனவுகளையும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டியதாக உள்ளது. | | |
| (கா) **2021** ஆண்டிற்கான கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பொலிதீன் கழவு பைகள் (**Polythene Garbage Bag**) தேவைப்பாட்டை திறந்த விலைகள் கோரலின் ஊடாக தனியார் நிறுவனமொன்றில் இருந்து மற்றும் வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் **05** நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காக ரூபா **38.09** மில்லியனான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) வைத்தியசாலைகளிற்கு தேவையான பொலிதீன் கழவுப் பைகளின் தேவைப்பாட்டை சரியாக இனங்காணாது வைத்திசாலையினால் 2019 ஆண்டின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆண்டிற்காக இனங்கண்ட பொலிதீன் கழவுப் பைகளின் தேவைப்பாட்டை 51 சதவீத்தால் மிகை மதிப்பீடாகி இருந்தது. அவ்வாறே வைத்திசாலைக்கு தேவைப்படும் பொலிதீன் கழவு பைகளை இரண்டு முறையில் நிவர்த்தித்துக் கொள்ள காரணம் கணக்காய்வின் போது தெளிவாகாததுடன் கொள்வனவு செய்யப்படும் பொலிதீன் கழிவு பைகள், கழிவுகளை வெளியிடுவதற்காக அவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்ற முறைமை வைத்தியசாலையிடம் இருக்கவில்லை. | வைத்தியசாலைகளின் பொலிதீன் கழவுப் பைகளின் தேவைப்பாட்டை இனங்காண்பது வைத்தியசாலையின் தொற்றுக் கட்டுப்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆண்டிற்கான கழிவுப் பைகளின் தேவைப்பாட்டை 2019 ஆண்டின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றாவதுடன் நுகர்வு களஞ்சிய பொறுப்பாளரின் கோரிக்கையின் மீது 06 மாதாங்களின் தேவைப்பாட்டை மாத்திரம் 2021 பெறுகைகள் மூலம் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக, தற்போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளதன் பிரகாரம் வைத்திசாலையினால் மாத்திரம் கழவு பைகளின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ள | வைத்தியசாலைகளிற்கு தேவையான பொலிதீன் கழவுப் பைகளின் பரிமாணம் மற்றும் அளவுகளை திட்டவட்டமாக மற்றும் சரியாக இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுப்பதுடன் சுத்திகரிப்பு சேவை நிறுவனத்தின் ஊடாக கழிவு பைகளை பெற்றுக் கொள்வதனை முற்றாக நிறுத்தியுள்ளதாக. | |
| (ii) | 2021 மார்ச் 21 திகதி முதல் 2022 சனவரி 31 வரை வைத்தியசாலையினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாத்திரங்களிற்காக பாரிய பரிமாணத்திலான பொலிதீன் கழிவு பைகளை பயன்படுத்துவதனால் அன்னளவாக ரூபா 2.81 மில்லியனான நட்டமொன்றை அரசிற்று ஏற்படுத்தி இருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளதன் பிரகாரம் தற்போது ஒவ்வொறு வாட்டு மற்றும் பிரிவுகளிற்கான கழிவுகளை வகைப்படுத்தி கழிவு பைகள் விநியோகித்தல் மேற்கொள்ளப்படுதாக. | ஒழுங்கான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அரசிற்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்தை பொறுப்பு வாயந்த தரப்பினரிமிருந்து அறவிட வேண்டும். |
| (iii) | வைத்திசாலையினால் கோரியிருந்த தேவைப்பாட்டை விட குறைந்த பொலிதீன் படல தடிப்புடையதாக வழங்கி இருந்த மஞ்சள் நிற கழவு பைகளிற்காக செலுத்தியிருந்த ரூபா 16.4 மில்லியன், பச்சை, நீலம், சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிறத்தின் சிறிய, நடுத்தர மற்றும் பெறிய பரிமாண பொலிதீன் கழிவு பைகளிற்காக செலுத்தப்பட்ட ரூபா 8.45 மில்லியன் மற்றும் வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவையை வழங்கும் நிறுவனத்தினால் வழங்கும் கறுப்பு நிற பொலிதீன் கழிவு பைகளிற்காக செலுத்திய ரூபா 7.25 மில்லியன் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக அவதானிக்கப்பட்டன. | இது தொடர்பாக விசாரிக்க குழுவொன்றை நியமித்துள்ளதுடன் அதன் பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுமெள. | குழுவின் பரிந்துரையை பெற்றுக் கொண்டு குறித்த அறவீடுகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (கி) | கண்டி தேசிய வைத்திசாலையினுள் வரிசை முகாமைத்துவ தொகுதி மற்றும் நோயாளர் தொலைத் தொடர்பு தொகுதியொன்றை ஸ்தாபிப்பதற்காக (**Queue Management System and Patients Communication System (QMS)** 2020 ஜுலை 01 திகதி மாதாந்த வாடகை ரூபா 257,247 ஆகுமாறு 2020 ஜுலை மாதம் முதல் 2023 ஜுன் மாதம் வரை 3 வருட காலத்திற்காக ஒப்பந்தமொன்றில் | | |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் **2.8.5** பிரகாரம் பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு இவ்வாறான தொகுதியொன்று பற்றிய அறிவுடைய அலுவலர் ஒருவர் அல்லது விடயம் தொடர்பான நிபுணர் ஒருவர் ஏனும் பங்குபற்றி இருக்காததுடன் இதற்காக தொழிநுட்ப பதிப்பீட்டுக் குழுவொன்றையும் நியமித்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகள் மீண்டும் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் சுகாதார செயலாளரினால் 2023 பெப்ரவரி 16 திகதி வழங்கியுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரிவு மற்றும் அலுவலர்களிற்கு அறிவித்துள்ளதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | **2022** ஒக்டோபர் **12** திகதியளவிலும் குறித்த தொகுதி செயற்படாத காரணத்தால் **Kiosks 03** இயந்திரங்கள், **08 Mini PC** இயந்திரங்கள் மற்றும் **32** அங்குல **06** ரூபவாஹிணி இயந்திரங்கள் வைத்தியசாலை சிகிச்சை மற்றும் வெளிநோயாளர் பிரிவில் **Cardiology, Diabetes** மற்றும் **Gyn Clinic** ஆகிய சிகிச்சை வளவுகளில் விளைவற்று காணப்பட்டன. | தொகுதியை செயற்படுத்த தேவையான கடதாசி உருளைகளை பெற்றுக் கொள்ளும் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளவுடனே சேவைக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக, ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டு தொகுதியை செயற்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன் 2023 ஏப்ரல் 27 திகதி வைத்தியசாலையில் நடாத்தியதாக. | இத் தொகுதியை விரைவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மேற்குறித்த தொகுதியை செயற்படுத்துவதற்காக **2020** ஜுலை மாதம் முதல் **2022** பெப்ரவரி வரை காலப் பகுதியினுள் ரூபா **4,751,339** செலவிட்டிருந்த போதும், திட்டமிடல், இயக்குதல் மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட உள்ளக கட்டுப்பாடொன்றை அறிமுகஞ் செய்திருக்காத காரணத்தால் குறித்த தொகுதி இதுவரை செயற்படுத்த முடியாதிருந்தது. | வைத்தியசாலையினுள் நிலவும் நோயாளர் நெரிசல் மற்றும் நோயாளர்கள் மற்றும் ஆளணியினர் பிரச்சினையை குறைத்து மிகவும் வினைத்திறனான சேவையொன்றை வழங்க இத் தொகுதி அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்ததாக, தொகுதி உரியவாறு செயற்படாத காலத்திற்கு உரியதாக அறவிட்ட கட்டணத்தை மீண்டும் செலுத்துமாறு | இத் தொகையை அறவிட்டதற்கான ஆவண சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இலங்கை டெலிகொம் இற்கு அறிவித்துள்ளதாக. | |
| (கீ) நோயாளர் பராமரிப்பு சேவையின் தரத்தை உயர்த்தும் நோக்கில் கண்டி தேசிய வைத்திசாலையினால் **2018** பெப்ரவரி **08** திகதி ரூபா **18.02** மில்லின் செலவிட்டு **06** இலத்திரனியல் பயணிகள் போக்குவரத்து வண்டிகள் மற்றும் **04** இலத்திரனியல் நோயாளர் வண்டிகள் தொழிநுட்ப பதிப்பீட்டு குழுவினால் சுட்டிக் காட்டியிருந்த பலவீனங்களை கவனத்திற் கொள்ளாது மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் **8.12.1** (ஆ) மற்றும் **8.12.2** (அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த வண்டிகளை கொள்வனவு செய்து **2** ஆண்டுகளின் பின்னர் பல தொழிநுட்ப கோளாறு காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | இலங்கையின் இரண்டாகது பெறிய வைத்திசாலையாக 29 ஏக்கர் அளவான காணியில் பல புவியியல் வேறுபாட்டு நிலைமையின் கீழ் பரந்து காணப்படும் வாட்டுகள் மற்றும் கிளினிக்கள் அமைந்திருப்பது போன்று நோயளர்களிற்கு நடந்து செல்வது மிகவும் கடினமாக காணப்படுவது போன்ற பிரச்சினைகளை குறைக்கும் நோக்கில் கொள்வனவு செய்த இந்த இலத்திரனியல் வண்டி பயன்பாட்டால் சத்தம் மற்றும் வளி மாசடைதல் குறைவடைதல், எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளிற்காக செலவான அதிக செலவு குறைந்தமை, நோயாளர் வண்டிகளை அவற்றின் குறித்த பணிக்காக மற்றும் பயன்படுத்த முடியுமாக இருத்தல், நோயாளர் வண்டிகளை செலுத்த முடியாத பாதைகளிலும் நோயாளர் போக்கு வரத்திற்காக பயன்படுத்த முடியுமாக இருத்தல், சிறிய இடஅளவில் நிறுத்தி வைக்க முடியுமாதல், **Covid -19** போன்ற தொற்று நோய் நிலைமைகளில் மிகவும் பொருத்தமானதாக நோயாளர்களை போக்குவரத்து செய்ய முடியுமான காற்றோட்டமுள்ள விஷேட வண்டி ஒன்றாதல், நோயாளர் வண்டி உதவியாளர் ஒருவர் இன்றியும் செலுத்த முடியுமாதல் போன்ற நலன்கள் வைத்தியசாலைக்கும் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களிற்கு கிடைத்துள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு முரணாக செயற்பட்டமை தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் இந்த சொத்துக்கள் விளைவற்று வைத்திருக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (கு) | உலக வங்கி கடன் மூலம் செயற்படும் **Covid 19** அவசர பதில் மற்றும் சுகாதாரத் தொகுதியை ஆயத்தப்படுத்தும் கருத்திட்டத்தின் (மூன்றாம் மேலதிக நிதியீட்டல்) ஊடாக **2021** திசெம்பர் முதல் **2022** சனவரி வரையான காலத்தினுள் கொவிட் **19** தொற்றை ஒழிப்பதற்கு அரச மருந்தக கூட்டுத்தானத்தின் ஊடாக கொள்வனவு செய்து தொற்று நோய்கள் விஞ்ஞான நிறுவனத்திற்கு ரூபா **16,101.72** மில்லின் பெறுமதியான **13,999,050** பய்சர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு இருந்தன. தடுப்பூசிகள் வழங்கல் சங்கிலி அங்கீகார களஞ்சிய நிபந்தனைகளின் கீழ் காணப்படுமாயின் உற்பத்தியாளரின் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு **12** மாதங்கள் வரை உயிரியல் காலத்தை நீடிக்க முடியுமென தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு அதிகார சபையினால் அங்கீகாரத்தை வழங்கும் போது **781,560** உடன் கூடிய தடுப்பூசி **FN 9092** எனும் வகையை தவிர்த்து **04** வகைகளிற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கி இருந்ததுடன் இந்த விடுபட்ட வகையின் பெறுமதி ரூபா **1,055,290,644** ஆக இருந்தது. | இலங்கையினுள் பயன்படும் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளிற்காக அங்கீகாரம் வழங்குவதை தேசிய மருந்தக கூட்டத்தாபனம் மேற்கொள்வதுடன் அந்த நிறவனத்தினால் அங்கீகாரம் வழங்காத தடுப்பூசி அல்லது தடுப்பூசி வகைகளை பயன்படுத்த முடியாதென விடுபட்ட தடுப்பூசி வகையின் பாவனை தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயத்தினால் தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு அதிகார சபையிடம் உத்தியோகபூர்வ வினவல் ஒன்றை செய்துள்ளதாக. | அந்த வகை விடுபடுவதற்குரிய காரணத்தை பின்னூடல் செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண வேண்டும். |
| (கூ) | தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு அதிகாரி சபையின் செல்லுபடியான பதிவு சான்றிதழ் ஒன்று இல்லாத கம்பனியொன்றிடம் இருந்து அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் கிரயம் ரூபா **1.49** மில்லியனான **Ceftriaxone Sodium for Injection BP 500mg (ALCEF 500) 79,500** அலகுகள் கொள்வனவு செய்யப்படடிருந்தன. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு அதிகாரி சபையின் பதிவுடன் கூடிய நிறுவனங்களில் இருந்து மாத்திரம் மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டும். |

**3.5 குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கள் பிரிவின் அலுவலக கட்டிடம் மற்றும் களஞ்சிய கடடிடத் தொகுதியை மேவுகை செய்யும் வகையில் ரூபா **6.50** மில்லியன் செலுத்தி **2016** ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த **72** கெமராக்கள் உடன்கூடிய **CCTV** கெமரா தொகுதி **02½** ஆண்டுகளிற்கு அதிக காலமாக செயலற்று இருந்ததுடன் பெறுகை வழிகாட்டியின் **8.9** பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவு குறித்த கம்பனியுடன் முறையான ஒப்பந்தம் ஒன்றை கைச்சாதிட அல்லது பராமரிப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாதிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தொகுதியின் நவீனமயமாக்கும் நடவடிக்கை தாமதமாக **Covid-19** தொற்று பரவல் காரணமாக விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை மற்றும் நாட்டினுள் நிலவிய நிலையற்றதன்மை தாக்கம் செலுத்தி இருந்ததுடன் இதன் பின்னர் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக. குறித்த கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாதிட முடியாதுள்ளதுடன், இதற்கு பின்னர் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக. | பாரிய செலவைான்றை மேற்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள **CCTV** கெமரா தொகுதியை தொடர்ந்து பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இது தொடர்பாக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றிற்கு அல்லது பராமரிப்பு உடன்படிக்கையொன்றிற்கு கைச்சாதிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வட கொழும்பு போதனா வைத்தியசாலையில் **Histopathology** இரசாயன கூடத்தில் ஸ்தாபிக்கப்ட்டிருந்த ரூபா **5.83** மில்லியன் கிரயமான Freezing Microtome இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான இரசாயன பொருட்களை வழங்காத காரணத்தால் செயலற்று காணப்பட்டது. | குறித்த முகவர் நிறுவனத்திடமிருந்தே அந்த இரசாயன பொருட்களையும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதென, 2022.11.16 திகதிய கோரிக்கை பிரகாரம் 2022 நவம்பர் 27 கேள்விமனு கோரி அனுப்பப்பட்ட போதும் குறித்த முகவரி நிறுவனத்தால் கேள்வி மனு சமர்ப்பிக்கப்ட வில்லையென, கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்ட உடனே முன் நடவடிக்கை எடுப்பதென. | இந்த நிலைமைக்கான காரணங்களை இனங்கண்டு விரைவில் சரி செய்ய வேண்டியதுடன் இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது பரிசோதனைக்கு தேவையான இரசாயன பொருட்களை தொடர்ந்தும் வழங்குவதாக உறுதிப்படுத்தி கொள்ளவில்லலையா என பரீட்சிக்க வேண்டியதுடன் இயந்திரத்தை பயன்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 சொத்தக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | 2019 ஏப்ரல் 22 திகதி கனவாய்வாளர் நாயத்தினால் விநியோகிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக தேவையான சீராக்கம் மற்றும் அந்த விஷேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இந்நிலைமையினுள் அமைச்சின் வாகனங்கள் முகாமைத்துவம் மீதான தற்போதைய நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன் | | |
| (அ) | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பாக 2021 மற்றும் 2022 இரண்டு ஆண்டுகளிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த விடயங்கள் உள்ளிட்ட கணக்காய்வு ஐயவினா ஊடாக பதில் சமர்ப்பிப்பதாக. | இந்த தகவல்களை விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும |
| (ஆ) | அமைச்சின் வாகனங்கள் முகாமைத்துவ கணனி தரவுத் தொகுதியின் பிரகாரம் 2023 மார்ச் 17 திகதிக்கு 1301 வாகனங்கள் தொடர்பான தரவுகள் உள்ளக்கி இருந்ததாக காட்டியுள்ள போதும் அந்த வாகன இலக்கங்களில் 04 வாகன இலக்கங்கள் 3 சந்தர்பங்கள் வீதமும் 98 வாகன இலக்கங்கள் 2 சந்தர்பங்கள் வீதமும் அதனுள் உள்ளடக்கப்பட்டு இருந்தன. | - மேற்படி - | வாகன முகாமைத்துவ கணனி தரவுத் தொகுதியை பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரின் பொறுப்பில் ஒப்படைத்து முறையாக பேணிக் கொள்ள வேண்டும். |
| (இ) | அமைச்சின் போக்குவரத்து பிரிவினால் பராமரிக்கப்படும் சொத்துக்கள் பதிவேட்டை முறையாக பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரின் பொறுப்பில் நடாத்திச் செல்லப்பட்டு | - மேற்படி - | வாகனங்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேட்டை முறையாக பொறுப்பு வாய்ந்த அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. இந்த இரண்டு சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடங்கியுள்ள இனங்காண முடியுமான குறிப்புக்கள் பிரகாரம் 1167 வாகனங்களை விநியோகிக்கும் போது விநியோக கட்டளைகளின் மீது விநியோகிக்கப்பட்டு இருக்காததுடன் 1870 வானங்களிற்கு உரிய பெறுவனவுக் கட்டளைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | ஒருவரின் பொறுப்பில் பேணிக் கொள்ள வேண்டியதுடன் விடுவித்தல், ஒப்படைத்தல் அல்லது விநியோகித்தல்களை சரியாக இந்த சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்டு பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரினால் பெயர் மற்றும் கையொப்பம் இடப்பட்டு அது பற்றி உறுதி செய்ய வேண்டும் |
| (ஈ) | மேற்குறித்த விஷேட கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இவற்றில் 240 வாகனங்களை இனங்கண்டதாக குறிப்பிட்ட போதும் அதனை உறுதி செய்துகொள்ள போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் மேலும் 439 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் இந்த கணக்காய்வு திகதி வரை தேடிக்கொள்ள, மேற்குறித்த விஷேட கணக்காய்வு அறிக்கையை விநியோகித்து 04 ஆண்டுகள் அளவு கடந்துள்ள போதும் முடியாதிருந்தது. | - மேற்படி - | காணாமல் போன வாகனங்கள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் அமைச்சு மற்றும் நிறுவனம்/ வைத்தியசாலைகள் மற்றும் பிரவுகள் 68 இற்கு சொந்தமாக நிலவிய 1216 வாகனங்களில் 201 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சினால் பராமரிக்கப்படும் கணனி தரவுத் தொகுதியிற்கு உற்படுத்தி இருக்காததுடன் 277 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. | - மேற்படி - | வாகனங்கள் தொடர்பான தரவுத் தொகுதி மற்றும் சொத்துக்கள் பதிவேட்டை முறையாக பேணிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கணக்காய்வின் போது இனங்கண்ட மற்றும் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அமைச்சிற்கு கிடைத்த/ கொள்வனவு செய்ய 2299 வாகனங்கள் தொடர்பாக குறிப்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த 2299 வாகனங்களில் 1540 வாகனங்களை போக்குவரத்து பிரிவினால் பராமரிக்கப்படும் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருந்த போதும் அவற்றில் 35 வானங்களை விநியோகித்த நிலையங்கள் எதுவென குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே 759 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் இந்த சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இன்னும் 56 வாகனங்கள் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | பாவனையிலிருந்து அகற்றப்படும் வாகனங்களை விரைவில் பராதீனம் செய்யும் முறைமை ஒன்றை அமைச்சினால் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கவில்லை. 2018 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட வாகன பராதீன செயற்பாடு 2022 ஏப்ரல் 10 திகதி வரையும் முடிவுறுத்தப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | பதிவுரிமை சுகாதார செயலாளர் அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் காணப்படும் பராதீனம் செய்ய வேண்டிய வாகனங்களை விரைவில் பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | சுகாதார அமைச்சிற்கு சொந்தமான ஒரு வாகனத்தை 2022 ஆண்டில் ஏலத்தில் விற்பனை செய்த வாகனமொன்று என தவறான தகவல்களை சமர்ப்பித்து உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக மேல் மாகாண மோடார் வாகன திணைக்களத்தினால் 2022 சனவரி 28 திகதி சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு எழுத்து மூலம் அறவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஏப்ரல் 10 திகதி வரை அமைச்சிற்கு சொந்தமான இந்த வாகனத்தை சட்டரீதியாக மீண்டும் பெற்றுக் கொள்ள போதிய செயற்பாடுகளை பொறுப்பு வாய்ந்த அலுவலர்களினால் எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்து வாகனத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்பை புறக்கணித்த அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2020 ஆண்டில் ரூபா 239.48 மில்லியன் செலவிட்டு கொள்வனவு செய்த 805 மோடார் சைக்கில்கள் அமைச்சின் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருக்காததுடன் இந்த மோடார் சைக்கில்கள் வழங்கப்பட்ட நபர்களுடன் எழுத்துமூல உடன்படிக்கைகளிற்கு உட்பட பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | விரைவில் எழுத்துமூல் உடன்படிக்கைகளிற்கு உட்பட வேண்டும். |
| (ஒ) | அமைச்சின் செயலாளர் அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 721 மோடார் சைக்கில்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருக்கவில்லை. | - மேற்படி - | இந்த தகவல்களை விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும் |
| (ஓ) | சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியுள்ள மோடார் சைக்கில்களின் எண்ணிக்கை 891 ஆனதுடன் அவற்றில் 840 மோடார் சைக்கில்கனை விநியோகித்தல், விநியோகக் கட்டளைகள் ஊடாக மேற்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | இந்த தகவல்களை விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் அமைச்சிற்கு சொந்தமான மோடார் சைக்கில்கள் தொடர்பாக காணப்படும் உள்ள கட்டுப்பாட்டு தொகுதியை வலுவூட்ட முயற்சி எடுக்க வேண்டும். |

**3.7 முகாமைத்தவ பலவினங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 19 திகதிய இலக்கம் 03/2017 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவனூடாக அலுவலர்கள் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் புறப்படலை உறுதி செய்வது தொடர்பான அறிக்கைகளை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் செயற்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்திருந்த போதும் நிலவிய தொழிற் சங்க எதிர்ப்பு காரணமாக இது வரை அதனை செயற்படுத்த முடியாதுள்ளதாக, பிரிவு தலைவர்களின் மேற்பார்வையின் கீழ் தின | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் புறப்படலை தொடர்பான அறிக்கைகளை பேணிக் கொள்ளவும், அதற்கு இணங்கும் வகையில் அலுவலர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதுடன் 2017 மே 12 திகதிய இலக்கம் DMS/0016 கொண்ட திறைசேரி செயலாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு விநியோகித்திருந்த கடிதம் பிரகாரம், சுகாதார ஆளணியினரின் வருகைதரல் மற்றும் புறப்படலை உறுதி செய்யக்கூடிய வகையில் விரல் அடையாள இயந்திரத்தை 2017 ஜூலை 01 திகதி முதல் செயற்படுத்துவதில்லை எனில் தற்போதைய சம்பளத்தின் பிரகாரம் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தாதிருக்க பொறுப்பேற்க வெண்டும். எனினும் அமைச்சினால் அமைச்சிற்கு, அதற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிற்காக ரூபா 31.08 மில்லியன் செலவில் ஸ்தாபித்திருந்த 213 விரல் அடையால இயந்திரங்களை பயன்படுத்தாது செயலற்று நிலவியதுடன் தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் சம்பளத்திற்காக ரூபா 43,356.02 மில்லியன் மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்காக ரூபா 36,191.77 மில்லியனுமாக மொத்தத் தொகை ரூபா 79,547.79 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்காக செலவிட்டு இருந்த மொத்தத் தொகை சம்பள கிரயத்தின் 72 சதவீதமளவாக இருந்தது. | வருகைதரல் மற்றும் புறப்படல் பதிவேட்டை உரியவாறு பராமரிப்பதற்காக தற்போது அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக மற்றும் கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் மீண்டும் அனைத்து பிரிவு தலைவரிகளினதும் கவனத்தை செலுத்தி அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | மேலதிக கடமை படிகளை செலுத்துவது தொடர்பாக தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறையை பேணிச் செல்ல நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2003 சனவரி 29 முதல் 02 வருட காலத்திற்கு புலமைப்பரிசில்/ பாடநெறிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த மருத்துவர் ஒருவர் 2005 பெப்ரவரி 28 திகதி மீண்டும் கடமைக்கு அறிக்கையிட்டிருந்தார். அவர் 2005 மே 30 திகதி முதல் 52 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்று தனிப்பட்ட சுற்றாலாவொன்றிற்காக வெளிநாடு சென்றிருந்தார். கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாது இருக்கையில் அவரிற்கு தீவிற்கு வெளியில் வெளிநாட்டு வேலையில் ஈடுபட 2006 மே 08 திகதி முதல் | இவ்வலுவலர் தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொள்ள குறித்த பிரிவை அறிவுறுத்தியுள்ளதுடன் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் முன்னேற்றத்தை அறிக்கை இடுவதாக. | இது தொடர்பாக முறையான சுயாதீன புலனாய்வொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஓராண்டு சம்பளமற்ற விடுமுறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவர் 2007 ஆண்டின் பின்னர் கடமையாற்றியதாக தகவல்கள் தனிப்பட்ட கோப்பில் உள்ளடங்காத போதும் 2022 நவம்பர் மாதம் கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது 15 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அலுவலர் சேவையை வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை பிரகாரமும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி அலுவலர்களிற்கு கலாநிதி பட்டத்தை பயில்வதற்காக 2020 செப்டம்பர் 26 திகதி வரை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. 2020 செப்டம்பர் 27 திகதி சேவைக்கு அறிக்கையிட வேண்டிய போதும், கணக்காய்வு சந்தர்ப்பமான 2022 ஜுன் 20 திகதியளவிலும் அலுவலர் சேவைக்கு அறிக்கையிட்டு இருக்கவில்லை. அலுவலர் சேவையை விட்டுச் சென்று 15 மாதளவின் பின்னர் 2021 திசெம்பர் 22 திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தரவு விநியோகிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே அறவிட வேண்டிய ரூபா 1.14 மில்லியனான பிணைமுறியை மீறிய தொகையை மற்றும் சம்பளம் மற்றும் படிகளாக மேலதிகமாக செலுத்திய ரூபா 7,186 தொகையை 2022 ஜுன் 30 திகதியளவிலும் அலுவலரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்கு நிலைமை காரணமாக கடிதப் பரிமாற்றலில் நிலவிய தாமதத்தின் மீது அலுவலரிற்கு சேவையை விட்டுச் சென்ற உத்தரவை விநியோகிக்க தாமதித்துள்ளதாகவும், அலுவலரின் கோரிக்கை மீது நிதிப்பிரமாணம் 119 கீழ் குறித்த தண்டப்பணத்தை 30 தவணைகளில் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக மற்றும் 04 நாட்களிற்காக மேலதிகமாக செலுத்திய சம்பளம் மற்றும் படிகளை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரிற்கு அறிவித்துள்ளதாக. | - மேற்படி - |
| (ஈ) | சுகாதார அமைச்சின் புலனாய்வுப் பிரிவின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 ஆண்டினுள் சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு பிரிவினால் புலனாய்வு பிரிவிற்கு புலனாய்வு | 2022 ஆண்டில் பூர்த்தி செய்த கோவைகள் 22 ஆவதுடன் 2021 திசெம்பர் 31 திகதிக்குரியதான கோவைகளின் | இந்த புலனாய்வுகளை விரைவில் பூர்த்தி செய்வதற்காக பொறுத்தமான செயற்திட்டமொன்றை |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக 364 ஆரம்ப பரிசோதனை அறிக்கைகளை சமர்பித்திருந்ததுடன் 2021 சனவரி 01 திகதி காணப்பட்ட 659 ஆன பூர்த்தி செய்யப்படாத புலனாய்வு எண்ணிக்கை 2021 திசெம்பர் 31 திகதிக்கு 900 வரை அதிகரித்து இருந்தது. | எண்ணிக்கை அதற்கு சேர்க்கப்படாததால் மொத்த புலனாய்வு கோவைகள் எண்ணிக்கை 922 ஆக திருத்தப்பட வேண்டியதாக. | தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ii) | புலனாய்வை ஆரம்பித்த திகதி மற்றும் பூர்த்தி செய்த திகதி தொடர்பாக கவனத்திற் கொள்ளும் போது, புலனாய்வுகளை பூர்த்தி செய்ய 12 மாதங்கள் முதல் 132 மாதங்கள் வரையான காலத்தை செலவிட்ட 87 புலனாய்வுகள் காணப்பட்டன. | ஒழுக்காற்று அதிகாரியுள்ள நிறுவனத்துடன் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளும் போது ஏற்படும் தாமதம் மற்றும் கொவிட் தொற்று காரணமாக விசாரணைகளை கால நேரத்திற்கு நடாத்த முடியாமை போன்ற பல விடயங்களினால் குறித்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் தாமதித்ததாக மற்றும் மேற் குறிப்பிட்ட விடயங்களை குறைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (iii) | புலனாய்வை ஆரம்பித்து 12 மாதங்கள் முதல் 180 மாதங்கள் வரையான நீண்ட காலமொன்று கடந்திருந்த போதும் 2022 ஜுலை 18 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்காத புலனாய்வு எண்ணிக்கை 182 ஆனது. | இவற்றில் 38 கோவைகளின் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளதாக, வைத்தியசாலை ஊடாக ஒழுக்காற்று நடவடிக்கை தாமதமாவதால் அதற்காக வைத்தியசாலைகளுக்கு உள்ள சுற்றறிக்கை ஒன்றை விநியோகிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மற்றும் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப் பெறாத கோவைகளிற்காக நீதிமன்றங்களிடம் தகவல்களை வினவுவதற்கு மேலதிகமாக குறித்த பொலீஸ் நிலையத்தின் ஊடாக நீதிமன்ற அறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கணக்காய்விற்கு சமர்பித்த தகவல்களின் பிரகாரம் 2021 ஆண்டில் ஆரம்பித்த 364 புலனாய்வுகளில் பூர்த்தியாகாத 84 புலனாய்வுகள் காணப்பட்டதுடன் 268 புலனாய்வுகள் பூர்தியாகி உள்ளனவா இல்லையா என தெளிவாக காட்டப்படவில்லை. | தற்போது 44 கோவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏனைய கோவைகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | - மேற்படி - |
| (உ) | சுகாதார அமைச்சின் சட்ட பிரிவின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கணக்காய்விற்கு சமர்பித்த தகவல்களின் பிரகாரம் 2021 ஆண்டின் ஆரம்பத்தில் பூரணமாக பூர்த்தி செய்யாத 106 வழக்குகள் காணப்பட்டதுடன் 2021 ஆண்டினுள் புதிதாக 39 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 27 வழக்குகளை 2021 ஆண்டில் பூர்த்தி செய்த போதும் ஆண்டிறுதியளவில் பூர்த்தி செய்யப்படாத 118 வழக்குகள் காணப்பட்டன. இவற்றில் 106 வழங்குகள் அதாவது மொத்த வழக்குகளில் எண்ணிக்கையில் 90 சதவீதம் அமைச்சிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குளானது. | இந்த விடயங்கள் உள்ளிட்ட கணக்காய்வு ஐயவினாவின் மூலம் பதில் முன்வைப்பதாக. | அமைச்சின் சட்டப் பிரிவு செயற்பாடுகள் தொடர்பாக பரிசோதித்து அந்த பிரிவின் செயற்பாடுகளை முறையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சுகாதார அமைச்சுடன் தொடர்பான வழக்குகள் பற்றிய தகவல் பரிசோதனையின் போது 10 ஆண்டுகளை விஞ்சி பழமையான பூர்த்தி செய்யப்படாத அமைச்சின் கீழ் காணப்படும் வைத்திசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் வெளித் தரப்பினரிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரூபா 415,588 ஆன 02 வழக்குகளும் அமைச்சிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரூபா 32.75 மில்லியனான 06 வழக்குகளுமாக 08 வழக்குகள் காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சினால் செயற்படுத்திய பெறுகைகளிற்கு உரிய தீர்மானங்களிற்கு எதிராக பல | - மேற்படி - | ஒப்பந்ததாரர் தந்திரமாக இவ்வாறு வழக்கு தாக்கல் செய்து ஒப்பந்த காலத்தை நீடித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அநேக வழக்குகள் அதன் போது குறித்த பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்டவைகளாக அவதானிக்ப்பட்டது. அமைச்சின் சட்டப் பிரிவு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடி இந்த வழக்குகளை பூர்த்தி செய்து கொள்ளும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு இடம்பெறாவிட்டால் பெறுகைகள் நடவடிக்கையூடாக எதிர்பார்த்த நோக்கத்தின் பால் பாதகமான தாக்கமொன்று ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவதானிகக்ப்படுவதால் நீதிமன்றத்தினால் தடை உத்தரவு வழங்காத சந்தர்ப்பங்களில் பெறுகைகள் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | ஒப்பந்தத்தை மீறிய அலுவலர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு தொடர்புடைய தகவல்களை சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பல சந்தர்ப்பங்களில் கணக்காய்விற்கு அறிவித்துள்ளதுடன் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்ட சந்தர்ப்பங்களில் குறித்த அறவீட்டிற்காக தகவல்கள் சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இவ்வாறு ஒப்பந்தத்தை மீறிய அலுவலர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகையை அறவிட தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உள்ளடக்கப்படவில்லை. | அமைச்சினால் அனுப்பப்பட்ட கோரிக்கை கடிதங்களிற்கு பதில் வழங்காதவர்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பபப்பட்டுள்ளதுடன் குறித்த ஆவணப் பட்டியல் இதற்கு முன்னர் கணக்காய்வு பிரிவிற்கு சமர்பித்துள்ளதாக மற்றும் கோரிக்கை கடிதத்திற்கு பதில் வழங்கி கொடுப்பனவு நடவடிக்கையை முடிவுறுத்தல் மற்றும் பல தவணைகளின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ள இணங்கியதன் ஊடாக வழக்கு தாக்கல் செய்வதனை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதால் அது தொடர்பாக இது வரை வழக்கு தாக்கல் செய்ய சந்தர்ப்பம் ஏற்படவில்லை எனவும். | சட்டப் பிரிவிற்கு அனுப்பிய அனைத்து சந்தர்ப்பங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான பூரண அறிக்கை ஒன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 சனவரி 01 முதல் 2022 ஆகஸ்ட் 15 வரையான காலத்தினுள் 23 பயிற்சி பாடசாலைகளிற்கு | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | அரசிற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து தொகைகள் தொடர்பாக மற்றும் அத் தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்க்கப்பட்ட 432 பயிற்சியாளர்கள், பயிற்சியை உரியவாறு பூர்த்தி செய்யாது பயிற்சியை கைவிட்டு சென்றிருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணைமுறி மாத்திரம் ரூபா **115.85** மில்லியன்கள் அளவானது. | | அறவிடு முன்னேற்றம் தொடர்பாக பூரண அறிக்கை ஒன்றை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (எ) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒப்பந்த பிணைமுறிகளை மீறிய தாதி மாணவர்கள் எழுநூற்று இரண்டு பேர்களிடமிருந்து (702) அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 225.38 மில்லியன் எனவும் 2021 ஜுன் 30 திகதியளவில் அவற்றிலிருந்து ரூபா 25.92 மில்லியன் அறவிடப்பட்டு இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டு இருந்தது. அந்த அறவீடுகளை உறுதிப்படுத்தும் ஆவண சான்றுகள் மற்றும் மேலும் அறவிடப்பட வேண்டியதாக குறிப்பிட்டுள்ள ரூபா 199.46 மில்லியனை அறவிடுவது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. அவ்வாறே கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் 159 மீதி மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த பிரிவுகள் இடையே உரியவாறான ஒருங்கிணைப்பொன்று இல்லாத காரணத்தால் இவ்வாறான நிலைமை எற்பட்டுள்ளதால் குறித்த பிரிவுகளை அறிவுறுத்தியுள்ளதுடன் தெளிபடுத்தல் கிடைத்த பின்னர் விரைவில் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக மற்றும் இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழு ஒன்றுகூடி எடுத்த தீர்மானங்களின் முன்னேற்றம் உள்ளிட்ட அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறும் குறித்த அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எடுக்கப்படும் செயற்பாடுகளை விரைவில் சமர்பிப்பதாக. | இது தொடர்பாக பரீட்சித்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து தொகைககளையும் அறவிடவும் பொறுப்புக்களை புறக்கணிக்கும் அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | அமைச்சின் மூன்றாம் பராமரிப்பு சேவைப் பிரிவினால் தனிநபர் கோவைகள் பராமரிக்கும் மருத்துவ உத்தியோகத்தர்களிற்கு உரியதாக 2015 ஒக்டோபர் முதல் 2022 திசெம்பர் வரை கடமையை விட்டுச் சென்ற 71 மருத்துவர்களிற்கு விநியோகிக்கப்பட்ட கடமையை வெறிதாக்கிய கடிதங்களில் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பியதாக அறிவித்திருந்த போதும் இந்த எவ்வித கடிதமும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2015 முதல் 2022 வரை கடமையை விட்டுச் சென்ற மருத்துவ அலுவலர்களிற்கு விநியோகிக்கப்பட்ட கடமையை வெறிதாக்கிய கடிதங்களின் பிரதிகள் சுகாதார அமைச்சின் அரச கணக்காய்வு உப அலுவலகத்திற்கு தற்போது ஒப்படைத்துள்ளதாக. | இது தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சுகாதார அமைச்சினால் 2012 ஜூன் 13 திகதி வெளியிட்டிருந்த இலக்கம் 02-158/2007-03 கொண்ட பொது சுற்றறிக்கை ஊடாக இடமளித்திருந்த திகதி மற்றும் கால எல்லைக்கு முரணாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மருத்துவ/ வியாபார விற்பனை முகவர்களின் வருகை மற்றும் வியாபார விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் இது தொடர்பாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் ஏனைய ஏற்பாடுகள் வைத்தியசாலை அதிகாரிகளால் செயற்படுத்துவதில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு மருத்துவ/ வியாபார விற்பனை முகவர்கள் வைத்தியசாலைக்கு வருவதனை மட்டுப்படுத்த சுகாதார அமைச்சினால் 2012.06.13 திகதி வெளியிட்ட இலக்கம் 02-158/2007-03 கொண்ட பொது சுற்றறிக்கை பிரகாரம் குறித்த பிரிவு மற்றும் பாதுகாப்பு பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கியதாக. | வைத்தியசாலை உள்ளே மருத்துவ/ வியாபார விற்பனை முகவர்களினால் மேற்கொள்ளப்படும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளும் வகையில் குறைந்தபட்ச வேலைத் திட்டமொன்றை வைத்தியசாலை இனால் தயாரித்து விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஒ) | 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளிற்கு உரியதாக வழங்கியிருந்த இடமாற்ற உத்தரவு தொடர்பாக இடமாற்றம் கிடைத்து எனினும் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு (போதனா) இணைக்கப்பட்டு நீண்ட காலமாக கடமையாற்றிய 11 மருத்துவர்கள் 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதம் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சித்தலின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 09 மருத்துவ அலுவலர்கள் 2015 முதல் 2018 வரையான ஆண்டுகளின் இடமாற்ற உத்தரவு பிரகாரம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மற்றும் த சொய்சா பெண்கள் வைத்தியசாலைக்கு (போதனா) இடமாற்றம் வழங்கியிருந்ததுடன் மீண்டும் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்டிருந்தனர். அந்த 09 மருத்துவ அலுவலர்களையும் 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அந்த வைத்தியசாலை கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதும் குறித்த | மருத்துவ அலுவலர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை இடமாற்ற சபையொன்றின் ஊடாக மேற்கொள்ளப் படுவவதாக, சேவை தேவைப்பாட்டின் மீது விடுவித்த பின்னர் மீண்டும் இணைக்கப்பட்ட மருத்துவர்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதும் அச் சபையினால் மேற்கொள்வதாக, அவர்களை மீள் இணைப்புச் செய்வதனை நீடிப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் | முறையான பரீட்சித்தலை மேற்கொண்டு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வைத்திசாலைகளில் கடமைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. | நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதால் அந்த மருத்துவ அலுவலர்கள் தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதென. | |
| (ii) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் கடமை புரியும் இன்னும் ஒரு வைத்திய அலுவலர் 2019 ஆண்டில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 23 திகதி அந்த வைத்தியசாலை கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த மருத்துவ அலுவலர் விடுவிக்கப்பட்ட பின்னரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அறிக்கையிட்டிருக்கவில்லை. | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளரின் 2022.01.13 திகதிய கடிதத்தை **HRMIS** தொகுதி ஊடாக தயாரிக்கப்பட்ட கடிதமொன்று அல்லாததால் அதனை விடுவிப்பாக ஏற்க முடியாதென, அமைச்சின் 2022.04.06 திகதி வழங்கிய குறுந்தகவலின் பிரகாரம் மற்றும் 2022.04.05 திகதிய கடிதம் மூலம் 2022.01.01 திகதியிலிருந்து மீண்டும் அறிவிக்கும் வரை மற்றும் 2022 தரத்திலான மருத்துவ அலுவலர்களின் இடமாற்ற உத்தரவு கிடைக்கும் வரை மீண்டும் இணைக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களிற்கு சம்பளத்தை தொடர்ந்து செலுத்துமாறு அறிவித்துள்ளதால் இந்த கடிதங்களின் பிரகாரம் செயற்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| (iii) | மீண்டும் இணைக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் சம்பள கொடுப்பனவு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் **MA/MS/B**/03/2019/A இலக்கம் மற்றும் 2022 ஏப்ரல் 05 திகதிய இலக்க கடிதத்தை தவறுதாலாக பயன்படுத்திக் கொண்டு 09 மருத்துவ அலுவலர்களிற்காக அவர்களை கடமையிலிருந்து விடுவித்த திகதியிலிருந்து 2022 ஆகஸ்ட் மாதம் வரை சம்பளம் மற்றும் படிகளாக (மேலதிக நேர கொடுப்பனவு தவிர) முறையே ரூபா 7.95 மில்லியன் மற்றும் ரூபா 938,437 செலுத்தப்பட்டிருந்தது. | இலக்கம **MA/MS/B**/03/2019/(A) மற்றும் 2021.03.30 திகதிய கடிதம் மூலம் மீண்டும் இணைக்கப்பட்ட அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும் சம்பளம் செலுத்துமாறு அறவித்துள்தாக, ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளரின் இலக்கம் **LRH/EA**/06/2021 மற்றும் 2021.11.10 திகதி கடிதம் மூலம் மீண்டும் இணைக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு 2021.10.01 திகதி முதல் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | 2021.12.31 திகதி வரை சம்பளம் செலுத்துமாறு அறவித்துள்ளதால் சம்பளம் செலுத்தியுள்ளதாக. | |
| (iv) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் கடமையில் இருந்து விடுவிக்கப்பட்ட 11 மருத்துவ அலுவலரகளிற்கு அந்த வைத்தியசாலை அதிகாரிகளினால் கடமை ஒப்படைத்தல் இன்றி வைத்தியசாலையின் ஒவ்வொறு பிரிவினால் மாதாந்தம் தயாரிக்கப்படும் மருத்துவர்களின் கடமை பட்டியலிற்கு பெயர்களை உள்ளடக்கி சேவையிலிருந்து விடுவித்த திகதி முதல் 2022 ஜுன் வரை ரூபா 5.72 மில்லின் தொகையை மேலதிக நேர கொடுப்பனவாக மற்றும் விடுமுறை தின சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தன. | இவ் விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2022.11.23 திகதிய கடிதம் மூலம் இந்த அலுவலர்கள் மீளாய்வு காலப்பகுதியினுள் இந்த வைத்தியசாலையினுள் சேவை புரிந்ததாக கருதி முன்நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதாக, இந்த 11 அலுவலர்களும் புதிய சேவை நிலையங்களிற்கு அறிக்கை இடாதிருப்பதற்கு காரணம் தொழிற் சங்க செயற்பாடொன்று எனவும், அக் காலத்தினுள் அவர்கள் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் வாட்டு/ அலகுகளில் பணிப் பொறுப்பு நிபுணத்துவ மருத்துவர்களின் அங்கீகாரத்துடன் வாட்டு/ அலகுகளில் மேலதிக கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் இது பற்றி அவர்களின் தினப் புத்தகங்களில் குறித்த நிபுணத்துவ மருத்துவர்கள் உறுதி செய்துள்ளதாகவும் அவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளதெனில் அவர்களின் மேலதிக கடமை படிகளை செலுத்துமாறு சுகாதார செயலாளரினால் அக் கடிதத்தில் குறிப்பொன்றை இட்டு உத்தரவிட்டுள்ளதாக. | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 2015 முதல் 2019 வரை வழங்கி இருந்த இடமாற்ற உத்தரவுகளை செயல்படுத்தாது, நீண்ட காலமாக ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டுள்ள 11 மருத்துவர்களில் 09 பேர்கள் மீண்டும் 2022 | - மேற்படி - | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் மருத்துவர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் அந்த வைத்தியசாலைக்கே மாற்றப்பட்டிருந்தனர். | | இடமாற்ற கொள்கையை செயற்படுத்தும் போது நீண்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவை ஆற்றுவதற்கு இடமளிக்காத வாரு மீண்டும் இணைக்கும் சேவை காலத்தை கவனத்திற் கொள்ள வேண்டும் |
| (ஓ) | கேகாலை பொது வைத்தியசாலை வளவில் இலங்கை வங்கி கிளை ஒன்றிற்காக 2006 ஆண்டு முதல் உடன்படிக்கை இன்றி வைத்தியசாலை நிர்வாகக் கட்டிடத்தின் ஒரு பகுதியை வழங்கியிருந்ததுடன், 2020 சனவரி முதல் அதற்காக மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட்ட போதும், 2007 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான 13 வருட காலத்திற்காக அறவிட வேண்டிய வாடகை தொகை தீர்மானித்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை தொகையை அறவிடுவதற்கு இலங்கை வங்கி மாகாண அலுவலகத்திற்கு அறிவித்துள்ளதுடன் அந்த நிலுவை வாடகை தொகையை செலுத்துவதற்கு இயலுமானதாக இல்லையென அறிவித்துள்ளதால் 2007 ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 13 வருடத்திற்கான நிலுவை வாடகை தொகையை அறவிடுவது தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | 2007 ஆண்டு முதல் நிலுவை வாடகையை அறவிட்டு கணக்காய்விற்கு உறுதி செய்ய வேண்டும். |
| (ஔ) | கம்பளை ஆதார வைத்தியசாலையில் பல் மருத்துவ கதிர் பரீசோதனைக்காக பயன்படுத்தும் **X - Ray** இயந்திரத்தின் பயன்பாட்டிற்கு தேவையான இரசாயன பொருட்களை (**Developer, fixer**) மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைக்கு வழங்காத காரணத்தால் 2020 ஒக்டோபர் 31 திகதியின் பின்னர் அந்த இயந்திரம் பயன்படுத்துவத முடியாமல் இருந்தது. இதன் காரணமாக ஓராண்டிற்கு 250 அளவான நோயாளர்களுக்கு இந்த பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. | ஒவ்வொரு ஆண்டிலும் பல் மருத்துவ கதிர் பரிசோதனைக்கு தேவையான (**Developer, fixer**) வருடாந்த மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்துள்ள போதும் இதுவரை அந்த உருப்படிகளை மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து விநியோகிக்காததன் மீது பல் மருத்துவ கதிர் பரிசோதனையை மேற்கொள்ள முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாக. | இவ்வாறான நிலைமையை தவிர்த்துக் கொள்ள மருத்துவ வழங்கல் பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | பேராதனை போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ வாயு வழங்களை மேற்கொள்ளும் **compressed Air** 2 இயந்திரங்கள் மற்றும் 3 **Vacuum** இயந்திரங்கள் செயலற்று இருந்தன. இந்த இயந்திரங்களின் மற்றும் குழாய் தொகுதியின் சேவை நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 17 திகதி வரை செயற்படும் வகையில் ரூபா 1,118,964 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதும் அந்த இயந்திரங்களை திருத்துவதற்கு 2023 சனவரி 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த இயந்திரங்களில் மற்றும் குழாய்த் தொகுதியின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதும் 2022 ஆண்டில் மூலதன செலவினத்திற்காக ஏற்பாடு மற்றும் கட்டுநீதி போதாமை காரணமாக அந்த சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனதாக மற்றும்<br><br>தற்போது ஒரு இயந்திரம் செயற்படுவதுடன் ஏற்பாடு கிடைத்தவுடன் மற்றைய இயந்திரத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |
| (கா) | 2021 ஆண்டின் பெப்ரவரி மாதம் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையினுள் நிர்மாணித்திருந்த எரிகருவி **(Incinerator**) ஊடாக வைத்தியசாலையின் மொத்த கழிவுகளையும் எரிப்பதனால் சுகாதார அமைச்சின் மூலம் 2017 ஜூன் 16 ஆம் திகதி சிலாபம் பொது வைத்தியசாலைக்கு வழங்கியிருந்த ஐக்கிய இராட்சய டொலர் 701,335.83 அளவு பெறுமதியான மெட்டாமைசர் இயந்திரம் விலைவற்று காணப்பட்டது. | மெட்டாமைசர் இயந்திரத்தை இரத்தினபுரி வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் சிலாபம் வைத்தியசாலை மூலம் இதற்காக எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளவில்லை என. | இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும் இயந்திரம் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை என்னவென்று மற்றும் சிலாபம் மாவட்ட வைத்தியசாலையினுள் ஸ்தாபித்திருக்கு இயந்திரத்தை இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் ஸ்தாபிக்கும் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்வதன் முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார அமைச்சிற்குரியதாக நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகள் 31 இனை இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் 13 சுட்டிகளிற்காக மீளாய்வாண்டிற்கான முன்னேற்றத்தை அறிக்கையிட்டு இருக்காவில்லை. முன்னேற்றத்தை அறிக்கையிட்டு இருந்த சுட்டிகள் இலக்கம் 3.1.1, 3.2.1, 3.2.2, 3.3.2, 3.3.5.1, 3.3.5.2, 3.3.5.3, 3.3.5.4, 3.8.1.6, 3.8.1.9, 3.8.1.10 மற்றும் 3.a.1 ஆகிய சுட்டிகளின் தேவையான செயலாற்றுகை மட்டத்தை அடைந்திருக்கவில்லை. | அநேக சுட்டிகள் ஊடாக எதிர்பார்த்த நோக்கம் மற்றும் இலக்குகள் செயலாற்றுகை மட்டத்திற்கு உயர்வான மட்டத்தில் நிலவுவதாக, எவ்வாறாயினும் இங்கு குறிப்பிட்டுள்ள 13 சுட்டிகள் ஊடாக எதிர்பார்த்த நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஒவ்வொறு சுட்டிகளிற்கும் உரியதாக பொறுப்பு வாயிந்த அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன் அது தொடர்பாக தொடர்ச்சியான மேற்பார்வையையும் செய்வதாக. | 2030 அளவில் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள வருடாந்தம் பின்னூட்டல் செய்து தேவையான முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 5 மனிதவள முகாமைத்துவம்

### 5.1 இணைக்கப்பட்ட ஆளணி, உள்ளவாறான ஆனணி மற்றும் ஊழியர் சம்பளத்திற்கான செலவினங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிறைவேற்று மட்ட 39 பதவிகளிற்குரிய 1,586 வெற்றிடங்கள் மற்றும் 03 பதவிகளிற்குரிய 11 மிகையும், மூன்றாம் மட்ட 61 பதவிகளிற்குரிய 405 வெற்றிடங்களும், ஒரு பதவிகளிற்குரிய 01 மிகையும், இரண்டாம் மட்ட 83 பதவிகளிற்குரிய 5,565 வெற்றிடங்கள் மற்றும் 37 பதவிகளிற்குரிய 597 மிகையும், | நாடளாவிய சேவை, இணைந்த சேவை மற்றும் திணைக்களத்திற்கான சேவைகளிற்குரியதான சிரேஷ்ட மட்டம், மூன்றாம் மட்டம், இரண்டாம் மட்டம், ஆரம்ப மட்டம் மற்றும் ஏனைய சேவை வகைகளுடன் கூடிய பாரிய ஆளணியினர் சுகாதார அமைச்சு மற்றும் அதன் | பணிகளை வினைத்திறனாக நடாத்திச் செல்ல அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அந்த அந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிற்கு |

ஆரம் மட்ட 46 பதவிகளிற்குரிய 8,626 வெற்றிடங்களும் மற்றும் 20 பதவிகளிற்குரிய 2,370 மிகையும் நிலவின. அவ் வெற்றிடங்களினுள் சுகாதாரத் துறையை நடாத்திச் செலும் போது மிகமுக்கிய பதவிகளிற்கிடையில் 1,331 மருத்துவ உத்தியோகத்தர்களும், பல் மருத்துவ அறுவை சிகிச்சை 77 அலுவலர்களும், 1,759 தாதி அலுவலர்களும், 275 தாதி சகோதர சகோதரிகளும், 136 வைத்திய இரசாயனகூட தொழிநுட்ப நிபுனர்களும், 68 தொழில்சார் சிகிச்சையாளர்களும், 126 மருந்துவ கலவையாளர்களும், 270 கதிர்வீச்சு நிபுணர்களும், 37 பொது சுகாதார பரிசோதகர்களும், 451 குடும்ப சுகாதார சேவை அலுவலர்களும், 2,268 பராமரிப்பாளர்களினதும் வெற்றிடங்கள் காணப்பட்டன.

கீழுள்ள வைத்தியசாலைகளில் மற்றும் நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுள்ளதாக, அவற்றினுள் வருடாந்தம் ஒவ்வொறு பதவிக்குமுரிய ஆளணியினர் பலதரப்பட்ட காரணங்களின் மீது சுழற்சியான சேவையில் இருந்து விலகுவதால் அநேக பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படுவதாக, இவ்வாறு ஏற்படும் வெற்றிடங்களை விரைவில் நிரப்பிக் கொள்ள தேவையான போதும் அதற்காக பின்பற்ற வேண்டிய செயன்முறை சிக்கலாகையால் தாமதங்கள் ஏற்படுவதாக, எவ்வாறாயினும் வெற்றிடங்களை விரைவில் நிரப்புதல், அங்கீகரிக்கப்படாத பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல், அங்கீகார ஆளணியினரை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல், பதவி அங்கீகார அளவை விஞ்சி சேவை தளங்களிற்கு ஆளணியை மிகையாக இணைக்காதிருத்தல், அவ்வாறு இணைக்கப்பட்டு இருப்பின் அப் பதிவிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல், ஏதேனும் சேவை நிலையங்களிற்கு பதிவி அங்கீகரிக்கப்படாது ஆளணியினரை இணைத்திருந்தால் அப் பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல், வருடாந்த இடமாற்றம் செய்யும் போது மிகை வெற்றிடங்கள் தொடர்பாக கவனத்திற் கொண்டு ஆளணியினரை இணைத்தல் போன்ற செயற்பாடுகளை அங்கீகார ஆளணியினரை விஞ்சாது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை இணைக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பின்பற்றுவதற்காக உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, எவ்வாறாயினும் நிகழ்காலம் முதல் நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக பதவிகளிற்காக ஆட்சேர்ப்பதனை மட்டுப்படுத்தியுள்ளதாக. | |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்பித்த தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு 02 வைத்தியசாலைகளில் 03 நிபுணத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்கள் மிகையாக காணப்படும் போது 12 வைத்தியசாலைகளில் 15 நிபுணத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்களின் வெற்றிடங்களும், 13 வைத்தியசாலைகளில் 20 நிபுணத்துவ பல் மருத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்கள் மிகையாக காணப்படும் போது 24 வைத்தியசாலைகளில் 97 நிபுணத்துவ பல் மருத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்களின் பற்றாக்குறையும், 5 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் வைத்திய நிர்வாக (சிரேஷ்ட தரம்) 05 அலுவலர்கள் மிகையாக இருக்கும் போது 40 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் வைத்திய நிர்வாக (சிரேஷ்ட தரம்) 43 அலுவலர்கள் பற்றாக்குறையும், 23 வைத்தியசாலைகளில் 146 நிபுணத்துவ வைத்தியர்கள் மிகையாக இருக்கும் போது, 38 வைத்திசாலைகளில் 156 நிபுணத்துவ வைத்தியர்களின் பற்றாக்குறையும், 21 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 282 வைத்திய அலுவலர்கள் மிகையாக இருக்கும் போது 89 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில 1613 வைத்திய அலுவலர்களின் பற்றாக்குறையும் நிலவின. இங்கு நிபுணத்துவ வைத்தியர்கள், சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 20 உம், கண்டி தேசிய வைத்தியசாலையில் 15 உம் கொழும்பு தேசிய | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வைததிசாலையில் 14 உம் குருணாகலை போதனா வைத்தியசாலையில் 16 உம் மிகையாக சேவையில் ஈடுபடுத்தி இருந்ததுடன் சுகாதார அமைச்சிற்கு அங்கீகார பதவிகள் இருக்காத போதும் 18 பேர்களை மிகையாக சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர். அவ்வாறே சுகாதார அமைச்சிற்கு அங்கீகார் வைத்திய அலுவலர்கள் எண்ணிக்கையை விட வைத்திய அலுவலர்கள் 61 மிகையாக சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர். | | |
| (இ) | சிரேஷ்ட உயிரியல் வைத்திய பொறியியலாளர் 03 பதவிகளும், அணு உயிரியல் நிபுணத்துவ 02 பதவிகளும், பெறுகைகள் நிபுணத்துவ 04 பதவிகளும் வெற்றிடமாக இருந்ததுடன், உயிரியல் வைத்திய பொறியியலாளர் பதவிக்காக அங்கீகார எண்ணிக்கை 28 ஆனதுடன் அவற்றில் 13 உம், 59 பௌதீக நிபுணத்துவ பதவிகளில் 21 உம், 29 ஆராய்ச்சி அலுவலர் பதிவிகளில் 20 உம் ஆக வெற்றிடமாக இருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | அங்கீகாரம் உளவியலாளர் 07 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இதனுள் அங்கொட தேசிய உளவியல் சுகாதார நிறுவனத்திற்காக அங்கீகார 04 பதவிகளும் வெற்றிடமாக காணப்படுவதும் விசேடமானதாகும். அவ்வாறே ஊனமுற்றோர் தொழிநுட்ப களைஞர் 15 அங்கீகார் பதிவியில் 13 உம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இவற்றில் ராகம புனர்வாழ்வு வைத்தியசாலைக்கு இணைக்கப்பட் 09 பதவிகளுமே வெற்றிடமாக காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2017 நவம்பர் 07 திகதி அமைச்சிற்கு பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பெயரில் இலங்கை கொள்கைகள் திட்டமிடல் சேவையின் விஷேட தரத்தின் ஒரு பதவிக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அப் பதவி 2023 மார்ச் 25 | இவ் அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்குரிய அநேக நடவடிக்கைகள் சுகாதாரத் துறைக்குரிய நடவடிக்கைகள் ஆவதுடன், அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வைத்திய | பணிகளை வினைத்திறனாக நடாத்திச் செல்ல அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியளவிலும் நிரப்ப நடவடிககை எடுத்திருக்கவில்லை. | அலுவலர்களினால் ஆகுமென, அதனால் பணிப்பாளர் நாயகம் (கொள்கைகள் திட்டமிடல்) பதவி அங்கீகரிக்கப்பட்டு இருந்த போதும், அவ்வாறான பதவிக்கான தேவைப்பாடு இல்லையென அவதானிக்கப்படுவதால் அப் பதவிக்காக அலுவலர் ஒருவரை இணைக்க நடவடிக்கை எடுக்கவில்லையென. | |
| (ஊ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 53 நிறுவனங்களிற்கு இடையில் 28 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சேவையாற்றும் வைத்தியர்களிற்கு 2015 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை வழங்கியிருந்த வருடாந்த இடமாற்றக் கட்டளை 564 இனை 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் செயற்படுத்தி இருக்கவில்லை. அவ்வாறே 6 வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதி அலுவலர்கள், மருந்துவ கலவையாளர் மற்றும் வைத்திய இரசாயனகூட தொழிநுட்ப நிபுணர்கள் ஆகிய சேவைகளிற்கு உரிய அலுவலர்களிற்கு 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை வழங்கியிருந்த வருடாந்த இடமாற்றக் கட்டளை 57 இனை 2021 சனவரி 01 திகதி அளவிலும் செயற்படுத்தி இருக்கவில்லை. | அமைச்சின் கீழ் காணப்படும் வைத்திசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள நிபுணத்துவ வைத்தியர்கள், ஏனைய வைத்தியர்கள் மற்றும் பல்வேறு சேவைகளின் அலுவலர்களின் வருடாந்த இடமாற்றக் கட்டளை செயற்படுத்தப்படுவதாக, ஏதேனும் விஷேட காரணங்களின் மீது அன்றி ஏனைய இடமாற்றங்கள் செயற்படுவதுடன் எதிர்வரும் வருடாந்த இடமாற்றத்தை செயற்படுத்தும் போது இவ்வாறு செயற்படாத இடமாற்றங்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்துமாறு குறித்த அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக. | ஒழுங்கான முறைமை ஒன்றை பின்பற்றி வருடாந்த இடமாற்ற கட்டளை வழங்கப்படுவதால் இந்த அனைத்து இடமாற்ற கட்டளைகளையும் செயற்படுத்த வேண்டும். |
| (எ) | இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த 05 பேர்கள் அமைச்சில் 06 தொடக்கம் 15 வருடங்களாக கடமையாற்றி வருவது அவதானிக்கப்பட்டது. | ஒரே சேவை நிலையத்தில் 06 வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக பணிபுரியும் அலுவலர்களின் தகவல்கள் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | 06 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் குறித்த தகவல்களை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்து அனுப்ப வேண்டியதுடன் இடமாறுதல் கடிதத்தை தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக சமர்பிக்காத மற்றும் அந்த இடமாறுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தரவை இரத்துச் செய்து கொள்ளாது நின்றுள்ளமை தொடர்பாக புலனர்யவு செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொறியியல் சேவையின் 08 அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படாது 06 முதல் 23 வருடங்கள் வரை அமைச்சில் கடமையாற்றி வருவதாக அவதானிக்கப்பட்டது. | இந்த அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் 2022.12.03 திகதி அன்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | இந்த அலுவலர்கள் குறித்த தகவல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |